T. 1739

# MADRAS GOVERNMENT ORIENTAL SERIES

Published under the authority
of the
Government of Madras

*General Editor :*
T. CHANDRASEKHARAN, M. A., L. T.,
Curator, Government Oriental Manuscripts Library,
Madras.

No. LXXI

# வைத்தியக் களஞ்சியம்

# VAIDDIYAK KAḶAÑCIYAM

EDITED

BY

**Dr. C. N. KUPPUSWAMY,** H. P. I. M.,

*Professor, College of Indian Medicine, Madras.*

*(Member, Central Board of Indian Medicine, Madras)*

AND

**Dr. V. S. PARVATHI** L. I. M.,

*Assistant Professor, College of Indian Medicine, Madras.*

---

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY, MADRAS.

**1951**

**Price Rs. 2-8-0**

# INTRODUCTION

The Government of Madras took up for consideration the question of publication of the various manuscripts in different languages on subjects like Philosophy, Medicine, Science, etc., early in May 1948. Important Manuscripts libraries in the Madras Presidency were requested to send a list of unpublished manuscripts with them for favour of being considered by the Government for publication. The Honorary Secretary of the Tanjore Maharaja Serfoji's Sarasvathi Mahal Library, Tanjore, alone complied with this request. This list as well as a similar list of unpublished manuscripts in the Government Oriental Manuscripts Library, Madras, were carefully examined and a tentative selection of manuscripts suitable for publication was made. The Government in their Memorandum No. 34913/48-101 Education, dated 4-4-1949, constituted an Expert Committee with the Curator of the Government Oriental Manuscripts Library, Madras, as the Secretary, for the final selection of manuscripts suitable for printing and for estimating the cost of publication.

The following are the members of the Committee:—

1. Sri T. M. Narayanaswami Pillai, M.A., B.L.,
2. ,, R. P. Sethu Pillai, B.A., B.L.,
3. ,, C. M. Ramachandra Chettiar, B.A., B.L.,
4. ,, R. Krishnamoorthy, (Kalki)
5. Dr. N. Venkataramanayya, M.A., Ph.D.,
6. Sri M. Ramanuja Rao Naidu, M.A., L.T.,
7. ,, V. Prabhakara Sastri.
8. ,, N. Venkata Rao. M. A.,
9. ,, H. Sesha Ayyangar.
10. ,, Masthi Venkatesa Ayyangar, M.A.,

11. Sri M. Mariappa Bhat, M.A., L.T.,
12. Dr. C. Achyuta Menon, B.A., Ph.D.,
13. „ C. Kunhan Raja, M.A., D. Phil.,
14. „ A. Sankaran, M.A., Ph.D., L.T.,
15. Sri P. S. Rama Sastri,
16. „ S. K. Ramanatha Sastri,
17. Dr. M. Abdul Haq, M.A., D.Phil. (Oxon),
18. Afzul-ul-Ulama Hakim Khader Ahamed,
19. Sri P. D. Joshi,
20. „ S. Gopalan, B.A., B.L.,
21. „ T. Chandrasekharan, M.A., L.T.,

With the exception of Sri Masthi Venkatesa Iyengar, and Dr. C. Kunhan Raja, the above members continued to be members of the Expert Committee for 1950-51 also to which the following gentlemen were included in Govt. Memo. No. 7297-E/50—3, Edn., D/-19-5-'50 and Govt. Memo. No. 15875-E/50-4, Edn., d/7-9-'50.

1. Dr. A. Chidambaranatha Chettiar, M.A., Ph.D.,
2. Sri S. Govindarajulu, B.A., B.L., LL.B., Bar-at-law.
3. Capt. G. Srinivasamoorthy, B.A., B.L., M.B., & C.M.
4. Dr. Muhammad Hussain Nainar, M.A., Ph.D.,
5. Sri T. V. Subba Rao, B.A., B.L.,
6. Principal, College of Indian Medicine, Madras.

The members of the Committee formed into Sub-Committees for the various languages, Sanskrit, Tamil, Telugu, Kannada, Malayalam, Mahrathi and Islamic Languages. They met during the month of May, 1949, at Madras and Tanjoré to examine the manuscripts and make a selection. The recommendations of the Committee were accepted by the Govern-

ment and they decided to call these publications as the "MADRAS GOVERNMENT ORIENTAL SERIES," and appointed the Curator, Government Oriental Manuscripts Library, Madras, as the General Editor of the publications.

The following manuscripts were taken up for publication during 1949–50.

"A" FROM THE GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY, MADRAS.

TAMIL

1. Kappal Śāttiram.
2. Anubhava Vaidya Murai
3. Āttāṉakōlāhalam
4. Upadēśa Kāṇḍam
5. Cōlaṉ Pūrva Paṭṭayam
6. Koṅga Dēśa Rājākkaḷ
7. Sivajñāṉa Dīpam

TELUGU

1. Auṣadha Yōgamulu
2. Vaidya Nighaṇṭu
3. Dhanurvidyā Vilāsamu
4. Yōga Darśana Viṣayamu
5. Khaḍga Lakṣaṇa Śirōmaṇi

SANSKRIT

1. Viṣanārāyaṇīyam
2. Bhārgava Nāḍikā
3. Hariharacaturaṅgam
4. Brahmasūtravṛtti—Mitākṣarā
5. Nyāyasiddhānta Tattvāmṛtam

## MALAYALAM

1. Garbha Cikitsā
2. a. Vāstulakṣaṇam
   b. Śilpaviṣayam.
3. Mahāsāram
4. Kaṇakkusāram
5. Kriyākramam
6. Kaṇakkusāram-Bālaprabōdham.

## KANNADA

1. Lōkōpakāra
2. Raṭṭamata
3. Aśvaśāstram
4. Vividha Vaidya Viṣayagaḷu
5. Saṅgītaratnākara
6. Sūpaśāstra.

## ISLAMIC LANGUAGES

1. Jamil-Al-Ashya
2. Tibb-E-Faridi
3. Tahqiq-Al-Buhran
4. Safinat-Al-Najat

---

## "B" FROM THE TANJORE MAHARAJA SERFOJI'S SARASVATHI MAHAL LIBRARY, TANJORE

## TAMIL

1. Sarabhēndravaidya Muṟai (Diabetics)
2. Do (Eyes)
3. Agastiyar 200
4. Koṅkaṇarśarakku Vaippu
5. Tiruchiṟṟambalakkōvaiyār with Padavurai

6. Kālacakram
7. Tāḷasamudram
8. Bharatanāṭyam
9. a. Pāṇḍikēli Vilāsam Nāṭakam
   b. Pūrūrava Cakravarti Nāṭakam
   c. Madana Sundara Vilāsa Nāṭakam
   d. Percy Macqueen's Collection in the Madras University Library on Folklore.
10. Rāmaiyan Ammānai
11. Tamiḷ Pāṭalkaḷ including Paṭṭiṇattār Veṇbā and Vaṇṇaṅkaḷ

TELUGU

1. Kāmandakanītisāramu
2. Tāḷadaśāprāṇapradīpikā
3. a. Raghunātha Nāyaka Abhyudayamu
   b. Rājagōpāla Vilāsamu
4. Rāmāyaṇamu by Kaṭṭa Varadarāju

MAHRATHI

1. Nāṭyaśāstra Saṅgraha
2. a. Book of Knowledge
   b. Folk Songs.
   c. Dārā Darun Vēṇi Paddhati
   d. Aśvāsa Catula Dumaṇi
3. a. Pratāpasimhendra Vijaya Prabandha
   b. Sarabhēndra Thīrthāvaḷi
   c. Lāvaṇi
4. Dēvēndra Kuṟavañji
5. Bhakta Vilāsa
6. Slōka Baddha Rāmāyaṇa

## SANSKRIT

1. Aśvaśāstra with Tricolour Illustrations
2. Rājamṛgāṅka
3. Cikitsāmṛtasāgara
4. Āyurvedamahodadhi
5. Gīta Govinda Abhinaya
6. a. Coḷacampū
   b. Sāhendra Vilāsa
7. Dharmākūtam - Sundara Kāṇḍa
8. Jātakasāra
9. Viṣṇutattvanirṇaya Vyākhyā
10. Saṅgīta Darpaṇa
11. Bījapallava

During 1950, only the Sub—Committees for TAMIL, TELUGU and KANNADA met in the month of July 1950 at Madras.

The following books were taken up for publication in the various languages in 1950–51.

## TAMIL

| | | |
|---|---|---|
| 1. Daṭcanāyanār–Vaidya-Aṭṭavaṇai. | ... | Medicine. |
| 2. Vaiddiyak Kalañciyam | ... | " |
| 3. Anubhavavaidyam. V. 3 | ... | " |

## TELUGU

| | | |
|---|---|---|
| 1. Saivācārasaṅgrahamu. | ... | Philosphy. |
| 2. Anubhava Vaidyamu. | ... | Medicine |
| 3. Abhinayadarpaṇamu. | .... | Dance. |

## SANSKRIT

| | | |
|---|---|---|
| 1. Ārogyacintāmaṇi. | ... | Medicine. |
| 2. Tatvasāra with Ratnasāriṇi. | ... | Philosophy. |
| 3. Sutrārthāmṛta Lahari. | ... | " |

## MALAYALAM

1. Aśvacikitsa. .... Medicine.
2. Phalasārasamuccaya. ... Astrology.

## KANNADA

1. Vaidya Sāra Saṅgraha. ... Medicine.

It is hoped that the publication of most of the important manuscripts will be completed within the next four years.

Some of the manuscripts taken up for publication are represented by single copies in the Library and consequently the mistakes that are found in them could not be corrected by comparing them with other copies. The editors have, however, tried their best to suggest correct readings. The wrong readings are given in round brackets and correct readings have been suggested in square brackets. When different readings are found, they have been given in the foot-notes except in the case of a few books, in which the correct readings have been given in the foot-note or incorporated in the text itself.

The Government of Madras have to be thanked for financing the entire scheme of publication although there is a drive for economy in all the departments. My thanks are due to the members of the Expert Committee who spared no pains in selecting the manuscripts for publication. I have also to thank the various editors, who are experts in their own field, for readily consenting to edit the manuscripts and see them through the press. The various presses that have co-operated in printing the manuscripts in the best manner possible also deserve my thanks for the patience exhibited by them in carrying out the corrections made in the proofs.

The present work is based on a palm-leaf manuscript with Government Oriental Manuscripts Library described under D. No. 1975. The size of the manuscript is 9½ × 1 1/8 inches. The work contains 288 pages having 6 lines in a page.

This manuscript explains in prose and poetry, the process of preparing certain medicinal oils, powders, electuaries etc., and the diseases.

This work is also called 'Viśvāmitra Vākkiyam' and is probably based on a medical treatise attributed to the sage Viśvāmitra.

There is also another paper manuscript which was restored in the year 1934-35 from the above said manuscript. This manuscript is described under R. No. 1048. The size of it is 11 × 9½ inches. It contains 186 pages having 20 lines in a page.

Reference is to be made to the good work done by Sri V. R. Kalyanasundaram, Pandit, of this Library for going through the press-copy, especially the verses and reading through the proof.

Government Oriental Manuscripts Library, Madras.

T. CHANDRASEKHARAN,
*General Editor,*
*Madras Govt. Oriental Series.*

# PREFACE

Of the various countries of the world, the Tamil country is known to have existed long before any other country was known. From its early days, men of this land, were not only highly civilized but also well advanced in all branches of Science and art, especially in Chemistry and Medicine. These two were so advanced, not merely to convert base metals as Iron etc., into a noble metals as Gold and keep the body healthy to live long, but also to achieve a better object than the worldly pleasure.

We hear now, from Modern Scientists, that to blow out one atom from Mercury results in transformation of Gold and that its cost of blowing out an atom from Mercury cost more than the Gold obtained thereby.

Whereas we hear from our Siddhas of Tamil Nad referring to the convertion of the base metals into valuable metal (Gold). Please see—

*" கறுத்த விரும்பே கனகம தானான்*
*மறித்திரும் பாகா வகையது போலக்*
*குறித்தவப் போதே குருவருள் பெற்றான்*
*மறித்துப் பிறவியில் வந்தணு கானே "*

—*திருமூலர் திருமந்திரம்.*

"The Iron that is black, and has been converted into Gold can never change again into Iron. Likewise a student who had the blessing of his Guru will never be reborn."

*" பரிசனவேதி பரிசித்த தெல்லாம்*
*வரிசை தரும் பொன் வகையாகு மாபோற்*
*குருபரி சித்த குவலய மெல்லாந்*
*திரிமலம் தீர்ந்து சிவ கதியாமே"*

*—திருமூலர் திருமந்திரம்.*

"All that have been touched by an alchemist are converted into Gold; so also anybody who has a touch of Good Guru will be cleared of three *Malas* in him and will attain the *Sivagati (Mukti)*."

*" வெந்தழலி னிரதம்வைத் தைந்துலோ கத்தையும்*
*வேதித்து விற் றுண்ணலாம்"*

"You can, with Mercury convert all the five metals into Gold; sell and eat and live thereby."

*" மணிமந்திர மாதியால் வேண்டுசித்தி*
*யாவதில்லையோ"*

"By *Rasamani* (Mercury Ball) and *Mantiram* you can get all Siddhis."

*" இரச குளிகையாலே நவலோக மெல்லாம்*
*வசமா நினைத்த தெல்லாம் வாய்க்கும்—நிசமா*
*யுரைத்தேனிப் பூமியிலே யும்பர் நிகராகி*
*யிருப்பா ரினிது மொழியில்"*

"You can live happily in this world even as an Angel (*Deva*) in heaven, with a *Rasakulikai*, by converting all the nine metals into Gold and can get anything you want."

This art and science of Tamils were recorded in those days either on stone or on palmyra leaves so that the art and science of theirs might be of use to future generations. As time passed on, with natural and political changes, many of the records have either been washed away by *Pralayams* (floods) or destroyed by insects or have been knocked away by foreigners.

What were left behind, though very few, have been collected by Public bodies and some of them remain scattered in the remote parts of Tamil Nad with private individuals of the family who were practising that profession of art or science.

The collections made of our old and valuable literatures by the Public bodies of the Madras Oriental Library and the Sarasvathi Mahal Library of Tanjore are being now, periodically published by the impetus and financial help given to them by the Government of Madras to whom South India will ever be indebted.

The other collections of intrensic value still remain in the most remote parts of South, unseen and unheard of. Mention is made in literatures available to us now, about extracting of *Sattu* (essence) from *Abrakam* (Mica) etc., synthetic drugs, chemical compounds as *Vaippu Sarakus* etc.. (வைப்பு சரக்குகள்). But those literatures have not still seen the press. If the Government Oriental Manuscripts Library of Madras and the Sarasvathi Mahal Library of Tanjore, are to go on publishing the valuable collections of South Indian Chemical and Medical Science, they are sure to enrich the South Indian Science and art.

Our object in writing this preface is more to enthuse the owners of the medical literature to have them published by themselves or to have them published by the Government Oriental Library or other public bodies and thereby keep alive the science of Siddhas.

Coming to this work Vaiddiya-k-kaḷañciyam *(Sarakkuvaippu Maruntu Muraigal,)* we can commend to the public that this is one of the rare collections. This book is in two parts though the total number of pages is not more than one hundred. The first part

deals with the preparation of rare Arsenical compounds, which are not available in the market and some metallic salts as Copper sulphate etc. The process of manufacturing artificial pearl, coral, Gorocanai, Kasthuri (Musk), scented materials etc., is also described in this book.

In the second part of this work, there are small and big prescriptions of value. The author of the work whose name is not known, claims that many of those prescriptions have been tried by him and found very useful and he calls them *Kaikaṇḍatu* (கைகண்டது).

From the combination of drugs we can to a certain extent assure the public that the contents of this work are valuable collections of prescriptions to be tried.

We take this opportunity of requesting the Curator of the Government Oriental Manuscripts Library and the Curator of Serfoji's Sarasvathi Mahal Library of Tanjore to take special interest to search for manuscripts on *Sarakku Vaippu*, *Panda Vaippu Maruntu Akarati*, *Nikandu*, *Nadi Nidanam* and have them published at an early date.

Madras, 31-1-1951.

C. N. KUPPUSWAMY.
V. S. PARVATHI.

# விஷய அட்டவணை

## முதற் பாகம்

## (சரக்கு வைப்பு)


| | பக்கம் |
|---|---|
| அறுபத்து நான்கு சரக்குகளிலிருந்து சத்து எடுக்கும் முறை ... | 7 |
| உருக்குத் தொட்டிப் பாடாண வைப்பு ... | 2 |
| எருமைக்கொல்லி பாடாண வைப்பு ... | 1 |
| கத்தரிக்காய் கறி பண்ண | 26 |
| கரித்தொட்டி பாடாண வைப்பு ... | 4 |
| கறிவகை ... | 24 |
| கற்பூர மெழுகு வைப்பு | 15 |
| கஸ்தூரி வைப்பு ... | 14 |
| காக்கை மூக்குத் தொட்டிப் பாடாண வைப்பு | 4 |
| குங்குமப்பூ வைப்பு ... | 14 |
| குங்கும மணி வைப்பு ... | 20 |
| கெவுரி பாடாண வைப்பு | 12 |
| கோமேதக மாணிக்க வைப்பு ... | 21 |
| சந்தண வில்லை வைப்பு | 18 |
| சமையல் செய்யு முறை | 24 |
| சம்பாரக் கூட்டுக்கறி வைப்பு ... | 25 |
| சம்பாரப்பச்சடி பண்ண | 27 |
| சவ்வாது வைப்பு ... | 15 |
| சாம்பிராணிப் பதங்கத் தைல வைப்பு ... | 13 |
| சிவப்புக்கெம்பு மாணிக்க மணி வைப்பு ... | 21 |
| சுத்த கருப்பு மாணிக்க மணி வைப்பு ... | 22 |
| செப்புத்தொட்டி பாடாண வைப்பு ... | 1 |
| திருச்சூரண வைப்பு ... | 15 |
| துருசு வைப்பு ... | 8 |
| நல்லஆணிமுத்து வைப்பு | 10 |
| நவச்சார வைப்பு ... | 11 |
| நவரத்தினத்தில் வெள்ளை மணி வைப்பு | 19 |
| நாரைமூக்குத் தொட்டிப் பாடாண வைப்பு ... | 5 |
| நீலக்கதம்ப வைப்பு ... | 17 |
| நீல மாணிக்கம் பண்ணு முறை ... | 21 |
| பவழ இரத்தின வைப்பு | 23 |
| பவழ வைப்பு ... | 9 |
| பறங்கித் தொட்டிப் பாடாண வைப்பு ... | 3 |
| புட்பராக மணி வைப்பு | 23 |
| புத்தொட்டுத் தொட்டிப் பாடாண வைப்பு | 2 |
| மரகதப்பச்சைக் கதம்ப வைப்பு ... | 16 |
| மரகதப்பச்சை வர்ண வைப்பு ... | 20 |

| பக்கம் | | | பக்கம் |
|---|---|---|---|
| மாம்பழத் தொட்டிப் பாடாண வைப்பு ... | 12 | வச்சிர செந்தூர வைப்பு ... | 6 |
| முகமினுக்கி வைப்பு ... | 11 | வச்சிர மணி வைப்பு ... | 23 |
| ரசகற்பூர வீரவைப்பு ... | 5 | வயிடூரிய மணி வைப்பு ... | 22 |
| ரசசெந்தூர வைப்பு ... | 6 | வெங்கலத் தொட்டிப் பாடாண வைப்பு ... | 3 |
| வங்காளச் சௌவீர வைப்பு ... | 13 | வெள்ளைப் பாடாண வைப்பு ... | 11 |
| வங்காளப் பச்சை துருசு வைப்பு ... | 9 | | |


## இரண்டாம் பாகம்

## (மருந்து செய் முறை)


| பக்கம் | | | பக்கம் |
|---|---|---|---|
| அக்கினி குமாரன் ... | 32 | அண்டவாதத்திற்கு | 31, 35, 37, 44 |
| அக்கினி குமரன் சூரணம் ... | 92 | அண்டவாதம் ஆறுக்கும் குணம் ... | 29 |
| அக்கினி குமாரன் செந்தூரம் ... | 33 | அண்டவாதம் ஆறுக்கும் பெயர் ... | 29 |
| அக்கினிக்கட்டு ... | 28 | அண்டவாதம் ஆறுக்கும் மருந்து ... | 30 |
| அக்கினித் தம்பனம் ... | 42 | அண்ட வாயுவுக்கு ... | 47 |
| அசன வில்வாதி எண்ணெய் ... | 40 | அண்ணுக்குப்புத் துக்கு | 39 |
| அசன வில்வாதித்தைலம் | 33 | அதிசார குளிகை ... | 28 |
| அசீரணத்திற்கு ... | 47 | அதிசாரக் கிராணிக்கு ... | 95 |
| அசுவகந்தி சூரணம் ... | 28 | அதிசார சுரத்திற்கு ... | 38 |
| அஞ்சனம் ... | 36 | அதிசாரத்திற்கு ... | 37 |
| அஞ்சனவுண்டை ... | 35 | அதிசார வாயு குணம் ... | 38 |
| அடிபட்ட காயத்திற்கு | 46, 53 | அத்தி சுரத்திற்கு ... | 37 |
| அட்ட குன்ம வாயுவுக்கு | 43 | அமுக்கருக்கற்பம் ... | 33 |
| அட்ட சூரணம் ... | 39 | அமுத எண்ணெய் ... | 43 |
| அண்டங் கீழிறங்கினதற்கு ... | 45 | அமுதக்கடுகு ... | 43 |

| | பக்கம் |
|---|---|
| அரக்குத்தைலம் | 36, 44 |
| அரணை கடிக்கு | 46, 51 |
| அரிதாரச் செந்தூரம் | 44, 46 |
| அரிதார பற்பம் ... | 32 |
| அருவருப்பிற்கு ... | 46 |
| அரையாப்பிற்கு | 37, 39, 41, 45, 46, 47 |
| அரையாப்பு வீக்கத்திற்கு ... | 45 |
| அலிகு கட்டு திறக்க ... | 44 |
| அறு சோகைக்கு ... | 32 |
| அறு பெறலுக்கு ... | 47 |
| அனலை மாற்ற ... | 42 |
| அனல் கழிச்சலுக்கு ... | 43 |
| அன்னபேதிக் குளிகை... | 41 |
| ஆசனக் கடுப்பிற்கு ... | 59 |
| ஆண்பிள்ளை கோபம் அமர ... | 59 |
| ஆரோக்கிய சூரணம் ... | 58 |
| ஆறுத புண்ணிற்கு | 39, 58 |
| ஆனந்த வயிரவன் குளிகை | 58, 59 |
| ஆனந்த வயிரவன் மாத்திரை ... | 93 |
| ஆனந்த வாயுவிற்கு | 56, 57, 59 |
| இரச செந்தூரம் ... | 81 |
| இரத்த பித்தத்திற்கு ... | 80 |
| இரத்தப் பிரமேகத்திற்கு ... | 45 |
| இரத்த மூலத்திற்கு ... | 87 |
| இரத்தம் கக்கலுக்கு ... | 78 |
| இருமலுக்கு | 52, 79, 80 |
| இருமலுக்கு (சிறுபிள்ளைகள்) ... | 69 |
| இளைப்பு நோய்க்கு ... | 73 |
| ஈளைக்கு | 66, 79, 80 |
| உட்டிணத்திற்கு ... | 60 |
| உப்புக் குழம்பு ... | 43 |
| உள் குத்துக்கு ... | 47 |
| எரிகுன்மத்திற்கு ... | 49 |
| எலி ஓட்ட ... | 71 |
| எலி கடிக்கு | 68, 71 |
| ஏறு வாதத்திற்கு ... | 59 |
| ஒரு தலை வலிக்கு ... | 71 |
| ஓம கற்பம் ... | 42 |
| கடுப்புக்கு ... | 53 |
| கட்டுவாதி மாத்திரை ... | 94 |
| கணைக்கு ... | 50 |
| கணைக்கு (குழந்தைகள்) | 64, 67 |
| கண் கலக்கத்திற்கு ... | 72 |
| கண் கழுவ நீர் ... | 64 |
| கண் சிவப்பிற்கு (அடியால்) ... | 63 |
| கண்டமாலைக்கு | 46, 71 |
| கண் நோய்களுக்கு | 54, 55, 56 |
| கண் புழுவிற்கு ... | 66 |
| கண் பூவிற்கு ... | 70 |
| கண் மை ... | 30 |
| கரிசிலாங்கண்ணித் தைலம் ... | 91 |
| கல்லடைப்பிற்கு ... | 65 |
| கன்னபாசிக்கு (குழந்தைகள்) | 60, 63 |
| காதில் சீழ் வடிதலுக்கு | 72 |
| காதில் தினவிற்கு ... | 72 |
| காதில் பூச்சிக்கு ... | 72 |
| காதின் புழு விலக ... | 72 |

| | பக்கம் |
|---|---|
| காந்தரச பற்பம் ... | 60 |
| காமாலைக்கு | 52, 65, 67 |
| கால் கை முடங்கு வாதத்திற்கு ... | 53 |
| கிரந்திக்கு ... | 45 |
| கிரந்திப் புண்ணுக்கு ... | 61 |
| கிராணிக்கு ... | 72 |
| கிரிப்புழு விழ ... | 63 |
| கிரிப்பூச்சிக்கு ... | 62 |
| குக்கில் நெய் ... | 32 |
| குடல் வாதத்திற்கு ... | 59 |
| குதிரை வலிப்பிற்கு ... | 35 |
| குத்துப்பட்டதற்கு ... | 46 |
| குழி தோஷத்திற்கு ... | 66 |
| குளிர் காய்ச்சலுக்கு ... | 72 |
| குளிர் சுரத்திற்கு ... | 57 |
| குளிர் தோஷத்திற்கு ... | 62 |
| குன்மத்திற்கு ... | 51 |
| கொள்ளைக் கழிச்சலுக்கு | 68 |
| கோரோசனைக் குளிகை | 47 |
| சகல காய்ச்சலுக்கும் ... | 49 |
| சகல நஞ்சுகளுக்கும் | 63, 90 |
| சகல மூலத்திற்கும் ... | 87 |
| சங்கன்வேர்த் தைலம் ... | 91 |
| சந்திர சேகரக் குளிகை | 63 |
| சர்வக் கிரந்திகளுக்கும் | 60 |
| சன்னிக்கு | 46, 52, 61, 70, 73, 93 |
| சன்னி பதினெட்டுக்கு ... | 49 |
| சாதிலிங்க மெழுகு ... | 51 |
| சாவல் கட்டு வெல்ல ... | 62 |
| சிரங்குக்கு ... | 66 |
| சிறுநீரிழிதற்கு (அடிக் கடி) ... | 65 |
| சிறு நீர் மெத்தப்போகிறதற்கு ... | 65 |
| சிறு பிள்ளைகளின் பல பிணிகளுக்கு ... | 51 |
| சுரங்களுக்கு | 77, 93 |
| சுரத்திற்கு (சிறு பிள்ளைகள்) ... | 73 |
| சுரம் அறுபத்துநாலுக்கு | 49 |
| சுராங்குச மாத்திரை | 92, 93, 94 |
| சூலைக் கழிச்சலுக்கு ... | 50 |
| சூலைக்கு | 50, 53 |
| செத்தவர்களை எழுப்ப ... | 31 |
| சேத்தும சுரத்திற்கு ... | 52 |
| சோகைக்கு | 37, 66 |
| தண்டு கட்டுக்கு ... | 73 |
| தண்ணீர் தாகத்திற்கு ... | 63 |
| தலை நோய்க்கு ... | 73 |
| தலை நோவுக்கு ... | 66 |
| தலை முடி புழு வெட்டிற்கு ... | 69 |
| துடை வாழைக்கு ... | 46 |
| தூதுவளை கிருதம் ... | 92 |
| தேள் விஷம் இறங்க ... | 90 |
| தைல வகை ... | 86 |
| தொண்டை நோய்க்கு ... | 41 |
| நசியம் ... | 35 |
| நஞ்சு கடிகளுக்கு ... | 83 |
| நடுக்குக் காய்ச்சலுக்கு ... | 70 |
| நட்டுவாக்காலி நஞ்சிற்கு ... | 83 |
| நல்ல பாம்புக்கு ... | 74 |
| நளிறுக்கு ... | 61 |
| நீரடைப்பிற்கு ... | 65 |

| | பக்கம் |
|---|---|
| நீரதிர்ச்சியாய்ப் போகிற தற்கு ... | 65 |
| நீரிழிவிற்கு ... | 64 |
| நெஞ்சு வலிக்கு ... | 80 |
| பக்க நோய்க்கு ... | 52 |
| பயித்தியத்திற்கு ... | 48 |
| பல்லசைவிற்கு ... | 70 |
| பல்லரணைக்கு ... | 70 |
| பல் வலிக்கு ... | 73 |
| பவித்திரத்திற்கு ... | 45 |
| பாண்டுவிற்கு | 37, 39 |
| பாம்புக் கடியால் செத்த வர் பிழைக்க ... | 48 |
| பாம்பு சாக ... | 74 |
| பாம்பு நஞ்சுக்கு ... | 74 |
| பாம்பு பிழைக்க ... | 74 |
| பால சஞ்சீவி மாத்திரை | 94 |
| பிசாசு ஆடாமல் நிற்க... | 74 |
| பித்தங்கக்க ... | 68 |
| பித்த சுரத்திற்கு ... | 48 |
| பித்தத் தலை கிறுகிறுப் புக்கு ... | 67 |
| பித்தத் தலைச்சுற்ற லுக்கு ... | 65 |
| பித்தத்திற்கு ... | 66 |
| பித்த நோய்களுக்கு ... | 74 |
| பித்தம் நாற்பதுக்கு ... | 48 |
| பித்த வாயுவிற்கு ... | 67 |
| பிரமேகத்திற்கு ... | 53 |
| பிள்ளை பிறக்க ... | 75 |
| பிள்ளையுண்டாக ... | 74 |
| பிறவீச்சிற்கு ... | 47 |
| புண்ணிற்கு ... | 68 |
| புண் புரைக்கு | 70, 75 |

| | பக்கம் |
|---|---|
| புண் புழுக்கள் விழ ... | 69 |
| பெரு நோய்க்கு ... | 42 |
| பேதிக்கு ... | 62 |
| பேய்நாய் கடிக்கு ... | 75 |
| பேய் விலக | 49, 71 |
| பொன்னுங்கண்ணி கிருதம் ... | 92 |
| மகாகோடாசுழிமாத் திரை ... | 95 |
| மகோதரம் போன்ற தற்கு ... | 39 |
| மஞ்சட் பிரமேகத்திற்கு | 45 |
| மஞ்சள் காமாலைக்கு ... | 66 |
| மஞ்சள் காமாலைக்கு ... | 75 |
| மஞ்சள் சோகைக்கு ... | 68 |
| மண்டை நோவுக்கு ... | 75 |
| மல்லுக்கட்ட ... | 62 |
| மாட்டுப் பிணிக்கு ... | 61 |
| மாதவிடாயில்லாமைக்கு | 48 |
| மாதவிடாயில்லாமைக்கு (பிள்ளையில்லாமல்)... | 74 |
| மாலைக்கண்ணிற்கு | 60, 75 |
| முகக்கருப்பு வாங்க ... | 62 |
| முடக்கு வாதத்திற்கு ... | 52 |
| முலை எழும்ப ... | 80 |
| முலைப்பால் சுரக்க ... | 75 |
| மூட்டைப்பூச்சி போக... | 76 |
| மூர்க்கமான பெண்களை ஒடுக்க ... | 77 |
| மூலக்கடுப்பில் இரத்தம் விழுதற்கு ... | 76 |
| மூலக்கடுப்புக்கு ... | 78 |
| மூலம் கூண்டோடு விழ | 77 |
| மூலம் விழ ... | 77 |

| | பக்கம் |
|---|---|
| மேகம் 21-க்கு ... | 68 |
| ரச குளிகை ... | 76 |
| ரச முறிய ... | 80 |
| ருது ஆக ... | 80 |
| வங்க பற்பம் ... | 76 |
| வஞ்சனை சூனியந்தீர ... | 76 |
| வயிற்றுக் கடுப்புக்கு ... | 67 |
| வயிற்றுக் கடுப்புக்கு | 69, 70, 78 |
| வயிற்றுக் கடுப்புக்கு (பிள்ளைகள்) ... | 69 |
| வயிறறுக் கட்டிக்கு ... | 76 |
| வயிற்றுக் கழிச்சலுக்கு | 50, 62 |
| வயிற்று வலிக்கு | 63, 69, 70 |
| வயிற்றெரிவிற்கு | 69, 78 |
| வழக்கு வெல்ல ... | 62 |
| வாதக் கரப்பானுக்கு ... | 52 |
| வாத சுரத்திற்கு ... | 52 |
| வாதத்திமிருக்கு ... | 52 |
| வாதத்திற்கு | 52, 53 |

| | பக்கம் |
|---|---|
| வாத நோய்க்கு ... | 51 |
| வாந்திக்கு (சிறு பிள்ளைகள்) ... | 73 |
| வாயில் வரும் சகல வியாதிக்கும் ... | 39 |
| வாயுவிற்கு | 67, 78 |
| விந்து கட்ட ... | 88 |
| விப்புருதிக்கு ... | 46 |
| விரேசன முறை ... | 83 |
| வில்வத் தைலம் ... | 91 |
| வில்வாதி லேகியம் ... | 81 |
| வீக்கத்திற்கு | 39, 69 |
| வீரிய விருத்திக்கு | 82, 88, 90 |
| வெட்டிவேர்த்தைலம் ... | 91 |
| வெட்டுப் புண்ணிற்கு ... | 67 |
| வெந்த புண்ணிற்கு ... | 67 |
| வெள்ளைக்கு | 57, 61 |
| வெள்ளைக்கு (பெண்கள்) ... | 64 |
| வெள்ளெழுத்துக்கு ... | 64 |

## பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 6 | 23 | குப்பிவியில் | குப்பியில் |
| 11 | 9 | சூரியரரை | சூரியரை |
| 13 | 27 | கேப்பை | கோப்பை |
| 16 | 9 | போலேவும் | போலவும் |
| 17 | 15 | நேழுக | நெழுக |
| 24 | 16 | அரைகால் | அரைக்கால் |
| 25 | 8 | சம்பா | சம்பாரம் |
| 29 | 21 | வொட்டது | வொட்டாது |
| 35 | 23 | தளிந்தே | தெளிந்தே |
| 41 | 11 | யிளந்தை | இலந்தை |
| 43 | 31 | பெரியும் | பொரியும் |
| 56 | 28 | வெள்ளுள்ளு, | வெள்ளுள்ளி, |
| 59 | 7 | கைகண்டது | கைகண்டது |
| 66 | 8 | பாலே | பாளே |
| 71 | 19 | திருக்தால் | திருந்தால் |
| 78 | 20 | நாளொன்ருக | நாலொன்ருக |
| 80 | 28 | முரிய | முறிய |

உ

ஸ்ரீராமஜெயம்

# வைத்தியக் களஞ்சியம்

## முதற்பாகம்

---

## (சரக்கு வைப்பு)

### செப்புத்தொட்டி பாடாணவைப்பு

சுத்திச்செய்த செம்புப்பொடி பலம் பதினைந்து, துருசு பலம் ஐந்து, துத்தம் பலம் மூன்று, வெங்காரம் பலம் மூன்று, சீனக் காரம் பலம் நான்கு, நவச்சாரம் பலம் இரண்டு, இந்துப்பு பலம் இரண்டு, கல்லுப்பு பலம் இரண்டு, சுத்திரசம் பலம் ஐந்து, வெடியுப்புச்சுன்னம் பலம் மூன்று, இவைகளை எல்லாம் கலவத்தி விட்டு, மகாவன்னித்திராவகம் விட்டு நாலுசாமமரைத்து உலர்த்தி காசிக்குப்பிக்கு மூன்றுசீலைமண் செய்து அதிலடைத் துக் குப்பிவாய்மூடி வாலுகேந்திரத்தில் பதினாறு சாமம், ஆவாரை விறகு கொண்டு எரித்து சாங்க சீதளமானபின், அதையெடுத்துக் குப்பித்தட்டிப் பார்த்தால் தாம்பிரக்கட்டி உரைந்து நல்ல செம்பு போலே இருக்கும். இது தொழிலுக்கு ஆகும். இதனையே செப் புத்தொட்டி பாடாணம் என்பதாம்.

### எருமைக்கொல்லி பாடாணவைப்பு

துத்தநாகம் பலம் பத்து, மூசையிலிட்டு உலையிலுருகி வரும் போது சுத்தரசம் பலம் பத்து, கொடுக்க வாங்கிக்கொள்ளும். இதுமாவாம், திருநீறுபோலே ஆகும். இதை எடுத்து அம்மியில் வைத்து மகாத்திராவகம் விட்டு அரைக்க மெழுகாகும். இதற்கு மேல் சரக்கு, வெள்ளைப்பாசாணம் பலம் மூன்று, அரிதாரம் பலம் மூன்று, சுத்த அரப்பொடி பலம் ஐந்து, செம்புப்பொடி பலம் ஐந்து, வெண்காரம் பலம் இரண்டு, துத்தம் பலம் இரண்டு, துருசு பலம் இரண்டு, அன்னபேதி பலம் இரண்டு, பூனீறு பலம் இரண்டு, நவச்சாரம் பலம் மூன்று, சனம் பலம் இரண்டரை, சீனம் பலம் மூன்று, வெடியுப்பு பலம் மூன்று இவைகள்

யாவையும் கலவத்திலிட்டு, வன்னித்திராவகம் விட்டு அரைத்து உலர்த்திப் பொடித்ததை இரண்டுபடி பிடிக்கும் குப்பி ஐந்திற்கு சீலை மண்செய்து, மேற்படி அரைத்ததை குப்பியிலிட்டு வாய்மூடி சீலை மண்செய்து உலர்த்தி வாலுகாயெந்திரத்தில் இரண்டு சாமமெரித்து, ஆறிக்குப்பியை உடைத்துப்பார்க்க, எறுமைக்கொல்லித் தொட்டிப் பாடாணமாகும்.

## உறுக்குத்தொட்டிப் பாடாணவைப்பு

சுத்தித்த உருக்கு அறபொடி பலம் பதினைந்து, துருசு பலம் பத்து, காரீயம் பலம் பத்து, துத்தம் பலம் ஐந்து, அரிதாரம் பலம் ஐந்து, கெந்தகம் பலம் எட்டு, நவச்சாரம் பலம் நாலு, வெண்காரம் பலம் நாலு, சீனக்காரம் பலம் எட்டு, ஆகக்கூட்டிக் கலவத்திலிட்டு, மகாவன்னித் திராவகம்விட்டு கொஞ்சம் கொஞ்சம் மருந்திட்டு நாலுசாமமரைத்து உலர்த்திப் பொடியாக்கி ; இரண்டு இரண்டுபடி பிடிக்கக்கூடிய மூன்று குப்பிக்கு வச்சிரச் சீலை மண்பூசி, உலர்த்தி மருந்தை குப்பிகளிலடைத்து வாய்மூடி உலரவைத்து, வாலுகாயெந்திரத்தில் பதினாறு சாமம் ஆவாரை விறகு கொண்டு எரித்து சாங்கசீதளமாகும்படி குளிரவிட்டு எடுத்து, குப்பியையுடைத்துப் பார்த்தால் உறுக்குத்தொட்டிப் பாடாணமாகும்.

## புத்தொட்டுத் தொட்டிப்பாடாணவைப்பு

சுத்திச்செய்த ரசம் பலம் பத்து, வெள்ளீயம் பலம் பத்து, ஈயத்தைச்சட்டியிலுருக்கி ரசத்தைக் கொடுக்க வாங்கிக்கொள்ளும். திருநீறுபோல் பொடியாகும். இதனை கலவத்திட்டு அத்துடன் அரிதாரம் பலம் ஐந்து, கெந்தகம் பலம் நான்கு, நவச்சாரம் பலம் மூன்று, சீனம் பலம் ஆறு, வெண்காரம் பலம் மூன்று, கல்லுப்பு பலம் இரண்டு, இந்துப்பு பலம் இரண்டு, துருசு பலம் மூன்று, துத்தம் பலம் மூன்று, பூனீறு பலம் இரண்டு, அன்னபேதி பலம் இரண்டு, ஆக இவைகள் எல்லாம், கலவத்திலிட்டு மகாவன்னித் திராவகம் நாலுசாமம் கொஞ்சங் கொஞ்சமாக விட்டு அரைத்துக் காயவைத்தபின், நாலுபடி கொள்ளக்கூடிய குப்பிக்குச்சீலை மண்செய்து மேற்படி அரைத்த மருந்தை குப்பியிலடைத்து வாய்மூடி, வாலுகாயெந்திரத்தில் பனிரெண்டு சாமம் நாலுவிதத் தீயால் எரித்து ஆறினபின், குப்பி திறந்து பார்க்க புத்தொட்டுத் தொட்டிப்பாடாணமாகும்.

## பறங்கித்தொட்டிப் பாடாணவைப்பு

சுத்தமான துத்தநாகம் பலம் இரண்டு, உருக்கு முகத்தில் சுத்திச்செய்த ரசம் பலம் பத்து கொடுக்க வாங்கிக்கொள்ளும். வெளுத்துத் திருநீறாகும். இதை கல்வத்திலிட்டு அத்துடன், அரிதாரம் பலம் ஆறு, சுத்திச்செய்த வெடியுப்பு பலம் எட்டு, துருசு பலம் நாலு, சுத்தித்த அறபொடி பலம் ஆறு, நவச்சாரம் பலம் இரண்டு, துத்தம் பலம் மூன்று, வெண்காரம் பலம் மூன்று, அன்னபேதி பலம் மூன்று, கல்லுப்பு பலம் இரண்டு, இந்துப்பு பலம் இரண்டு, சீனக்காரம் பலம் ஆறு. ஆக இவைகளை கலவத்திட்டு, வன்னித்திராவகம் விட்டு நாலு சாமமரைத்து, உலர வைத்துக்கொண்டு, ஐந்து குப்பிகள் இரண்டு இரண்டுபடி பிடிக்கக்கூடியதை எடுத்து, அவைகளுக்கு மூன்று வச்சிரமண்பூசி, உலர வைத்து, அரைத்தமருந்தை நிரப்பி, வாய்க்கு மாக்கல்மூடி வச்சிர மண் மூன்றுஞ்செய்து, உலர்த்தி, வாலுகா இயந்திரத்தில் பனிரெண்டுசாமம் நாலுவிதத்தீயாக, ஆவரம்விரகு கொண்டு எரித்து, சாங்கசீதளம் ஆனபின், குப்பியைத் தட்டிப்பார்த்தால், பறங்கிப் பாடாணமாகும்.

## வெங்கலத்தொட்டி பாடாணவைப்பு

வெள்ளீயம் பலம் பத்து, ஒரு சட்டியிலுருகவிட்டு உருகு முகத்தில், சுத்தரசம் பலம் பத்து கொடுக்க வாங்கிக்கொள்ளும். வெளுத்துத் திருநீறுபோலாகும். இதையெடுத்து கலவத்திலிட்டு, அத்துடன் தாம்பிரம் சுத்திச்செய்த பொடி பலம் பதினைந்து போடவும். இதுசேர்த்து அரைக்கும்போது நவச்சாரம் பலம் மூன்று, அன்னபேதி பலம் மூன்று, துருசு பலம் ஐந்து, துத்தம் பலம் இரண்டு, கல்லுப்பு பலம் இரண்டு, இந்துப்பு பலம் இரண்டு, வெடியுப்பு பலம் ஆறு, சீனக்காரம் பலம் இரண்டு, இவைகளைச் சேர்த்து கல்வத்திட்டு மகாவன்னித்திராவகம் விட்டு நாலுசாமம் விடாமலரைத்து உலர்த்தி, இரண்டுபடி பிடிக்கும் குப்பி ஐந்துக்கும், மூன்றுவச்சிர மண்பூசி, மருந்தை அடைத்து, மாக்கல் கொண்டுமூடி, வச்சிரமண்பூசி வாலுகாச்செய்து, இயந்தரத்தில் பனிரெண்டுசாமம் ஆவரம் விறகுகொண்டு எரித்து, சீதளமானபின்பு குப்பியையுடைத்துப் பார்த்தால் வெங்கலத் தொட்டிப் பாடாணமாகும்.

## காக்கைமூக்குத் தொட்டிப்பாடாணவைப்பு

காரீயம் பத்து பலம் எடுத்து, சட்டியிலிட்டு உருகு முகத்தில் சுத்தித்த ரசம் பலம் பத்துக்கொடுக்க வாங்கிக்கொள்ளும். வெளுத்து திருநீறு போலாகும். இதையெடுத்துக் கலவத்திலிட்டு அரைக்கும்போது, அத்துடன் நீலாஞ்சனக்கல் பலம் பத்து, சுத்திச்செய்த அறபொடி பலம் பத்து, அன்னபேதி பலம் இரண்டு, துருசு பலம் நாலு, துத்தம் பலம் இரண்டு, வெண்காரம் பலம் மூன்று, சீனக்காரம் பலம் ஆறு, கல்லுப்பு பலம் இரண்டு, இந்துப்பூ பலம் இரண்டு, ஊசிக்காந்தம் பலம் நாலு, அரிதாரம் பலம் மூன்று, இவற்றை எல்லாம் உறலிலிட்டு கடப்பாரையாலிடித்துப் பொடியாக்கி கலவத்திலிட்டு மகாஅக்கினி திராவகம் விட்டு நாலு சாமமரைத்து உலர்த்தி ; இரண்டு படி பிடிக்கின்ற குப்பி ஐந்துக்கு வச்சிரமண் சீலேபூசி உலர்த்தி அரைத்த மருந்தை குப்பியில் இட்டு வாய்மூடி மண்செய்து அடைத்து, வாலுகா இயந்திரத்தில் பனிரெண்டு சாமமெரித்து குளிர்ந்த பின்னெடுத்து குப்பியைத் தட்டிப்பார்க்க சாக்கைமூக்குத் தொட்டிப்பாடாணமாகும்.

## கரித்தொட்டி பாடாணவைப்பு

காரீயம் பலம் பதினைந்து கொண்டு சட்டியிலிட்டு உருக்கு முகத்தில் சுத்தித்த ரசம் பலம் பத்து கொடுக்க வாங்கிக்கொள்ளும். ஈயம் நொருங்கும். இதையெடுத்து கலவத்திலிட்டு அரைக்கும்போது அத்துடன் காக்கைநிமிளை பலம் பத்து, நீலாஞ்சனம் பலம் பத்து, அரிதாரம் பலம் ஐந்து, துருசு பலம் ஐந்து, துத்தம் பலம் இரண்டு, நவச்சாரம் பலம் மூன்று, அன்னபேதி பலம் மூன்று, பூனீறு பலம் மூன்று, கல்லுப்பு பலம் இரண்டு, இந்துப்பு பலம் இரண்டு, இரும்பு அறபொடி பலம் பத்து ஆக இவைகளை எல்லாம் அம்மியிலிட்டு மகாத்திராவகம் விட்டு நாலு சாமமரைத்து உலர்ந்தபின் இரண்டிரண்டுபடி பிடிக்கக்கூடிய குப்பிகள் ஐந்திற்கு வச்சிரச்சீலேமண் மூன்றுசெய்து, மருந்தைக் குப்பிகளிலடைத்து வாய்க்கு மாக்கல் கொண்டுமூடி, வச்சிரசீலே மண் செய்து உலரவைத்து வாலுகாயெந்திரத்தில் பன்னிரண்டு சாமமெரித்து, சாங்கசீதளமானல் எடுத்து, குப்பியைத் தட்டிப் பார்க்க நல்லகரித் தொட்டிப்பாடாணமாகும்.

## நாரைமூக்குத்தொட்டிப் பாடாணவைப்பு

வெள்ளீயம் பலம் பதினைந்து, சட்டியில்போட்டு உருக்கு முகத்தில் சுத்தித்த ரசம் பலம் பத்து கொடுக்க வாங்கிக்கொள்ளும். நொருங்கும். இதைக்கலவத்திலிட்டு அத்துடன் துத்தம் பலம் நான்கு, அரிதாரம் பலம் ஆறு, நவச்சாரம் பலம் இரண்டு, வெடியுப்பு பலம் நாலு, சீனிக்காரம் பலம் ஆறு, வெண்காரம் பலம் இரண்டு, துருசு பலம் இரண்டு, அன்னபேதி பலம் இரண்டு, பூனீறு பலம் மூன்று, இந்துப்பு பலம் இரண்டு, இவைகளை எல்லாம் கலவத்திலிட்டு, மகாத்திராவகம்விட்டு நாலுசாமமரைத்து உலரவைத்துக்கொண்டு; ஐந்துகுப்பிகள் இரண்டிரண்டுபடி பிடிக்கக்கூடியதுபோல் எடுத்து வச்சிரச்சீலைமண் மூன்று செய்து உலரவைத்து அரைத்த மருந்தை குப்பியிலிட்டு குப்பி வாய்க்கு மாக்கல்கொண்டுமூடி வச்சிரமண்பூசி வாலுகா இயந்திரத்தில் பன்னிரண்டு சாமமெரித்து சாங்கசீதளமானபின் எடுத்து குப்பியை தட்டிப்பார்த்தால் நாரைமூக்குத்தொட்டிப் பாடாணமாகும் சர்வகாரியத்துக்குமாகும்.

## ரசகற்பூரம் வீரவைப்பு

சுத்தித்த ரசம் பலம் பத்து, கலவத்திலிட்டு அத்துடன் துருசு பலம் பத்து, வறுத்தெடுத்து, ரசத்துடனே கலவத்திலிட்டு மகாத்திராவகம்விட்டு எட்டு சாமமரைக்கப்பொரிந்து நீறு போலே ஆகும். அதற்குப்பின்பு, துத்தம் பலம் இரண்டு, அன்னபேதி பலம் இரண்டு, பூனீறு பலம் இரண்டு, நவச்சாரம் பலம் இரண்டு, வெண்காரம் பலம் இரண்டு, சீனக்காரம் பலம் இரண்டு, இந்துப்பு பலம் இரண்டு, சூடன் பலம் இரண்டு, வெடியுப்பு பலம் இரண்டு, இவைகளைக்கூட்டி கலவத்திலிட்டு வன்னித்திராவகம்விட்டு ஏழுசாமமரைத்து உலர்த்தி ; இரண்டுபடி பிடிக்கக்கூடிய குப்பி எடுத்து அதற்கு மூன்று வச்சிரமண்பூசி குப்பியில் அரைத்தப்பொடிகளைப்போட்டு வாய்மூடி வச்சிரமண்பூசி உலர்த்தி வாலுகாயெந்திரத்தில் பதினாறுசாமம் ஆவாரைவிறகு கொண்டெரித்து, சாங்கசீதளமானபின், குப்பியைத் தட்டிப் பார்க்க வீரமாகும். இப்படி இதற்கு அரைவாசி முந்தின மருந்து சேர்த்து முன்போலே எரித்து இறக்கவும், இப்படி மூன்றுதரம் எரித்து எடுக்கவும். இத்துடன் சுத்தரசம் பலம் பத்து, இந்துப்பு பலம் இரண்டு, கல்லுப்பு பலம் இரண்டு, பூனீறு பலம் இரண்டு,

சீனிக்காரம் பலம் நாலு, வெண்காரம் பலம் இரண்டு இந்த மருந்தெல்லாம் கலவத்திலிட்டு சிறுசெருப்படைச்சாறு விட்டு நாலு சாமமரைத்து உலரவைத்துக் கொண்டு, இரண்டுபடி பிடிக்கக்கூடிய குப்பியெடுத்து அந்தக்குப்பிக்கு மூன்று வச்சிரமண்பூசி உலரவைத்து குப்பியில், அரைத்த மருந்தை அடைத்து, குப்பிவாய் மூடி சீலமண்செய்து உலரவைத்து வாலுகாயெந்திரத்தில் எட்டுச்சாமம் நாலுவிதத்தீயால் ஆவாரம் விறகுகொண்டு எரித்து இறக்கவும். ஆறினபின் தட்டிப்பார்த்தால் நல்ல தேங்காய்க்கீத்துப்போலேயிருக்கும். இது வீரவைப்பாம்.

## ரசசெந்தூர வைப்பு

சுத்தரசம் பலம் பத்து, சுத்தகெந்தகம் பலம் பன்னிரண்டு, துருசு பலம் இரண்டு, வெடியுப்பு பலம் மூன்று, சீனம் பலம் மூன்று, வெண்காரம் பலம் ஒன்றரை, நவச்சாரம் பலம் ஒன்று, கல்லுப்பு பலம் ஒன்று, இவைகளைச்சேர்த்து கலவத்திலிட்டு, சிறுசெறுப்படைச்சாறு நாளொன்று கத்தாழைவேர்ச்சாறு நாளொன்று, அத்திப்பட்டைச்சாறு நாளொன்று, அரசம்பட்டைச்சாறு நாளொன்று ஆக நாலு நாளரைத்து; இரண்டு படி அல்லதுமூன்று படி பிடிக்கக்கூடிய குப்பிக்கு மூன்று சீலைசெய்து மண்பூசி உலர்ந்தபின் மருந்தை குப்பிகளிலடைத்து குப்பிவாய் மூடிசீலை மண்செய்து உலர்ந்தபின் வாலுகா இயந்திரத்தில் ஆவாரம் விறகுகொண்டு எட்டுச்சாமமெரித்து, ஆறியிறக்கி குளிர்ந்ததின் அப்பால், குப்பி தட்டிப்பார்த்தால் நல்ல சந்திரோதயம்போல் இரசசெந்தூரம் குப்பிவியில் படிந்திருக்கும்.

## வச்சிர செந்தூரவைப்பு

கட்டினரசம் பலம் பத்து, கலவத்திட்டு வன்னித்திராவகம் விட்டு அரைக்கவும் சோளப்பொறிபோலே பொறியும் இதற்கு கட்டின நெல்லிக்காய் கெந்தகம் பலம் பத்து, சேர்த்து கடுசங்கார வெடியுப்புச்சுன்னம் பலம் இரண்டு, கட்டின நவச்சாரம் பலம் இரண்டு, கட்டினசீனம் பலம் இரண்டு, கட்டினவெண்காரம் பலம் இரண்டு, கட்டினசாதிலிங்கம் பலம் இரண்டு, அன்னபேதி பலம் இரண்டு, மாங்கிஷபேதி பலம் இரண்டு, கட்டின இந்துப்பு பலம் இரண்டு, கட்டினகல்லுப்பு பலம் இரண்டு, கட்டின துருசு பலம் இரண்டு, கட்டினகற்பூரம் பலம்

இரண்டு, கட்டினஇரசசெந்தூரம் பலம் இரண்டு, கட்டினதுத்தம் பலம் இரண்டு, கட்டினஅரிதாரம் பலம் இரண்டு, கட்டின மனோசிலை பலம் இரண்டு, அரப்பொடி பலம் இரண்டு ஆக இவைகளை எல்லாங்கூட்டி மகாவன்னித்திராவகம் விட்டு அரைக்கவும். உடலின்மீது படாமல் அரைத்து வழித்து உலர்த்தி எடுத்ததை; ஒன்றறைப்படி பிடிக்கக்கூடிய ஐந்து குப்பிகளுக்கு மூன்று வச்சிரச்சீலை மண்செய்து உலர்த்தி, அரைத்த மருந்தை குப்பிக்கு முக்கால்வாசியிட்டு, குப்பிவாய் மாக்கல்லினாலே மூடி, வாய்க்கு வச்சிர மண்ணிட்டு உலரவைத்துக் கொண்டு, அதின் பிறகு ஒரு பெருந்தாளி இருபது வள்ளம் பிடிக்கக்கூடியதும் பெருந்தீயைத் தாங்கக்கூடியதுமான அடிகனத்த ஒருமண் சட்டியை அடுப்பில்வைத்து, அதில் இரண்டு வள்ளங் கல்லுப்பு, இரண்டு வள்ளம்பூனீறு சேர்த்து இடித்து அச்சட்டியில் கனமாகப்பரப்பி, அதற்குமேல் அஞ்சு குப்பியையும் வைத்து மிகுதியாக உள்ள பொடியைக்கொட்டி, குப்பிகளை சிவனாகப்பாவித்து, தூப தீபம் நெய்வேத்தியம் செய்து, சோடசம் பூசித்து, தேவி, வயிரவன், சித்தர் இவர்களுக்கும் மகாபூசைச் செய்து, அக்கினிப்பூசைபண்ணி, ஆவாரம் விறகுகொண்டு பதினாறுசாமம் வடவாக்கினியாக எரித்து, சாங்கசீதமாய்ஆறி பின், குப்பியெடுத்துப் பார்த்தால் பூர்ணசந்திரன் போலேயிருக்கும். இஃது இரக்தசவ்வீரம் எனவழங்கும். இச்சவ்வீரத்தை நவலோகத்தில் ஆயிரத்துக்கொன்று கொடுக்க பதினாறு மாத்துக் காணும். இதினுடைய ஆவிபடலாகாது. இது மகாகொடிய ஆலகால விடம் போன்றது (நஞ்சு).

## அறுபத்துநான்கு சரக்குகளிலிருந்து சத்து எடுக்கும் முறை

துருசு, துத்தம், கெந்தகம், சுரைக்காய்கெந்தகம், ஆக வகைக் குப்பலம் நான்கு, அரிதாரம் நாலு, சாதிஅரிதாரம், பொன்னரிதாரம், வண்ணரிதாரம், தாளகம், மனோசிலை, பவளக்கால்மனோசிலை, மஞ்சள்கெவுரி, இரத்தக்கெவுரி, பறங்கிப்பாடாணம், தொட்டிப்பாடாணம், புத்தொட்டு உருக்குத்தொட்டிப்பாடாணம், ரத்தத்தொட்டிபாடாணம், கல்தொட்டி, வெள்ளைத்தொட்டி, பனங்காய்த்தொட்டி, கரித்தொட்டி, எறுமைக்கொல்லித்தொட்டி, பச்சைத்தொட்டி, மஞ்சள்தொட்டி, வெங்கலத்தொட்டி,

பித்தளைத்தொட்டி, திருப்தொட்டி, குதிரைபல்பாடாணங்கள், எலிப்பாடாணம், உளுந்துபாடாணம், பூனுகம், சாதிலிங்கம், ரச செந்தூரம், ரசகற்பூரம், வெண்காரம், சீனிக்காரம், வெடியுப்பு, வளையலுப்பு, இந்துப்பு, நவச்சாரம், காரீயம், வெள்ளீயம், நாகம் இப்படியான சரக்குகள் அறுபத்துநான்கு சரக்குகளும்; எள்ளு, உளுந்து, அவரை, துவரை, பூனுகம், குன்றிப்பருப்பு, ஏறழிஞ்சில்விரை, எருமைக்கொம்பு, சிறுமீன், கருவாடு, வெள்ளாட்டுக்குளம்பு, வெள்ளாட்டுக்கொம்பு, எறுமைக்குளம்பு, குதிரைக்குளம்பு, கழுதைக்குளம்பு, வெண்காரம், சீனிக்காரம், வெடியுப்பு, கல்லுப்பு, வளையலுப்பு, நவச்சாரம், எவச்சாரம் வகைக்கு முக்கழஞ்சு, கலைக்கொம்பு, யானைத்தந்தம், முசலெலும்பு, பன்றிஎலும்பு, காட்டாமணக்குவிரை, எலியாமணக்கு வித்து, சித்தாமணக்குமுத்து, சிறுதேன்மெழுகு, தேன்விருட்டு, மாட்டுவாலு, தலைமயிர், ஆட்டுத்தோல், பழையகருங்கம்பளி, பருத்திக்கொட்டை, பழங்கோணிப்பட்டு, பழந்துணி ஆகவகையொன்றுக்கு பலம் மூன்று கொண்டு கலவத்திலிட்டு, தேன், பசுவின்நெய், பசுவின்பால், வெண்ணெய், பசுவின்சாணப்பால், சதுறக்கள்ளிப்பால், திருகுகள்ளிப்பால், ஆகசேர்த்து நன்றாக அரைத்து மூசையில் அடைத்து வாய்மூடி சீலைமண் வலுவாகக் கட்டிவும். உலையில் இரும்பு ஊதுவதுபோல ஊதி எடுக்கச் சத்தாகும்.

## துருசுவைப்பு

நல்லசெம்பு பலம் அறுபது கொண்டு பெட்டிபோல் செய்து அதற்குத்தகுந்தபடி, முப்பதுபலம் செம்பு கொண்டு கீல்செய்து வைத்து, அதன்உள் வெடியுப்பு பலம் அறுபது, கல்லுப்பு பலம் நாற்பது, செம்புப்பொடி பலம் அறுபது, ஆகச்சேர்த்துப் பெட்டியிலிட்டு எறுமைத்தயிர் படி மூன்று, எலுமிச்சம்பழச்சாறு படி மூன்று, குதிரைமூத்திரம் படி மூன்று, பூனீறு படி ஒன்று ஆகக்கூட்டி பெட்டியில் நிரப்பி மேல்மூடி நன்றாய்க்கட்டி வைத்து, அதற்குமேல் பழையகோணிப் பட்டுக்கொண்டு வச்சிர மண் சீலைச்செய்து வெயிலில் வைத்து நன்றாய்க் காயவைத்து, ஆவணிமாதம் சுக்கிலபக்ஷத்தில் சுக்கிரவாரத்தில், நல்ல பெரிய உயர்ந்த குப்பைமேட்டில் ஆளுயரங்குழிவெட்டி அக்குழியில் முழங்காலுயரம் குதிரைலத்தி இட்டு நிரப்பி மிதித்து, அதின்மேல்

பெட்டியைவைத்து, குதிரைலத்தி மேலும் இட்டு நிரப்பி மிதித்து, மேலே மண்ணிட்டு மிதித்து, பழையமண்ணையிட்டு மிதிக்கவும். ஆறு மாதஞ்சென்றபின் எடுத்தால் துருசு கட்டிக்கட்டியாகயிருக்கும். இதனையே எட்டுமாதம் சென்றபின் எடுக்கில், நல்ல நீல வயிரம்போல கதிர்க்கதிராக விளைந்திருக்கும். இஃது தூய்மைப் படுத்திய துருசை ஒக்கும். குருமருந்து செய்யவும் பயன்படும்.

## வங்காளப்பச்சை துருசுவைப்பு

பெரிய செப்புத்தவலை இரண்டு வள்ளம் அல்லது மூன்று வள்ளம் பிடிக்கக்கூடியதாகப் பார்த்து எடுத்து, அதில் செம்புப் பொடி பலம் முப்பது, அரிதாரப்பொடி பலம் பத்து, நல்ல அவுரிநீலம் பலம் பத்து, நாலாங்காச்சல் வெடியுப்பு பலம் ஐந்து, நல்லமணிபோன்ற கல்லுப்பு பலம் ஐந்து, ஆக பொடிச்செய்து, செப்புதவலையிலிட்டு எருமைத்தயிர் படிமூன்று, எலுமிச்சம்பழச் சார் படிமூன்று, குதிரைஇரத்தம் படிமூன்று, பழங்காடி படி ஒன்று, ஆகிய இவைகளை அந்த செப்புத்தவலையில் ஊற்றி, செப்புத் தகடு கொண்டுமூடி, பெரிய பழையகோணிப் பட்டுக்கொண்டு வச்சிரமண் சீலைசெய்து பூசி, தலை தெரியாமல் கவசம் மிட்டுக்காய வைத்து, அதன்பின் ; உயர்ந்து நெடுநாளாக இருக்கும் குப்பை மேட்டில் ஆளுயரங்குழி வெட்டி, அக்குழியில் முழங்கால்மட்டும் குதிரைலத்தி போட்டு, அதின்மேல் இரண்டு குடங்குதிரை மூத்திரந்தெளித்து மிதித்து நன்றாக அழுத்தி, அதன்மேல் செப்புத் தவலையைவைத்து, அதன்மேலே மீண்டும் குதிரைலத்தியைப் போட்டு, இரண்டு குடங்குதிரை மூத்திரம் சிறிது சிறிதாகத் தெளித்து நன்றாக மிதித்து, மீண்டும் இரண்டு குடங்குதிரை மூத்திரம் தெளித்து மிதித்தபின், குப்பை மண்ணை போட்டு மிதித்து மூடிவிடவும். எட்டுமாதஞ் சென்றபின் எடுக்கவும். எடுத்த தவலையை திறந்து பார்த்தால், நல்ல உயர்ந்த விலை யாகத்தக்கது போலும் அளவிடப்படாத பச்சைக்கல்போல் இருக்கும். ஆதிநாராயணன் வடிவாயிருக்கும்.

## பவழவைப்பு

நல்ல சாதிலிங்கம் பலம் மூன்று கொண்டு வந்து முலைப் பாலில் மூன்றுநாள் ஊறவைத்து எடுத்துக்கொண்டு, எலுமிச்சம் பழச்சாரத்தில் மூன்றுநாள் ஊறவைத்து, எடுத்த சாதிலிங்கம் பலம் மூன்று, சங்குநீறு பலம் இரண்டு ஆகக்கலவத்திலிட்டு,

எருமைச்சீழ்பால், செம்மரிஆட்டுச் சீழ்பால்விட்டு முப்பது நாழிகை அரைத்து மெழுபோலானபின் யெடுத்து நெய்தொட்டுக்கொண்டு பவழம்போல உருட்டி தென்னீயீற்கைச்சீவி ஒரு யீறுக்குக்கு நாலு பவழம்போல் உருட்டிக்கோர்த்து இவைகளை நன்ருகவுலர்த்தி எடுத்துக்கொண்டு, தொடைப்பெருமவுள்ள விருல்மீன் கொண்டுவந்து அதினுடைய வாயைத்திறந்து அந்த வாயில் முன்புசெய்த பவழத்தைச்சொருகி இப்படியாக இரண்டு, மூன்று கோற்வை வயிறு நிரம்பச்சொருகி வாயைக்கட்டி சீலை சுற்றி வைத்துக்கொண்டு, ஒரு முடாவில் அரைப்பானை சம்பா நெல்லிட்டு தண்ணீர்க்கூட்டிப் பிசரி அதின்மேலே சீலைசுற்றின மீனைவைத்து மேலும் நெல்லுக்கு நீர்க்கூட்டிப் பிசரிக்கொட்டி, அடுப்பிலிட்டு வேகவைக்கவும். நெல்வெந்த பின்பு குளிரவிட்டு நெல்லைக்கொட்டி மீனையெடுத்துப்பார்க்க நல்ல மணிகளாக இருக்கும். இவைகளை நன்ருகக்காயவைத்து உலர்ந்தபின் அரிசியில் கூட்டி தீட்டி எடுத்து நல்லெண்ணையில் மூன்று நாள் ஊறிய பின் எடுத்துத்துடைத்து கருவளையல்மணியுடன் கீழும் மேலுங் கோர்வையிட்டுமூடி கோர்வையொன்றுக்கு ஆறு பவழமணியாகச் சேர்க்கவும்.

## நல்ல ஆணிமுத்து வைப்பு

பங்குனி, சித்திரை மாதமுதல் கிடைக்கக்கூடிய பெரிய மீன்களின் கண்ணுமுழிகள் ஆயிரம் அல்லது இரண்டாயிரம் பெருமுழிகளாக வாங்கி அவைகளுள் சுண்டக்காய் அளவுஉள்ள முழிகளைப்பொறிக்கி எடுத்துக் கொள்ளவும். நன்ருகச் சுத்திச் செய்த ரசம் பலம் நாலு, கல்லிலிட்டு சிறுசெறுப்படிச்சாறு விட்டு மூன்றுநாள் அரைக்கவும். ரசம் ஓட்டமடங்கிக் குழம்பு போலே நிற்கும். ரசத்தின்மேல் துரும்பு நிற்கும். ஓட்டம் அடங்கும். அக்கினிக்கும் புகையாது. இந்த ரசத்தை கையில் விராகனிடை எடுத்துக்கொண்டு அத்துடன் நாலு மீனின் முழிகளை உள்ளங்கையில் வைத்துக்கொண்டு சாருயம் சிறிது குத்திக் கொண்டு கஞ்சா நுணுகுகின்ருற்போல மணியும் ரசமுந்தேய்த்துத் தேய்த்துப்பார்க்க ரசத்தை முழி வாங்கிக்கொள்ளும், கனமேறும், உருண்டு திரண்டு மணியாகும். நன்ருக ரசத்தை வாங்கும் மட்டும் ரசங்கொடுக்க ஆணிமுத்தாகும். பரிச்சித்தாலும், புரைவாங்கிப் பார்த்தாலும், புரைகாணுது முத்துப்போலவே இருக்கும்.

## முகமினுக்கி வைப்பு

நல்ல சிவந்த கோரோசினை பலம் ஒன்று, கொண்டுவந்து கலுவத்திலிட்டு நன்ருகப் பொடிச்செய்து பச்சைக்கற்பூரம் விருகனென்று, புனுகு விருகன் இரண்டு, சவ்வாது விருகன் இரண்டு, ஆகக்கூட்டிப் பொடிசெய்து, இரண்டு தேங்காய் திறுகிப் பிழிந்தபாலும் பசுவின் வெண்ணெயும் கலந்து வேண்டிய அளவு விட்டு அரைத்து கொம்புச்சிமிளில் அடைத்து வைத்துக்கொண்டு; இதில் பச்சைப்பயறு, மருவாதி எடுத்துக்கையில் தேய்த்து முகம் உடம்பில் தேய்க்க முகமும் உடம்பும் சந்திர சூரியரரைப்போல அழகுதரும். மணத்தைத்தரும். இது ஆணுக்கும் பெண்ணுக்கு மாகும்.

## நவச்சார வைப்பு

யானைமூத்திரம் வள்ளம் ஐந்து, குதிரைமூத்திரம் வள்ளம் ஐந்து, ஒட்டகமூத்திரம் வள்ளம் ஐந்து, கழுதைமூத்திரம் வள்ளம் ஐந்து, பசுவின்மூத்திரம் வள்ளம் ஐந்து, எருமைமூத்திரம் வள்ளம் ஐந்து, வெள்ளாட்டுமூத்திரம் வள்ளம் ஐந்து, செம்மரியாட்டின்மூத்திரம் வள்ளம் ஐந்து, அமுரிவள்ளம் ஐந்து ஆக இவகைளைக்கூட்டி இருபது வள்ளம் பிடிக்கக்கூடிய கெட்டிச் சட்டிகொண்டு வந்து அடுப்பில் வைத்து இந்த மூத்திரங்களை விட்டு அடுப்பிலேத்தி எரித்து சுண்டவிட்டு, அதில் கல்லுப்பு பலம் மூன்று, வெடியுப்பு பலம் ஆறு, சீனம் பலம் இரண்டு, பூனீறு பலம் இரண்டு ஆகக்கரைத்து வேகவிட்டு சேறுபதம் வருகையில் மூலையில் வைத்துமூடி மூன்றுநாள் சென்றபின், திறந்துபார்க்க நன்ருக சத்தேறிக்கம்பி விழுந்து நவச்சாரமாக இருக்கும். பிளந்தெடுத்து கட்டியாகயெடுத்து உமியில்வைத்து, சில நாள் சென்றபின் எடுத்துக் கொள்ளவும்.

## வெள்ளைப்பாடாண வைப்பு

ஒரு வள்ளம் பிடிக்கக்கூடிய கெட்டிக்குண்டு சட்டி ஒன்றை அடுப்பிலேற்றி, அதில் வெள்ளீயம் பலம் இருபது, பொன்னரிதாரம் பலம் ஐந்து, சீனக்காரம் பலம் முப்பது, வெடியுப்பு பலம் இருபது, வெண்காரம் பலம் இரண்டு, துருசு பலம் ஐந்து, பூனீறு பலம் நாலு, அன்னபேதி பலம் நாலு, ஆகப்பொடிச் செய்து, பன்றிநெய் படிஇரண்டு விட்டுக்கிண்டி, சட்டி வாய்க்குச் சில்லிட்டு, வச்சிரமண் மூன்றுயிட்டு கமலாக்கினியாக ஆறு

சாமம் எரித்து குளிர்ந்தபின் திறந்துபார்க்க வெள்ளைப்பாடாண மாக இருக்கும்.

## கெவுரிபாடாண வைப்பு

அடிகனத்த குண்டுசட்டியை அடுப்பில் வைத்து அதில் காரீயம் பலம் பதினைந்து விட்டு உருகும்போது வெடியுப்பு பலம் ஐந்து, கல்லுப்பு பலம் ஐந்து, துருசு பலம் ஐந்து, வெண்காரம் பலம் மூன்று, நவச்சாரம் பலம் மூன்று, அன்னபேதி பலம் மூன்று, பூனீறு பலம் மூன்று, பொன்னரிதாரம் பலம் ஐந்து, சீனம் பலம் இரண்டு, ஆகப்பொடிச்செய்து குண்டுசட்டியில் போட்டு பன்றி நெய் படி இரண்டு விட்டு, இவைகள் ஒன்றுபட கலக்கி இறக்கி, பானைக்கு சில்லிட்டு சீலைமண் செய்து ஆலம் விறகுகொண்டு அறுபது நாழிகை எரிக்க உருகி மணியாக இருக்கும். சாங்கசீதளமாயபின் எடுத்துப்பார்க்க மஞ்சள்கெவுரி பாடாணமாகும். இது முதிர்ந்தால் இரத்தக் கெவுரிப் பாடாண மாகும்.

## மாப்பழத்தொட்டிப் பாடாணவைப்பு

துத்தநாகம் பலம் பத்து உருகும்போது சுத்திச்செய்த ரசம் பலம் பத்து கொடுக்க வாங்கிக்கொள்ளும். இது மாவாக நொருங்கும். இதை எடுத்துக் கலவத்திலிட்டு துருசு பலம் எட்டு; துத்தம் பலம் நாலு, நவச்சாரம் பலம் மூன்று, சீனம் பலம் ஆறு, வெண்காரம் பலம் இரண்டு, அன்னபேதி பலம் இரண்டு, பூனீறு பலம் இரண்டு, சூடன் பலம் இரண்டு, அரிதாரம் பலம் மூன்று, இந்துப்பு பலம் இரண்டு, கல்லுப்பு பலம் மூன்று ஆகப்பொடிச் செய்துக் கலவத்திலிட்டுப் பசுச்சாணச்சாறு நாளொன்று, எருக்கம்பழுப்புச்சாறு நாளொன்று, சதுர்க்கள்ளிச்சாறு நாளொன்று, சிறுசெறுப்படிச்சாறு நாளொன்றாக அரைத்து உலர்ந்தபின் மீண்டு வன்னிதிராவகம் கொண்டு ஒருநாள் அரைத்து உலர்த்தி, ஒன்றரைப்படிக் கொள்ளக்கூடிய குப்பிகள் ஐந்து எடுத்து சீலைமண் செய்து அவற்றுள் மருந்தும் வன்னித்திராவகம் விட்டு அரைத்து உலர்த்தியதைக் குப்பியிலிட்டு வாய்மூடி வாலுகாயெந்திரத்தில் பதினாறு சாமமெரித்து நன்றாகக் குளிர்ந்தபின் குப்பியை உடைத்துப் பார்க்கவும். இஃதே மாப்பழத்தொட்டியாம்.

## வங்காளச் சௌவீரவைப்பு

சீனம் பலம் பத்து, வெடியுப்பு பலம் இருபது, பூனீறு பலம் முப்பது ஆகசேர்த்து திராவகம் வாங்கி வைத்துக்கொண்டு சுத்திரசம் பலம் பத்து, கலவத்திலிட்டு முன்வடித்த திராவகங் கல்வத்திலிட்டு அரைக்க சங்குபோலே வெளுத்து சோளம் போலே பொரிந்து நீருகும். அத்துடன் கல்லுப்பு பலம் இரண்டு, வெடியுப்பு பலம் இரண்டு, சீனம் பலம் இரண்டு, துருசு பலம் ஒன்று, பூனீறு பலம் இரண்டு, அன்னபேதி பலம் மூன்று, நவச்சாரம் பலம் நான்குக் கூட்டி அரைத்து, வழித்து, மூன்று குப்பிகளுள் அடைத்து வச்சிரமண்பூசி மாக்கல் வாய்க்கு மூடி வச்சிரமண்பூசி, வாலுகா இயந்திரத்தில் பன்னிரண்டு சாம மெரித்து ஆறியெடுக்க நல்லவங்காளச் சௌவீரமாகும்.

## சாம்பிருணிப்பதங்க தைலம் வைப்பு

இரண்டு வள்ளம் பிடிக்கக்கூடிய ஒரு அடிகனத்தமண்சட்டி ஒன்றுகொண்டு அதன் நடுவில் நாலுவிரல் உயரம் களிமண்ணி னுல் நாலுவிரல் சதுரமுள்ள மேடைபோல் செய்து, அதன்மேல் அரைப்படி பிடிக்கக்கூடிய பீங்கான்கோப்பை ஒன்றைவைத்து; மேடைஉயரம் வரும்படியாகச் சட்டியில் சாம்பிராணி பலம் இரண்டு, பச்சைவெட்டு குங்கில்யம் பலம் ஒன்று, கருங்குங் கில்யம் பலம் ஒன்ருகக்கொண்டு பொடித்துக்கொட்டி பரப்பி, சட்டிவாய் பிடிக்கத்தகுந்த மண்குடம் ஒன்றுபடிய அமைத்து சீலைமண்செய்து குடம் நிறையநீர்விட்டு, அடுப்பேற்றி ஆவாரை விறகுகொண்டு விளக்குளரிவதுபோல் எரிக்கவும். மேல்குடத்துள் உள்ளநீர் சூடாயின், அந்நீரை எடுத்துக் கொட்டிவிட்டு பதில் தண்ணீர்விடவும். மறுபடி அந்தத்தண்ணீரு முதிரக்காய்ந்தால் அடுப்பு எரிக்காமல் தீப்பிரித்து, ஆறவிட்டு நன்ருகக் குளிர்ந்த பின்னுல் சீலைமண் பிரித்து குடமிறக்கிப்பார்க்கில், கேப்பையில் சாம்பிருணி வெடியுப்புக் கம்பிகளைப்போல விழுந்திருக்கும். இஃதே சாம்பிராணிப் பதங்கமாம். தைலம்செய்ய வேண்டு மாயின், இப்பதங்கத்தில் ஒருகுன்றி அளவு எடுத்து ஒருபடி நல்லெண்ணெயில் போட களகளயென்று பொங்கிக்கரைந்து தணிந்துநிற்கும். இந்த தைலத்தைக்கொண்டு தலைமுழுக. தலைபாரம், ஒற்றத்தலைநோய், ஜன்னி பதிமூன்று, பழஞ்சுரம், வாதசூலை, நரித்தலைவாதம், சுவாசகாசம், காதுமந்தம், இருமல்,

ஈளை, மயக்கம், தசவாய்வு போம். இந்தத்தைலங்காசிடை உள்ளுக்குக்கொடுத்துவர அக்கினிமந்தம், குன்மவாய்வு, வாய்வு, அஜீரணம், விக்கல், வாந்தி, விடபாகம், காமாலை இவையெல் லாந்தீரும்.

## கஸ்தூரி வைப்பு

பெரிய வெள்ளாட்டுக்கிடாவின் ஆண்குறித்தோலை பிதுக்கி அதன் இடுகண்களில் உள்ள மாவைப்போலுள்ள பிசுபிசுத்தப் பொருளை வழித்தெடுக்கவும். இப்படியாக நாலஞ்சு ஆடுகளி லிருந்து எடுத்த பிசின் இரண்டு பலம் எடுத்து வைத்துக் கொண்டு; சொத்தை விழுந்த பழையமாமரத்தின் பொந்தில் பார்வைக்கு, ஆட்டுயீறல்போலே குங்குமவர்ணமாக, யிருக்கும் காளான் ஒன்றை எடுத்ததில் இரண்டு பலம் எடுத்து, அத்துடன் ஆட்டின் பிசின் இரண்டு பலம் கூட்டி, ஆட்டு ரத்தம்விட்டு மை போலே அரைத்து வில்லைபிடித்து உலர்த்தி எடுத்துக்கொண்டு, பத்து நாள்வரை வைத்திருந்தபின்பு புனுகு விராகன் நாலு, சவ்வாது விராகன் நாலு, பச்சைக்கற்பூரம் விராகன் நாலு, கோரோசனை விராகன் ஒன்று, சமுத்திராப்பச்சை விராகன் ஒன்று, கோஷ்டம் விராகன் ஒன்று, பூலாங்கிழங்கு விராகன் இரண்டு, ஆகக்கல்வத்திலிட்டு மீண்டும் ஆட்டு ரத்தத்திலரைத்து மைபோல் ஆனபின் மேற்கூறியபடி உலர்த்திய ஆட்டு பிசின் நான்கு பலம் எடுத்து கல்வத்திலிட்டு, செம்மறியின் மயிர்க் குருக்கு ஒரு விருகன் தூக்கம்கூட்டி நறுக்கி இளநீர்விட்டு நன்றாய் அரைத்து வழித்து வைத்துக்கொண்டு செம்பிலிக்கிடாயின் விரையின் அடியின் மெல்லியத்தோலை பைபோல் எடுத்து அத னுள் மேற்படியாக அரைத்ததை அடைத்து வாயை கயற்றால் கட்டிவைக்கவும். சிலநாட்கள் சென்றபின் பார்க்கில் உண்மை கஸ்தூரிக்காய்கள் போலிருக்கும். இதனைச் சோதிக்கும் முறை யில், கஸ்தூரியைப் போலவே தீயில்போட மாங்கிசம்போல் கவிச்சுவீசும் நாவில்போட நீர்ஊறும். தோஷம் பிறந்த பேறுக்கு முலைப்பாலிலரைத்து நாவில் துவளை இட தோடநாசனமாகும்.

## குங்குமப்பூ வைப்பு

மயில்கொன்னைப்பூமேல்இருக்கும் நரம்பைக்கிள்ளியெடுத்து உலர்த்தியது இரண்டு பலம் எடுத்து வைத்துக்கொள்ளவும்.

புனுகு, சவ்வாது, கஸ்தூரி, கெம்பீரசாம்பிருணித்தைலம், நாகணம், பூலாங்கிழங்கு, பச்சிலை, கோரோசினை, வெட்டிவேர் ஆகவகைக்கு விராகன் அரையாக எடுத்ததைக் கல்வத்திலிட்டு அரைத்து வழித்து ஒருபடி பசுவின் நெய்யில் போட்டுப்பதமாகக் காச்சும்போது நல்ல வெள்ளைச்சந்தணம் விராகன் ஒன்று கூட்டி இறக்கிவைத்து அதில் முன்பு உலர்த்திவைத்த கொன்றை நரம்பு களைபோட்டு சிறிது நேரங்கழித்த பின் முதிருப்பதமாக யிறக்கி வைத்து, பத்துநாள் சென்றபின் எடுத்து சிலவு செய்ய.

## கற்பூரமெழுகு வைப்பு

நல்ல மலாக்காய்ச்சாம்பருணி பலம் ஒன்று, நல்ல ஆலாத் திக்கற்பூரம் பலம் ஒன்று ஆக இரண்டுங் கலவத்திலிட்டு இரண்டு நாழிகை அரைக்க நல்லதேன்மெழுகுபோலே ஆகும். அதனை எடுத்துப் பரணியிலடைத்து வைத்துக்கொள்ளவும். இந்த மெழுகு தூதுவிளங்காய் அளவு ஒருபடி நல்லெண்ணெயில் போடக்கொதிக்கவைக்க பொங்கித்தைலமாம். இதனைத் தலை முழுக வழங்கலாம்.

## சவ்வாது வைப்பு

நல்ல புனுகு விராகன் இரண்டு, நல்ல சவ்வாது விராகன் இரண்டு, நல்ல கோரோசினை விராகன் ஒன்று, கெம்புரு விராகன் ஒன்று, சாம்பிருணி மெழுகு விராகன் அரை, சந்தனத்தைலம் காசுஅளவு ஆக ஒன்று ஆகச்சேர்த்து, பசுவின் வெண்ணெய் விளாங்காய் அளவுச்சேர்த்து, கீரிப்பிள்ளை மயிர் கால் விருகனைச் சேர்த்து அரைத்து செம்புப்பரணியில் அடைத்து வைத்துக் கொள்ளவும். பத்துநாள் சென்றால் சிலவு செய்யவும். இது நல்ல சவ்வாதுபோல் இருக்கும்.

## திருச்சூரண வைப்பு

நல்ல மலையாளத்து அரக்கு மஞ்சள் பலம் இருபது கொண்டு வந்து ஒன்றிரண்டாய் நய்யத்தட்டி எடுத்து ஒரு நல்ல சட்டியில்போட்டு எலுமிச்சம்பழம், நாரத்தம்பழம், சாறு வகை ஒன்றுக்கு இரண்டுபடி சாறுவிட்டு மஞ்சளில் ஊரவைத்தபின் வெண்காரம் பலம் இரண்டு எடுத்து ஒன்றரைப்படித் தண்ணீர் விட்டு கொதிக்கவைக்க வைத்து, தெளியவைத்து எடுத்து

மேற்படியாகச்செய்த மஞ்சள் உடன்கூட்டி கல் மண் விழாமல் அறுபது நாழிகை மூடிவைத்திருந்து எடுத்துப்பார்க்க சந்திரோதயம்போலே சிவந்து இருக்கும். வெய்யில் படாமல் உலர்ந்து நன்ருகக்காய்ந்தபின் எடுத்துக் கல்லுறலில் போட்டுக் கடப்பாரைகொண்டு நன்ருய் மாவாகயிடித்து வைத்துக்கொள்ளவும். அதற்குமேல் ஒரு அழுத்தமான அகண்டவாய்ச் சட்டிக் குச்சீலையேடு கட்டி அதன்மேல் இடித்த மஞ்சட் பொடியையிட்டு எரிக்கக்கீழே சட்டியில் திருச்சூரணம நல்ல சந்திர உதயம் போலேவும் மாதளம்பூ வர்ணமாகவும் மாவாகயிருக்கும். அதை யெடுத்து மாங்தோல் பொட்டியில் அடைத்து லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, நெல்லிப்பருப்பு, சீதேவி, செங்கழுநீர்கிழங்கு, சிறியாநங்கைவேர், உரம், வெள்ளையுரம் ஆகச்சரக்கு வகைக்கு முப்பத்தாறு விராகனிடை, பசுவின்நெய் தெளித்து வறுத்து பொன்னிறமாக கருகாமல் எடுத்து கல்லுரலிலிட்டு யிடித்து நன்ருகத்தெள்ளி எடுத்து வைத்துக்கொண்டு அதற்குமேல் நல்ல தீட்டுமுனையான புனுகு, நல்ல தீட்டுமுனையான சவ்வாது, கஸ்தூரி, கெம்புரு, மலாக்காய் சாம்பிருணித்தைலம் மெரியரசுப்பால்த்தைலம் ஆகவகைக்கு வராகன் பத்து அம்மியில் வைத்து அரைத்து முந்தின சரக்குப்பொடியும் அரைப்படியும் கூடவைத்து அரைத்து பின்பு எல்லா சூர்ணத்தையும் ஒன்ருகக் கலந்து சகலமுஞ்சேமித்து வட்டப்பெட்டியிலடைத்து வைத்துக் கொண்டு வழங்கவும்,

## மரகதப்பச்சைக் கதம்ப வைப்பு

நல்ல வெள்ளைச் சம்பாஅரிசி படி ஐந்து, எடுத்து முத்தீட்டலுந்தீட்டிப்புடைத்து தேச்சுப்புடைத்து எடுத்துக்கொண்டு சட்டியிலிட்டு நல்ல தண்ணீர் விட்டு மூன்று முறைப்பிசைந்து, சிறிது ஊரவைத்து நன்ருய்க்கழுவி எடுத்து, நீர்வடித்து உலர்ந்தபின், கல்லுறலிலிட்டு உலக்கைக்கொண்டு இடித்துத் தெள்ளி யெடுத்துக்கொண்டு, நன்ருக அம்மியிலிட்டு நெழுக அரைத்து எடுத்துக்கொண்ட மாவு அஞ்சுபடி; சுத்திச்செய்த மலையாள மஞ்சள்பொடி படிமூன்று ஆகச்சேர்த்துக்கூட்டி, நல்லவயிற மலாக்காய் வெள்ளைச்சந்தனம்பொடி படிஇரண்டு, அகில்சந்தன வைரத்தின் பொடி படி ஒன்று, புட்பதேவதாரத்தின் பொடி படி ஒன்று, ஆகக்ககூட்டி, அத்துடன் அவுரிநீலம் பலம் ஐந்து கூட்டி நன்ருக அரைத்த சூரணமெல்லாம் கலந்து அம்மியிலிட்டு

நன்ருக அரைக்கும்போது நிறம் மரகதப்பச்சையாகும். இத்துடன் சமுத்திராப்பச்சை, கற்கடகசிங்கி, ஆண்மணிநாகணம்• சிறுநாகப்பூ, கொத்தமல்லி, கோஷ்டம், பூலாங்கிழங்கு வகைக் குப்பலம் பத்து, ஏலரிசி, சாதிக்காய், சாதிப்பத்திரி, தாளிசைப் பத்திரி, குரோசாணிஓமம், நெல்லிப்பருப்பு, செண்பகப்பூ• மருக்கொழுந்து, வெட்டிவேர், விலாமிச்சவேர், நன்ஞரிவேர், சீதாசெங்கழுநீர்க்கிழங்கு, வால்மிளகு, கருவாய்பட்டை, லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, புனுகு, மல்லிகை• திருநீற்றுப்பச்சை, மாசிப்பச்சை, வறுத்தஉளுந்து, வறுத்த கடலை, வறுத்த பச்சரிசி, கம்புபொரி, வறுத்த எள்ளு, மாகாளிக் கிழங்கு, கஸ்தூரிமஞ்சள், வெள்ளையுரம், சிறியாநங்கை, விளாம் பழச்சூரணம், வில்வப்பழச்சூரணம் ஆக வகைக்கு பலம் ஐந்து, தனித்தனியே சிறிது நெய்குத்தி பொரித்துக்கல்லூரலிட்டு பருங்கடப்பாரைக் கொண்டு இடித்துத் தெள்ளிவடிகொண்டு அம்மியில் நன்ருக நேமுக அரைத்து; முந்தின சூர்ணத்தில் கலந்து வைத்துக்கொண்டு, அதன்பின் நல்ல தீட்டுமுனைப் புனுகு, நல்ல தீட்டுமுனைச்சவ்வாது, நல்ல தீட்டுமுனையான கஸ்தூரி, நல்ல தீட்டுமுனையான பச்சைக்கற்பூரம், நல்ல மலாக் காய்ச்சாம்பிருணித்தைலம், மட்டிப்பால்தைலம் வகைக்கு விராகன் பத்து ஆகச்சேர்த்துக் கல்லிலிட்டு நன்ருக அரைத்துக் எடுக்கவும். இஃது அரசர்கள் குளிக்கும்போது வழங்கும் வாசனை அரைப்புப் பொடியாம்.

## நீலக்கதம்ப வைப்பு

நல்ல சம்பாப்பச்சரிசி படிநாலு, எடுத்து முத்தீட்டலும் தீட்டிய அரிசியை நீர்விட்டுப் பிசைந்துகழுவி மீண்டும் இவ்வாறு இருமுறைக் கழுவியபின் நீர்வடியவிட்டு இடித்து மாவாக்கி நன்ருகத் தெள்ளியெடுத்து, அம்மியில் நன்ருக மாவை நேர்ப்பாக அரைத்து உலர்த்தி வைத்துக்கொண்டு, நல்லமலாக்காய்ச் சந்தனமரைத்து உலர்த்தியபொடி, பன்னிரண்டு படிஎடுத்து வைத்துக்கொண்டு, இதுக்கு மேல் சரக்கு, நாகனம், கோரோசனை, சிறுநாகப்பூ, கொத்தமல்லி, கொட்டிச்சாந்து, மரிக்கொழுந்து, வெட்டிவேர், விளாமிச்சம், சமுத்திராப்பச்சை, கோஷ்டம், பூளாங்கிழங்கு, ஏலஅரிசி, சாதிக் காய், சாதிப்பத்திரி, கிராம்பு, தாளிசபத்திரி, குராசாணி ஓமம்,

துளசிப்பூ, மாசிப்பச்சை, திருநீற்றுப்பச்சை, இராமதுளசி, சீதேவிசெங்கழுநீர், கோரைக்கிழங்கு, நன்னாரி, காட்டுமாகாளிக் கிழங்கு, தேவதாரம், பிரப்பங்கிழங்கு, வெள்ளைவிளாம்பூ, சிறியாநங்கைவேர், செம்முளிவேர், வறுத்தகாரெள்ளு, வறுத்த உளுந்து, வறுத்த பச்சைப்பயறு, வறுத்த கடலை, கம்புப்பொரி, நெல்லரிசிப்பொரி ஆக வகைக்குப்பலம் ஐந்து, அந்த சரக்கு களைத் தனித்தனியே நன்றாக பசுவின்நெய் நன்றாகவிட்டு வறுத்து இடித்துப்பொடிசெய்து ஆனைமணிநாகணம், கறுவாய் பட்டை பலம் ஐந்து நன்றாக நெய்மெதக்கவிட்டு செவக்க வறுத்து எடுத்துக்கொண்டு, சகலமும் நன்றாகச் சேர்த்து வைத்துக்கொண்டு, நல்ல முனைப்புனுகு, சவ்வாது, கஸ்தூரி, மலாக்காய் சாம்பிராணித்தைலம், நல்ல தீட்டுமுனை மட்டிப் பால்தைலம், நல்ல தீட்டுமுனை மிரிகரிசிப்பால், தீட்டுமுனைப் பச்சைக்கற்பூரம் ஆக வகையொன்றுக்கு விராகனிடை பத்து ஆக அம்மியிலிட்டு நன்றாக அரைத்து எல்லாச்சூர்ணமும் ஒரு படியாகக்கூட்டி அரைத்து நன்றாக சேர்த்து, புனுகு சட்டம், சோம்பு, ஏலம், இவைகளைப் பொடிச்செய்து சட்டியில்போட்டு பசுவின்நெய் விட்டுத்தாளிதம் பண்ணி வட்டப்பெட்டியில் அடைத்து வைத்துக்கொள்ளவும். இதனை அரைப்புப்பொடி யாக வழங்கவும்.

## சந்தனவில்லை வைப்பு

நல்ல சம்பாவரிசி இரண்டு வள்ளம், முத்தீட்டலுந்தீட்டி எடுத்துக்கொண்டு மூன்றுமுறை தேய்த்துப்பிசைந்து கழுவி யெடுத்து நீர்வடித்துக்கொண்டு நல்ல கல்லுரலிலிட்டு கடப் பாறை கொண்டு இடித்து தெள்ளி எடுத்துக்கொண்டு அம்மியி லிட்டு நன்றாய் நேர்த்தியாய் அரைத்து வைத்துக்கொண்டு அரிசி மாப்பலம் ஐம்பது, நல்ல மலாக்காய்ச்சந்தனம் அரைத்து தீட்டு முனையாய் பலம் முப்பது, அகில்சந்தணம் பலம் இருபது, மஞ்சள் பளுக்கா பலம் முப்பது, தேவதாரம் பலம் பத்து, ஆகப்பொடிச்செய்து சேர்த்து ஒன்று, ஆவாரைப்பட்டை பூசலாங்கிழங்கு ஆனைமணிநாகணம் பலம் பத்து, கொத்த மல்லி, சமுத்திராப்பச்சை, சேற்பூனாகணம், கோரோசினை, சிறுநாகப்பூ, லவங்கப்பட்டை கெவிளா, கோஷ்டம் லவங்கப் பத்திரி, வெட்டிவேர், கறுவாய்பட்டை, மருக்கொழுந்து, விலாமிச்சம்வேர், நெல்லிப்பருப்பு, பருத்திப்பருப்பு, கஸ்தூரி

மஞ்சள், நன்னாரிவேர், காட்டுமாகாளிக்கிழங்கு, இண்டம்பூ, வெள்வேலம்பூ, பிரப்பங்கிழங்குப்பூ, மாசிப்பச்சைப்பூ, திருநீற்று பச்சைப்பூ, துளசிப்பூ, கோரைக்கிழங்கு, சீதேவிவேர், சிறியா நங்கைவேர், கஞ்சாங்கோரைப்பூ, சிவதுளசிப்பூ, சடாமஞ்சி, வால்மிளகு, தாளிசபத்திரி, குரோசாணி, ஓமம், ஏலரிசி, சாதிக்காய், சாதிப்பத்திரி, கிரம்பு, உரம், ஆகவகைக்குப் பலம் இரண்டு, பசுவின் நெய்யிற்கொண்டு நன்றாக வறுத்துக் கல்லுரலிலிட்டு கடப்பாரை கொண்டு இடித்து வைத்துக் கொண்டு, சம்பாஅரிசிப்பொரி, கடலைப்பொரி, வறுத்தஉளுந்து, வறுத்தபச்சைப்பயறு, வறுத்தஎள்ளு ஆகக்கூட்டிக்கலவத்தி விட்டு நன்றாக அரைத்து மாவாகப்பண்ணி, முன்சூர்ணங்களெல் லாம் ஒன்றாய்ச்சேர்த்து வைத்துக்கொண்டு, தீட்டுமுனைப்புனுகு, புனுகுசட்டம், நல்லமுனைசவ்வாது, சவ்வாதுசட்டம், தீட்டு முனைக்கஸ்தூரி, பச்சைக்கற்பூரம், மலக்காய் சாம்பிராணித் தைலம், குங்குலியத்தைலம், பச்சை வெட்டுத்தைலம், மட்டிப் பால்தைலம், மெரியாசுப்பால் ஆக வகைக்கு பலம் ஐந்து சேர்த்து அம்மியிலிட்டு நேர்த்தியாக அரைத்து முந்தின சூர்ணம் ஒருபடி போட்டு நன்றாக அரைத்து சேர்மானமானால் ஆக எல்லாங் கல்லுரலிலிட்டுத் துவளக்கடப்பாறை கொண்டு இடித்து தண்ணீர் விட்டரைத்து, பிசைந்து சேர்மானமானால், நல்ல வெள்ளைத்துப்பட்டி சுத்தமான இடத்தில் விரித்து வில்லைக் கிண்ணி எடுத்துக்கொண்டு சந்தணவில்லை நாலாயிரம், ஐயாயிரம் வைக்கவும். நன்றாக உலர்த்திக்கொண்டு வில்லைக்கெல்லா மெருகு வைத்துக்கொள்ளவும்.

## நவரத்தினத்தில் வெள்ளைமணிவைப்பு

ஒரு செம்புத்தகடை அடுப்பில்வைத்து விளக்குப்போலே ஆவிரைவிரகு கொண்டு எரித்துக்கொண்டே அடுப்பில் வைத்த தாம்பிரத்தடியில் நெய்விட்டு கொஞ்சம் அதில் ஆலாத்தி கற்பூரம் விட்டு உருகும்போது மணியாகத்திரட்டி ஒழுங்காக வும் நன்றாகவும் மோகனமாலைக் குண்டுபோலும் உருட்டி எடுத்து வைத்துக்கொண்டு நாய்ப்பல்லில் நன்றாக விளக்கி, மெருகிட்டுப் பார்த்தால், நல்ல முத்துப்போலே ஒளிவிடும். பிறகு துவாரமிட்டு எடுத்து பட்டுக்கயிற்றில் கோர்வையிட்டு வைத்துக்கொள்ளவும்.

## குங்குமமணி வைப்புவிபரம்

இரண்டு விராகனிடை பத்திரதாளகத்தைக் கல்லிலிட்டு வெகு நேர்த்தியாகப் பொடிபண்ணி அதில் ரஸ்தாளிவாழைப் பழம் ஒன்று பெரிதாகப்போட்டு நன்றாக அரைக்க அரிதார நாத்தம்போம். பால்மணக்கும். இதிலிடும் சரக்கு விபரம்: பச்சைக்கற்பூரம் களஞ்சி, ஆனைமணிநாகணம் களஞ்சி, நல்ல மலாக்காய்சந்தணம் களஞ்சி ஆகசேர்த்து அரைத்து உலர்த்தி பொடிபண்ணி வைத்துக்கொண்டு முந்தின செம்புத்தகட்டு அடுப்பில் வைத்து பசுவின்நெய் கொஞ்சம் தட்டில்விட்டு அரிதாரப்பொடி புளியங்கொட்டை மருவாதி விட்டு நன்றாக நெய்யில் காய்ந்தால் (முன்பு செய்த நெல்லிக்காய் மருவாதி, அஞ்சுமணிகட்டி ஆலாத்தி கற்பூரமணி பண்ணின பிரகாரம்) இந்த மணியும் அஞ்சுமணியும் உருட்டியது மணி குங்குமவர்ண மாயிருக்கும். இது நன்றாக மோகனமாலைக் குண்டுபோலே திரட்டி எடுத்து, மெருகிட்டு, துவாரமிட்டுப் பார்த்தால் குங்குமமாணிக்கம்போலே ஒளிவிடும். பட்டுக்கயிற்றால் கோர்க்கவும்.

## மரகதப்பச்சை வர்ணவைப்பு

வங்காளப்பச்சை நல்லசாதி மரகதத்தைப்போல் பார்த்து எடுத்தது விராகன் இரண்டு, கலவத்திலிட்டு நன்றாக நேர்த்தியா யரைத்து வைத்துக்கொண்டு அத்துடன் நல்லபச்சைக்கற்பூரம் விராகன் ஒன்று, ஆனைமணிநாகணம் விராகன் ஒன்று, நல்ல மலாக்காய்ச்சந்தணம் விராகன் ஒன்று ஆகச்சேர்த்து அரைத்துப் பொடிபண்ணி வைத்துக்கொண்டு; செம்புத்தட்டை அடுப்பி லிட்டு பசுவின் நெய்த்தட்டில் கரண்டிவிட்டுக் கொதிக்கும் போது பச்சைத்தூள் புளியங்கொட்டையளவுபோட்டு கரண்டி யால் துழாவி சுடவைத்துக்கொணடு, நெல்லிக்காய் அளவாக இந்து மணிகட்டி முன் குங்குமமணி செய்தாற்போல் கட்டியை நெய்யிலழுத்தி உருட்டி நன்றாக மணிபண்ணி வைத்துக் கொண்டு, துவாரமிட்டு, மெருகிட்டுப் பார்த்தால், நல்ல மரகத மாணிக்கம்போல ஒளிவிடும். இதற்கு பட்டுக்கயிற்றால் கோர்வையிட்டுக் கொள்ளவும்.

## சிகப்புக்கெம்பு மாணிக்கமணிவைப்பு

நல்லசாதி சாதிலிங்கம் விராகன் இரண்டு, முலைப்பால், எலுமிச்சம்பழச்சாறு இவைகளில் மூன்றுநாளூறவைத்து எடுத்துக் கலவத்திலிட்டு நன்ருக வாழைப்பழம்போட்டு நன்ருயரைத்துக்காய்ந்து சூர்ணமாஞல் எடுத்து வைத்துக்கொண்டு, செம்புத்தட்டு அடுப்பின்மேல் வைத்து விளக்குப்போலே எரித்துத்தட்டில் பசுவின் நெய் கரண்டி விட்டு சாதிலிங்கப் பொடி, பச்சைக்கற்பூரம், காரைப்பூப்பொடி போட்டு கரண்டியால் துவட்டி நெய்சிவந்தால் ஆலாத்திகற்பூரம்கூட்டி நெல்லிக்காய் அளவாக ஐந்துமணிகள் செய்து, இதில் ஒருகட்டி எடுத்து நெய்யிலமுத்தி மணிதிரட்டி வுளுக்கமாஞல் நல்ல மோகன மாலைக்குண்டுபோல் ஆஞலெடுத்து, துவாரமிட்டு, மெருகிட்டுப் பார்த்தால் நல்ல சிகப்புக்கல் மாணிக்கம்போலே ஒளியாயிருக்கும். நீரோட்டங்காணும். இதை எடுத்துப் பட்டுக்கயிற்றில் கோர்வையிட்டு வைத்துக்கொள்ளவும்.

## நீலமாணிக்கம் பண்ணும் முறை

நல்லஅவுரி சாதிநீலம் விராகன் இரண்டு, கல்லிலிட்டுப் பொடிபண்ணி பச்சைக்கற்பூரம் விராகன் ஒன்று, சோம்பு விராகன் இரண்டு, ஆனைமணிநாகணம் விராகன் ஒன்று ஆகப் பொடிசெய்து வைத்துக்கொண்டு செப்புத்தட்டு ஒன்று அடுப்பிலிட்டு ஒரு கரண்டி பசுவின்நெய் தட்டில்விட்டு கொதிக்கும் போது நீலப்பொடி புளிசங்கொட்டை மருவாதிபோட்டு கரண்டியால் துழாவி சிவந்தால் ஆலாத்திக்கற்பூரம்கூட்டி நெல்லிக்காய் அளவு யெடுத்துக்கொண்டு இதில் ஒருகட்டியை நெய்யிலமுத்தி உருட்டித்திரட்டி மோகனமாலைக் குண்டுபோல் ஆஞல் துவாரமிட்டு நன்ருய் மெருகிட்டுப் பார்த்தால் நல்ல நீலமாணிக்கம் போலேயிருக்கும். நல்ல வாசனையாயிருக்கும் இதை எடுத்துப் பட்டுக்கயிற்றில் கோர்வையிட்டு வைத்துக்கொள்ளவும்.

## கோமேதக மாணிக்கவைப்பு

நல்லசாதி கோரோசனை விராகன் இரண்டு கொண்டு வந்து கல்லிலிட்டு அத்துடன் சுத்திசாதிலிங்கம் விராகன் கால், பச்சைக் கற்பூரம் விராகன் ஒன்று, செகப்பு உரம் விராகன் ஒன்று, பொடிபண்ணி வைத்துக்கொண்டு அதனை, செம்புத்தட்டு

அடுப்பில் வைத்து சிறுக எரித்துக்காயும்போது கோரோசினைத் தூளிட்டு கரண்டியிலிட்டு தேய்க்க நன்ருகக்காய்ந்து வரும் போது, ஆலாத்திகற்பூரம் ஐந்துகூட்டி நெல்லிக்காய்போலே வெட்டி எடுத்துக்கொண்டு அதில் ஒருகட்டி எடுத்து நெய்யில் அழுத்தி உருட்டி மோகனமாலைக் குண்டுபோல பண்ணித் துவாரமிட்டு நல்ல மெருகிட்டு எடுத்துப் பட்டுக்கயிற்றில் கோர்வையிட்டு ஐந்துமணியும் வைக்கவும். இந்த மணி கோமேதகமணி வடிவாயிருக்கும்.

## சுத்த கருப்புமாணிக்கமணிவைப்பு

நல்லசாதி அவுரிநீலம் விராகன் ஒன்று, கிராவைக்கரி விராகன் ஒன்று ஆக அரைக்கவும். பிறகு பச்சைக்கற்பூரம் விராகன் ஒன்று, ஆனைமணிநாகணம் விராகன் ஒன்று ஆக அரைத்து நேர்த்தியாய்ப் பொடிச்செய்து எடுத்து வைத்துக் கொண்டு செப்புத்தட்டு அடுப்பில் வைத்துச்சிறுக எரித்து தட்டில் ஒரு கரண்டி பசுவின்நெய் விட்டு கொதிக்கும்போது இந்தக்கரித் தூள்போட்டு கரண்டியில் தேய்த்துப்பார்க்க நெய் கறுக்கும். இதில் ஒருகட்டியை எடுத்து நெய்யில் தோய்த்து அழுத்தி மணிதீர்த்து மோகனமாலை குண்டுபோல நன்ருக வடுசுத்தமாகப் பிடித்து துவாரமிட்டு மெருகு நேர்த்தியாக இட்டுப்பார்க்கும்போது மணிகறுத்துத்தெளிந்து நீலமாணிக்கம் போலே இருக்கும். பட்டுக்கயிற்றில் ஐந்துமணியும் கோர்வை இடவும்.

## வயிடூரிய மணிவைப்பு

குருத்தக்கல் விராகன் ஒன்று சுத்திசெய்த அரிதாரம் பணவிடை இரண்டு, சுத்தசாதிலிங்கம் விராகன் அரை, சங்குப் பொடி விராகன் அரை, பச்சைக்கற்பூரம் விராகன் ஒன்று, உரம் விராகன் கால் ஆகப்பொடித்துக்கொண்டு, தாம்பிரத்தட்டை அடுப்பிலிட்டு ஒருகரண்டி பசுவினெய் அதில் விட்டு அந்தப் பொடி விராகனிடை போட்டுக்கொதிக்க வைத்துக்கரண்டி போட்டுத்தேய்த்து நெய்சிவந்தால் ஆலாத்திக்கற்பூரம் நெல்லிக் காய்ப்போலே ஐந்துகட்டி எடுத்துக்கொண்டு இதில் ஒரு கட்டியை காய்ந்த தட்டில் நெய்யிட்டுப் பிரட்டி அழுத்த மணியாம். சற்றுபொருத்து மோகனமாலைக் குண்டுபோல் திரட்டி எடுத்து துவாரமிட்டு நன்ருக மெருகிட்டுப்பார்க்க நல்ல

வயிடூரியம்போலே யிருக்கும். இப்படி ஐந்துமணியும் பட்டுக் கயிற்றில் கோர்வையிட்டுக் கொள்ளவும்.

## புட்பராக மணிவைப்பு

பளிங்குபோல் உள்ள சுத்தமான வங்கக்கல் விராகன் ஒன்று, குருந்தக்கல் விராகன் ஒன்று, சங்குநீர் விராகன் ஒன்று, சீனிக்காரம் விராகன் ஒன்று, பச்சைக்கற்பூரம் விராகன் ஒன்று, உரம் விராகன் கால் ஆகக்கூட்டி அரைத்து நன்றாகப் பொடி செய்து வைத்துக்கொண்டு தாம்பிரத்தட்டை அடுப்பில்வைத்து ஆவரை விரகுகொண்டு மெள்ளளரித்து, தட்டில் ஒருகரண்டி பசுவின் நெய்விட்டு அரைத்தபொடியை இட்டு கரண்டியால் தேய்த்து நன்றாக உருகும்போது ஆலாத்திகற்பூரம் நெல்லிக்காய் போலே ஐந்துகட்டி எடுத்துக்கொண்டு இதில் ஒருகட்டி எடுத்து தட்டிலிட்டு அழுத்தி, உருட்டி, மோகனமாலைக் குண்டுபோலே திரட்டித் துவாரமிட்டு, நன்றாக மெருகிட்டுப்பார்க்க மாணிக்கம் போலே ஆகும். இதனைக் கோர்வையிட்டு வைக்கவும்.

## பவழஇரத்தின வைப்பு

நல்ல சுத்திபண்ணின சாதிலிங்கம் விராகன் மூன்றரை, சங்குநீறு விராகன் இரண்டு, பச்சைக்கற்பூரம் விராகன் ஒன்றேகால், சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, ஏலம் இது வகைக்குப் பணவிடை ஒன்று ஆகக்கூட்டி, எருமைச்சீம்பாலி லரைத்து உலர்த்திப் பொடிபண்ணி வைத்துக்கொண்டு, தாம்பிரத்தட்டு அடுப்பிலிட்டு ஒரு கரண்டி நெய்விட்டு வைத் துக்கொண்டு அரைத்த சாதிலிங்கம் முதலிய தூள் போட்டு கரண்டியால் தேய்த்து, நெய்சிவந்தால் ஆலாத்திகற்பூரம் அஞ்சு கட்டி நெல்லிக்காயளவில் எடுத்துக்கொண்டு இதில் ஒருகட்டி எடுத்துக்கொண்டு நெய்யில்தேய்க்க நல்ல சாம்பிராணி உருட்டுப் போல உருட்டி திரட்டி மணியாக்கித்துவாரமிட்டு வைத்து நன்றாக மெருகிட்டுப்பார்க்க நல்லபவழம்போலே மணியா யிருக்கும். கோர்வையிட்டு பட்டுநூலில் கோர்த்து வைக்கவும்.

## வச்சிரமணி வைப்பு

குருந்தன்கல் விராகன் இரண்டு, பளிங்குக்கல் விராகன் இரண்டு, சீனிக்காரம் விராகன் இரண்டு, விளாம்பிசின்

விராகன் அரை, பச்சைக்கற்பூரம் விராகன் ஒன்று, ஏலரிசி, சாதிக்காய், நாகணம் வகைக்கு களஞ்சி ஒன்று ஆகக்கூட்டிப் பொடித்து வைத்துக்கொண்டு தாம்பிரத்தட்டு அடுப்பில் வைத்து எரித்து ஒருகரண்டி நெய்விட்டு அதில் மேற்படி சூரண மிட்டு, கரண்டியால் தேய்த்து நெய்சிவந்தால் ஆலாத்திகற்பூரம் ஐந்துகட்டி நெல்லிக்காயளவில் எடுத்துக்கொண்டு இதில் ஒருகட்டி நெய்யில் தோய்க்க நல்ல சாம்பிராணி உருட்டுப் போலுருட்டி திரட்டி மணியாக்கி துவாரமிட்டு வைத்து நன்றுக மெருகிட்டுப்பார்க்க, நல்ல வச்சிரமணிபோலே மணி யாய் இருக்கும். கோர்வையிட்டு பட்டுநூலில் கோர்வையிட்டு வைக்கவும்.

## இராசாக்களுக்கும் போசனம் பண்ணும்படி (சமையல் செய்ய)

நல்ல மலாக்காய்ச்சந்தணம் பலம் அரை, நல்ல அகில் வயிரம் உரைத்த சந்தணம் பலம் கால், புட்பதேவதாரச் சந்தணம் பலம் அரைகால், பூலாங்கிழங்கு, விளாமிச்சவேர், வெட்டிவேர், சமுத்திராப்பச்சை, கோரைக்கிழங்கு, சாதிக்காய், சாதிப்பத்திரி, கிரும்பு, ஏலரிசி ஆக நெய்விட்டுப் பொரித் துச்சூரணம் செய்து வைத்துக்கொண்டு, நல்ல சுத்தமான குடத்தில் நல்ல சுத்த சலம் எடுத்து வந்து முன்செய்த சூரணம் அஞ்சு விராகனிடை யெடுத்து இந்தக்குடத்தில் போட்டுக்கலக்கித் தெளிந்தால், அந்த சுத்த சலம் ஒரு பானை யில் ஒருபடி சலம்விட்டு உலைகட்டி வைத்துக்கொண்டு, நல்ல ஊசிச்சம்பா அரிசியை முத்தீட்டலுங் தீட்டிஎடுத்து நன் ருகப் பிடைத்துப்போட்டு நல்ல கோணியப்பட்டாய் கொண்டு வந்து பரப்பிவிட்டு அதின்மேல் அந்த அரிசியை பரப்பி கோணிப்பட்டுக் கொண்டுதேய்த்து, முனைபிரியா அரிசியாகப் மூன்றுமுறை நீர்யிறுத்துத்தெளி நீர்வாங்கி வைத்துக்கொண்டு கழுவின அரிசி உலையிலிட்டு சோறுகுழையாமல் பொங்கி யிறக்கவும்.

## கறிவகை

முந்தின சம்பாநீர்க்குடத்தில் வடிகட்டினநீர் ஒருபடி நல்ல சுத்தச்சட்டியில் ஒருபடி நீர் விட்டு அடுப்பில் வைத்து

எரித்து உலைகாஞ்சால் நல்ல துவரம்பருப்பு முத்தீட்டலுந்தீட்டி, கூட்டி, இது நேர்த்தியாக வெந்துயிறக்கவும். பருப்புநீர் ஒண்ணரைப்படி இறுத்து, அத்துடன் மிளகு காசிடை ஒன்றரை• கடுகு காசிடை இரண்டு, வெந்தயம் பணவிடை நாலு, சீரகம் பணவிடை இரண்டு, கருவேப்பிலை விராகன் அரை, வெள் வெங்காயம்காசிடை ஒன்று, மஞ்சள்காசிடை ஒன்று, சோம்பு காசிடை அரை, ஏலம் பணவிடை மூன்று, புளி காசிடை பத்து ஆக சம்பா கூட்டி அரைத்து மிளகு நீர் அடுப்பில் வைத்து பதமாகக்காய்ச்சி இறக்கி வைத்துக்கொண்டு சட்டியை அடுப்பில்வைத்து சட்டிகாயும்போது ஈரவெங்காயம் காசிடை மூன்று, அரிந்து சட்டியில் போட்டு வறுக்கவும், சிவந்து வரும் போது பசுவின்நெய் ஓர்கரண்டி விட்டு வேகவிட்டு ஈரவெங் காயஞ்சிவந்தால், அத்துடன் கடுகு காசிடை ஒன்று, வெந்தயம் பணவிடை நாலு, சீரகம் பணவிடை இரண்டு, கருவேப்பிலை பணவிடை ஐந்து, உளுந்துப்பொடி காசிடை ஒன்று, ஏலம் பணவிடை இரண்டு, தாளிசபத்திரி பணவிடை இரண்டு ஆக இவைகளை நெய்யில்போட்டு வறுக்கும்போது சீரகங் கடுகு பொறியும் பதத்தில் தாளித்த மிளகு நீரைமூடி யிறக்கினுல் சம்பார் மிளகு நீராகும். இதை எடுத்து வைத்துக் கொள்ளவும்.

## சம்பராக்கூட்டுக் கறிவைப்பு

சம்பாரத்தண்ணீரில் முன் அரிசி கழுவி அந்தகழுநீர் படி ஒன்று சட்டியிலிட்டு,கத்திரிக்காய் துணுக்குத் துணுக்காய் நறுக்கி தண்ணீரில்போட்டு வைத்துக்கொண்டு,மிளகுகாசிடை இரண்டு, மஞ்சள்காசிடை இரண்டு, கடுகு காசிடை இரண்டரை, சீரகம் பலம் நாலு, வெந்தயம்பணவிடை ஆறு, கருவேப்பிலை காசிடை ஒன்று, சோம்பு விராகனிடை அரை, தாளிசப்பத்திரி விராக னிடை அரை, ஏலம் விராகனிடை கால் ஆகக் கரண்டியிலிட்டு இரண்டு கரண்டி பசுவின் நெய்விட்டு ஈரவெங்காயம் விராக னிடை மூன்று, அரிஞ்சுபோட்டு அடுப்பிலேற்றி மிளகுவெடிக்க வேகவிட்டு வைத்துக்கொண்டு முன் சொல்லப்பட்ட மஞ்சளும் மறுபடி இரண்டு காசிடை ஈரவெங்காயமும் அம்மியிலிட்டு அரைத்து அம்மியிலிருக்குமுன் மிளகு அம்மியில் கொட்டி சம்பாரக்கழுநீர் தெளித்து நன்ருக அரைத்து வழித்துக்

கொண்டு நல்ல சம்பாவரிசி ஒரு கரண்டி ஊரப்போட்டுக் கல்லிவிட்டு நன்றாக அரைத்து ஏகத்துக்கு சம்பாரக்கழுநீர் விட்டுக்கரைத்துக் கத்திரிக்காய் கூடப்போட்டு நன்றாகக் கொதித்தபின், வெந்தசட்டியில் கொட்டிக்கொண்டு அந்தச் சட்டியை அடுப்பிலேவைத்து சட்டி காயும்போது இரண்டு கரண்டி பசுவின்நெய் விட்டு மூன்று காசிடை ஈரவெங்காயம் பொடிப் பொடியாயரிந்து சட்டி நெய்யில்போட்டு சேரச்சேர நன்றாய்ச்சிவக்க வறுத்து, வறுக்கும்போது எள்ளு, உளுந்து, பச்சைப்பயறு வகைக்கு காசிடை ஒன்று, சீரகம், வெந்தயம், கடுகு, கருவேப்பிலை வகைக்கு காசிடை ஒன்று, தாளித்ததில் போட்டு, அகப்பையில் சம்பாரக்கழுநீர் துவைத்துத் தேய்க்க கலகலவென்று தேய்த்துச் சமைத்தகறியில் கொட்டி அகப்பை யால் கிளரிக்கிளரிக் கொடுத்து மூடி கொதித்தால் இறக்கி வைத்துக்கொள்ளவும். எந்தக்காயில் கூட்டுக்கறி செய்தாலும் செய்யலாம்.

## கத்திரிக்காய் கறிபண்ண

நல்ல இளங்கத்திரிக்காயாகத் தருவித்து நெடுங்கீத்தாக மேல்தோல் வாங்கி சம்பாரக்கழுநீரில் போட்டு ஊறி, கழுவி யெடுத்துக் கொண்டு, பூர்வசம்பாரக் கழுநீர்க்குடத்து நீர் விட்டு சரி பார்த்து உப்புப்போட்டு வேக விட்டு நீர் இறுத்து வடித்துக்கொண்டு, மிளகு துட்டிடை ஒன்று, சீரகம் துட்டிடை கால், வெந்தயம் காசிடை அரை, கருவேப்பிலை காசிடை அரை, ஏலரிசி காசிடை அரை, நெல்லரிசிப்பொறி மாவு துட்டிடை ஒன்று, எள்ளுப்பொரி துட்டிடை இரண்டு, உளுந்துப்பொரிமாவு எடை இரண்டு ஆகப்பொடிபண்ணி வைத்துக்கொண்டு, முன் கத்தரிக்காயில் தூவி, குலுக்கி வைத்துக்கொண்டு, சட்டி காயவைத்து இரண்டுகரண்டி நெய் விட்டு வேகையில், ஈரவெங்காயம் இரண்டு துட்டிடை நறுக்கி நெய்யில்போட்டுச் சோரச்சோர வறுக்கவும். நீர்வத்தினால் ஏலம், கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, தாளிசைப்பத்திரி இது வகைக்கு விராகனிடை ஒன்று, உளுந்து விராகனிடை ஒன்று, எள்ளு விராகனிடை ஒன்று, கடுகு விராகனிடை ஒன்று ஆகப்பொடித்து வேகுகின்ற சட்டியில் ஈரவெங்காயத்தில் போட்டுச்சம்பார நீர்தெளித்து அகப்பையால் கலகலவென்று கத்திரிக்காய் கொட்டித்தாளித்து குலுக்கி ஒருஆவி வேகவிட்டு

மூடி யிறக்கிப்பதமாக மூடிவைத்துக் கொள்ளவும். இது சம்பார் பொரிக்கறி.

## சம்பார பச்சடிபண்ண

பாகல்காய் விரல் விரல் கனத்தில் வட்டம் வட்டமாக அரிந்து சம்பாரகுடத்துநீரில் ஊறப்போட்டு வைத்துக்கொண்டு, கடுகு துட்டிடை மூன்று, மிளகு துட்டிடை இரண்டு, வெந்தயங் காசிடை ஒன்று, சீரகம் காசிடை ஒன்று, சோம்பு காசிடை அரை, கிறும்பு காசிடை கால், சாதிக்காய் காசிடை கால், சாதிப்பத்திரி காசிடை கால், தாளிசப்பத்திரி விராகனிடை கால் ஆகச்சேர்த்து சரக்கெல்லாம் பச்சையாய்ப் புளித்ததயிரில் அரைத்துக்கொண்டு, மஞ்சள் காசிடை இரண்டு ஈரவெங்காயங் காசிடை ஆறு ஆகயெல்லாஞ் சேர்த்து அரைத்துக்கொண்டு, முன்னரிந்த பாகல்காய் சம்பார நீர்விட்டு வேகவைத்து, நீரிறுத்துப்போட்டு வேறே சட்டியில்போட்டு, முன்னிருத்த சம்பாரங் காயில்போட்டு பிசரிக்காய்மறைய நல்லபுளித்த தயிர்மிதக்க விட்டு நன்றாக உடைந்து போகாமல் வேகவிட்டு யிறக்கவும். இது சம்பார்பச்சடி. இப்படி எந்தக்காயிலும் பச்சடிபண்ண நன்று.

முதற்பாக முற்றும்

---

# இரண்டாம் பாகம்

# (மருந்து செய் முறை)

## அதிசார குளிகை

சாதிக்காய், இந்துப்பு, சுக்கு, நவச்சாரம், சாதிலிங்கம், திப்பிலி, முத்தகாசு, பொன்னூமத்தைவிரை, கிரும்பு இதுவெல்லாஞ்சமன்கூட்டி எலுமிச்சம்பழச்சாற்றில் ஒரு நாளரைத்து, மறுநாள் ஊமத்தஞ்சாற்றில் ஒரு சாமமரைத்து, மறுநாள் இஞ்சிச்சாற்றிலரைத்து குன்றியளவு உண்டைசெய்து ஒருவுண்டை கொடுக்கவும். அதிசாரந்தீரும். சூலையினுல் வந்தக் கிருணிக்கு சக்கரையிலிடத்தீரும். இலுப்பை வேர்ப்பட்டை, சுக்கு, வெல்லம் இருநாழி நீரில்விட்டு உழக்காகக்காய்ச்சி ஒரு குளிகை கொடுக்கக்கிருணி தீரும்.

## அக்கினிக்கட்டு

கரையானரித்தமண்ணும், கரையானும், அரிதாரமும், எருக்கன்வேரும் அரைத்துப் பொடிசெய்து அந்தப்பொடியை நினைத்தவள் மேலிடவசமாவாள். இந்தப்பொடியை வெள்ளாட்டுப்பாலிலரைத்து உள்ளங்காலில் தடவிநடக்க நீர்ப்படாமல் நடக்கலாம். இந்தப்பொடியுஞ் செவ்வரணைவாலும் பொடிச்செய்து சீலையிலூட்டி விளக்கேற்ற அந்த வெளிச்சங் கண்டபேர்கள் ஆடுவார்கள்.

## அசுகந்திச்சூர்ணம்

கிராம்பு பலம் கால், சிறுநாகப்பூ பலம் அரை, ஏலம் பலம் ஒன்று, மிளகு பலம் அரை, திப்பிலி பலம் நாலு, சுக்கு பலம் எட்டு, அசுவந்தாதி பலம் பதினறு, சீனிச்சர்க்கரை பலம் ஐந்து, இவைகள் எல்லாவற்றையும் பொடிச்செய்து அளவிட்டுக் காலை மாலை உண்ணவும். இதனுல்,

"சயம் குன்மமட் டபீலிகை குத்துவாயு தீராப்பிரமேகம்
[பாண்டுசோகை
ஐயுடனே யிருமல் ஏப்பீளைப்புக்காய மங்கச் சயவரச்சி
[கைகாலனல் போலக்காந்தல்

மெய்வெளுரல் கண்வெளுரல் மெய்யெனமண்டலங்
[கொண்டருந்துவீராகுல்
கையில் நெல்லிக்கனியெனவே அசுவந்தாதிக்கற்ப
[மெனக்கருதலாமே''.

(பொ-ள்.) க்ஷயத்தால்வருங் குன்மநோய், எட்டுவகைப் பீலிகைகள், எண்பது வாதநோய்கள், வெள்ளை, பாண்டுநோய், சோகைநோய், கபத்தால் வரும் இருமல், ஏப்பம், உடல் களைப்பு, க்ஷயநோயில் உண்டாகும் நாவறட்சி, கையும் காலும் அனல்போல் எரிதல், உடல் வெளுத்துப்போதல், கண்வெளி றல் இவைகள்போம்.

## அண்டவாதமாறுக்கும், பெயர், குணம், மருந்து

பெயர் :—(1) ஏறுவாதம், (2) இறங்குவாதம், (3) வீங்குவாதம், (4) வலிவாதம், (5) அந்திரமுட்டிவாதம், (6) நரம்புவாதம் என வாதம் ஆறுகும்.

**இதில் ஏறுவாத குணம்** :—குளிர், சுரம் உண்டாய் விரை வீங்கி நோகும். கண்ணில் புகை சூழ்ந்தாற்போலிருக்கும். கால் நரம்பிழுத்துக் கொள்ளும். மூச்சுத்தடுமாறும்.

**இறங்குவாதத்தின் குணம்** :—திரண்டு விதைவீங்கிக் கனத் துக்கொள்ளும், நிமிரவொட்டாது. வயிறு ஒருபுறத்தேயிழுத் துக்கொள்ளும், குளிர்காய்ச்சலுமுண்டாம், அசனம்பண்ண வொட்டது. அடிக்கடி ஏப்பமுண்டாகும், காத்துப்பரியும், மலந்தீயும்.

**வீங்குவாதக் குணம்** :—அண்டம் இளநீர்போலே வீங்கும். நடக்கவொட்டாது. காலிரண்டின் நரம்பிழுத்துக்கொள்ளும். அனல்கண்டால் எரிவெடுக்கும். கைப்புத்தின்றல் அடங்கும். மிளகு பொருந்தாது.

**வலிவாத குணம்** :—மிகுதியாக வயிற்றிலிரைச்சல் உண்டா கும். மார்புளையும், விதையும் வீங்கும். அடிக்கடி வாந்தி யாகும். வாய்ப்புண்ணுகும்.

**அந்தரமுடிவாத குணம்** :—விரை பலாக்கொட்டையைப் போல் மேல் ஏறிக்கொள்ளும். கைகொண்டமுக்கினுல் கீழே விழும். வாயாலெடுக்கும். வயிறு மிகவலிக்கும். வாய்வு மேல் நோக்கி ஏப்பமிடும்.

**நரம்புவாத குணம்** :—வாய் ஓயாமல் வாந்தியை உண்டாக்கும். பின் மலமாக வாந்தியாது. அஃது மலத்தைப்போலவே நாற்றம் பெறும். தலைவலி யுண்டாம். விக்கலெடுக்கும். வீங்கும். தினவுண்டாகும். விரையை அமுக்கினுல் வலியாது. கருணைக்கிழங்கு போலே தடிக்கும்.

## மருந்து

**இந்த வாதம் ஆறுக்கும் எண்ணெய்**:-ஆமணக்கெண்ணெய் ஒரு நாழி, வெள்ளுள்ளி பலம் இருபது, பெருங்காயம், கூகைநீறு, புகையிலை, உப்பு, இந்துப்பு, கல்லுப்பு, கடுகுரோகணி, சதகுப்பை, தேவதாரம், ஆயில்பட்டை, கடுஞ்சீரகம், கற்சீரகம், சிறுபுள்ளடி, கொள்ளு, சிறுதேக்கு, சித்திரமூலம், திப்பிலி, திரிகடுகு, சங்கங்குப்பிவேர், வட்டக்கிலுகிலுப்பை வேர், இசங்கம்வேர், கழற்சிவேர், உசிலம்வேர், முடக்கொத்தான் வேர் இவைவகைக்கு பலம் ஒன்று கொண்டு ஒன்றிரண்டாக இடித்து, அதில், வெள்ளாட்டின்பால் வார்த்தரைத்து எண்ணெயில் கலக்கிக்காய்ச்சி, நாலு காசிடைகொள்ள அண்டவாதங்கள் ஆறுங் கண்காணுதோடும். ஒரு மண்டலம் சாப்பிட்டு வரவும், கைகண்டது, இச்சாபத்தியம்.

## கண்மை

பழந்தின்னி வௌவால் ஒன்று கொண்டுவந்து அதன் கண்ணில் இரண்டுஅட்டை, கடிக்கவிட்டு இரத்தங்குடித்து விழுந்தபின் அதனை எடுத்துக்குசவன் சூளையில், கவிழ்ந்துகிடக்கிற ஓட்டை எடுத்து அந்த ஓட்டில் இரத்தத்தைப்பீச்சி, அதன் அளவு சித்தாமணக்கெண்ணெயில் விளக்கேற்றி, மையெடுத்து சிமிளில் அடைத்து வைத்துக்கொண்டு, வேண்டியபொழுது பணவிடையெடுத்துச் சித்தாமணக்கெண்ணெயில் குழைத்துக் கண்ணில் மையிட கண்ணுக்கு அழகைத்தரும்.

**வேறு** :—காகத்தின் வாயில் காரும் பசுவின்பாலைப்புகட்டி, இரண்டுநாள் சென்றபின் அதனின் கண்ணும் அதன் ஈரலும், பித்தும், ஒருதாமரை மொட்டும், சேர்த்து செவ்வகத்திச் சாறு விட்டரைத்துச் சீலையிலூட்டி உலரவிட்டுத் திரியாக்கிப்பசுவின் நெய்யை குசவனோட்டில் விட்டு மேற்படிதிரியையிட்டுக்கொளுத்தி, மைபிடித்து எடுத்துப்பசுவின் நெய்யில் குழைத்து, வெற்றிலையில்தடவி கண்மையாக வழங்க நன்று.

## அண்டவாதத்துக்கு

வெள்ளெருக்கன்கிழங்கு பலம் இரண்டு, கழற்சிக்காய்ப் பருப்பு பலம் இரண்டு, கழற்சிக்கொழுந்து பலம் இரண்டு, கழற்சிப்பட்டை பலம் இரண்டு, வெல்லம் பலம் பத்து சரக்கு களை உலர்த்திப்பொடித்து ஒன்றுகூட்டி நன்ருக மெழுகுபோல் இடித்து எடுத்து அதனில் நெல்லிக்காயளவு மூன்று நாள் அந்தி சந்தி உண்டு, பத்தியம் : புளிப்பு, உப்பு நீக்க அண்டவாயுக்கள் போம்.

## செத்தவர்களை, எழுப்ப

நேர்வாளம், மிளகு, இரதம், மகிழம்வித்து, பேய்ப்பீர்க்கு வித்து, தேவதாரு இவைகளை ஓர் அளவாகக்கொண்டு எலுமிச் சம்பழச்சாற்றில் ஏழுநாளூறப்போட்டு, அரைத்து உண்டை செய்து உலர்த்திக்கொள்ள ; எல்லா நஞ்சுகளுக்கும், உயிர் போகும்படிசெய்யும் சன்னி முதலியவைகளுக்கும் ஒரு வுண்டை எருக்கிலைச்சாற்றிலரைத்துக் கையான்தகரைச்சாற் றில் கலக்கி, காதிலிடவும். செத்தவனும் பிழைப்பான் ; இல்லை யேல், ஒருஉருண்டையை சிறுநீரிலுரைத்து இரண்டு கண்ணிலு மிட்டு துணியை நீரில்நனைத்து மூன்றுநாழிகை மூடிவைக்கவும். எழுந்திருப்பான் ; இது கைகண்டது.

**வேறு** :—கீரியின்நாக்கு, மயில்நாக்கு, கெருடன்நாக்கு இவைகள் மூன்றும் ஒன்ருக உலற்றி எலுமிச்சம்பழச்சாற்ருல் அரைத்து அதனைக் கடைவாயில்தடவ, பாம்பு முதலியவை களின் நஞ்சுபோம் ; இது கைகண்டது.

## அண்டவாதத்துக்கு

(1) நல்ல வேளை வேருந்தூரும் பிடுங்கிக் காடி வார்த்து இடித்துப் பொட்டணங்கட்டி ஒற்றிடமிடவும்.

(2) கழச்சிக்கொடிக்கொழுந்து நாலு காசிடை மூன்று நாளுக்குக் கொள்ளவும்.

(3) கழ்ச்சிவேரைத் துவைத்து எண்ணெயில் கலந்து சூரிய புடம்வைத்து, இரண்டு காசளவு உள்ளுக்குக் கொள்ள வும், விரையின்மீதும் தடவவும். இப்படி மூன்றுநாள் செய்து பத்தியம் பிடிக்கவும்.

## அரிதாரபற்பம்

பேயன்பழங் கொண்டுவந்து தோலுரித்து அதற்குள்ளே அரிதாரத்தைக் கட்டியாய்ப்பொதிந்து தோலைமீண்டும்மூடி முப்புரி நூல்கொண்டு கட்டி சுற்றி அதை நீலக்கத் திரிக்காயுள்வைத்து, நூல் சுற்றிக்கட்டி மறுபடியும் பூசணிக் காயுள்வைத்து ஏழுசீலை மண்செய்து அரையாள் ஆழம் குழி வெட்டி வரட்டியிட்டுப் புடம்போட்டெடுக்கப் பற்பமாகும். அந்தப் பற்பம் ஒரு அரிசி எடையுடன் மாட்டுவாலைச்சுட்டுச் சாம்பலுந்தேனுங்கூட்டிக் கொடுக்க, பெருநோய், குரைநோய், வெளுப்பு, பலபலபுண், கிரந்தி, பரங்கி நீங்கும். பத்தியம் காக்கவும்.

## அறுசோகைக்கு

"நிம்பதளிர்கையாஞேடு—னிரைசுக்கயசமோதம்
னிரைசீரகமதுரத்தோடு செவ்வாரசுகிஏலம்
கம்பக்கஙிமதுகொடொடு கையானதுகூட்டி
கருதும்படிசரியாயொரு பலமாஙிரைகொள்ள
வெம்பித்திடு வெயில்காயவைமிகுசூர்ணமதனை
விம்போதினிலுறுசீனியில் வெதுகாண்படிகொள்ள
கும்பித்திடுமுதிரத்தினில் குடிகொண்டிடும்பொருமல்
கொடிதாகிய அறுசோகையும்—எழுவாசுவுமறுமே".

## குக்கில்நெய்

நெய்நாழி, பசுவின்பாலிருநாழி, புதுப்பாண்டத்திலிட்டு வெள்ளைக்குங்கிலியம் பலம் கால், பொடிசெய்துபோட்டு வைக்கத்தயிராம். இதனை மத்துகொண்டு கடைந்து நெய்யை வழித்து ஒரு நார்த்தங்காயளவு தின்ன, வாதநோய்கள், அத்தி சுரம், வறட்சி, உடலின்அனல், மூலக்கடுப்பு, இருமல் இவை யெல்லாந்தீரும்.

## அக்கினிகுமாரன்

காந்தம், வெடப்பாலைஅரிசி, அதிவிடயம், பொன்னிமிளை, நீலம், அரிதாரம், கற்கடகசிங்கி, சுக்கு, நற்சீரகம், கடுகு ரோகிணி, கார்போகஅரிசி, சாதிக்காய், கிராம்பு, இந்துப்பு, இரசம், சவுக்காரம் வகைக்கு சமன்கூட்டி செம்பொன்னெரிஞ் சிச்சாறு கொண்டு மூன்று நாளரைத்து கடலைப்பிரமாண

உண்டைசெய்து நிழலிலுலர்த்தி, சன்னிக்கு இஞ்சிச்சாற்றி லிடவும், கழிச்சலுக்குப் பசுவின்மோரிலிடவும், வயிற்றெரிவுக் குத் தாமரைக்கிழங்கின் சாற்றிலிடவும், வாயுவுக்குத் தேங்காய்த் தண்ணீரிலிடவும், கோமயத்திலுமிடலாம். கைகண்டது.

## அமுக்கருக்கற்பம்

அமுக்கரு சமூலங் கொண்டுவந்து நிழலிலுலர்த்திப் பொடி செய்து சர்க்கரையும் நெய்யும் கூட்டித் தின்றால் ஆண்மையுண் டாம்.

ஆட்டாங்கொட்டைஇலை, சுக்கு, திரிபலை வகைக்குக் கழஞ்சி, நாலு படிநீரில் போட்டுக் கால்படியாகக் காய்ச்சி இறக்கி, அதில் இந்தப்பொடியையும் சிறிது கூட்டி நாற்பத் தெட்டுநாள் கொள்ள பித்தகபம் போம்.

பசுவின்மோரில் கொள்ளப் பித்தம்போம். வயிற்றுப்புழுக் கள் சாகும்; தாகமுண்டாகும்.

சித்தாமணக்கெண்ணெயிலாவது இரண்டுமணி உப்புக் கூட்டியாவது தின்ன சரீரம் பருக்கும். தயிரில் தின்னப் பாண்டு தீரும். பசுவின் வெண்ணெயில்தின்ன வயிற்றுப்புழுச்சாகும். எள்ளும் மஞ்சளும் கூட்டித்தின்ன நரைதிரைமாறும். கடு கெண்ணெயில் தின்ன நரைதிரைமாறும், பலமுண்டாம். புத்தி யுண்டாம். இந்த மருந்து செய்ய மார்கழி நன்றும்.

## அசனவில்வாதித்தைலம்

மிளகு, திப்பிலி, வசம்பு, ஒரு உள்ளிப்பூண்டு, வலம்புரிக் காய், அரத்தை, சதகுப்பை, ஏலம், இலவங்கம், அதிமதுரம், செண்பகப்பூ, தகரை, வெள்ளிலோத்திரம், அதிவிடயம், இந்துப்பு, காவிக்கல், மஞ்சட்டி, கொத்தமல்லி, வெந்தயம், முத்தக்காசு, கடுகுரோகணி, பற்பாடகம், கல்நார், கலமதம், சீனிக்கற்கண்டு, பெருங்காயம், கடல்நுரை வகைக்கு பலம் இரண்டு, இடித்துப் பொடிச்செய்து ஒருபடி நெய்யில் மெழுகு பதத்தில் காய்த்து வடித்து, இந்த நெய்யைக்குடித்து வரவும். தலைமேல் துவளைபோடவும்.

## அக்கினிகுமாரன் செந்தூரம்

இரும்புப்பொடி, உறுக்குப்பொடி, பித்தளைப்பொடி, செம் புப்பொடி வகைக்குப் பலம் இரண்டு, வெள்ளிப்பொடி பலம்

இரண்டு, பொன்பொடி பலம் ஒன்று, ரசம் பலம் ஒன்று, சாதிலிங்கம் பலம் ஒன்று, காந்தம் பலம் ஒன்று, அரிதாரம் பலம் ஒன்று, வெண்காரம் பலம் ஒன்று, கந்தகம் பலம் நாலு, பூனீறு பலம் ஒன்று இவைகளைச் சுத்திசெய்து கலவத்திலிட்டு கற்றாழைச்சாற்றில் ஒருசாமம், ஆயிலியப்பட்டைச்சாற்றில் ஒருசாமம் நன்றாயரைத்து ஒரு கலசத்திலிட்டு மேலொரு ஓடுமுடி கலசமுகத்தில் ஏழுசீலை மண்செய்து, சிறு புடத்திலிட்டு எடுத்து மீண்டும் அவ்வாறே அரைத்து பெரும் புடமாகப் போட்டெடுக்கச் சிவந்திருக்கும். சிவந்திருக்காவிட்டால் மறுபடியும் அரைத்து ஒருபுடம் போட்டு எடுக்கவும். இச்செந்தூரத்துடன் நாவி, கடுகுரோகணி, திரிகடு ஆக வகைக்குப்பலம் கூட்டிச்சிவப்பி முலைப்பால்விட்டு அரைத்துப் பண விடையாக உண்டைபிடித்து உலர்த்தி, தந்தச்சிமிழில் வைத்துக்கொள்ளவும்.

**இதனால் தீரும் நோய்களும் அவைகளுக்கான அனுபானமும் :—** மாதுளம்பழத்தின் சாற்றில் செந்தூரம் மூன்றுநாள் ஆறு போது கொடுக்க மேகம் இருபதுந் தீரும்.

தேனில் பத்துநாள் கொள்ள சயமிளைப்பு முதலிய இருமல் நோய்கள் தீரும்.

சுக்கு, திப்பிலி, மிளகு வறுத்துப் பொடிசெய்து வெருகடியுடன் செந்தூரங் குன்றியிடைகூட்டி அரைமண்டலந்தின்ன வாதம் எண்பதும், குன்மமெட்டுந் தீரும்.

பரங்கிப்பட்டை, பிரப்பங்கிழங்கு, கருஞ்சீரகம் இவைகளைப் பொடிசெய்து வெருகடிதூளில் செந்தூரம் குன்றியிடை கொடுக்கச் சூலை பதினெட்டும், கிரந்திப்புண் முதலான நோய்களும் தீரும்.

தூதுவளை பொடிசெய்து வெருகடிதூளில் செந்தூரங் குன்றியிடை சேர்த்து அரைமண்டலங் தேனில் கொள்ள சிலேற்பனந் தொண்ணூற்றாறுந் தீரும்.

சுக்குக்குடிநீரில் செந்தூரங்குன்றியிடைகொள்ள தொந்த வாயுவாலுண்டானவை யெல்லாந்தீரும். இன்னும் மற்ற நோய்களுக்கும் தக்க அனுபானமறிந்து கொடுக்கின் பலவகைப்பட்ட வியாதிகளுந் தீரும்.

## அஞ்சனவுண்டை

சுக்குமிளகுதிப்பிலி நற்சோற்றுப்புவெள்ளுள்ளி
தக்கக்கொந்தளம்பூபணி சப்பூவசம்புதன்னுடனே
ஓக்கத்தேசிப்பழச்சாற்றில் ஒன்றுயரைத்தஞ்சனவுண்டை
மெய்க்குங்குதிரைவலிதீர மீளத்தேசிச்சாத்திலிடே.

## நசியம்

பூலம்பழமும்பூதியரைப்(பும்) புதியமிளகுயிக்துப்பு
ஆபத்தடங்குமகத்திப்பா லதுவோடொக்கப்பொடிசெய்து
தாவுமுலேப்பால்தனில்கலக்கி தப்பாதிரண்டுநாசியுட்
பாவகபாலவலிதானும் பசாசுபறந்துபோமென்றே.

வெங்காயுள்ளிநேர்வாளம் மிளகுசுக்குதிப்பிலியும்
உன்பாய்க்கடுகுபெருங்காய நற்சீரகமும்வெந்தயமு
மண்பால்விளைந்தகந்தகம் வசம்புவெளுத்தபிசின்காரம்
பாருசமோமுசுறுமுட்டை யுடனேதானேகொள்ளு
[மன்னே.

## குதிரைவலிப்பிற்கு

கொள்ளேகுதிரைவாலரிசி குருத்துநொச்சியாடாதோடை
முள்ளேஉழக்குக்குருவண்டு முருங்கைமூலிதூதுவளை
வேல்மிக்கசாறணைமீ ருமல்சத்தேகொடிவேலி
உள்ளேயெரித்துவேப்பெண்ணெய் உதவகுதிரைவலி
[போமே.

குத்தாங்கொடுத்துமூன்றுநாள் கொல்லாதிருக்கில்
[ஏழாநாள்
தக்கநாள்விட்டொன்பதானுள் அறிந்தேஅடுத்துமருந்து
[செய்ய
உத்தாக்காலிருபுறத்திலுள மூச்சுமுதல்தான்மேல்
[நோக்கில்
செத்தாரிவரேதிண்ணமெனத் தளிந்தேயுரைக்கலாமே
[தான்.

## அண்டவாதத்திற்கு

சித்தாமணக்கெண்ணெய் உழக்கு, கழற்சிப்பருப்பு நாலு, இதன் நஞ்சு யெடுத்துப் போட்டு நாலு முட்டைக்கருவும்

எண்ணெயிலிட்டுக் கழற்சிப்பருப்பைப் பொடித்துப் போட்டுப் பதத்திலிறக்கி எண்ணெயைத் தேய்த்து வெந்நீர் வைத்து முழுகவும்.

## அஞ்சனம்

செருப்படி, செங்கழுநீர், ஊமத்தை இவைகளைச் சமூலம் பிடிங்கிச் சாறெடுத்து, வகைக்குப்படி ஒன்று, சிறுநீர் படி ஒன்று, விட்டுக் கலந்து செங்கீரைச் சாறுவிட்டுப் புதுஓட்டில் தடவி உலர்த்தி சித்தாமணக்கெண்ணெயிட்டுக் கலந்ததைத் துணியில் துவைத்து உலர்த்தித் திரியாக்கி விளக்கேற்றி மை பிடித்து சித்தாமணக்கெண்ணெயில் குழப்பி சிமிழியில் அடைக்கவும். இந்த மையைத்திலதமிட நாவடங்கும்.

## அரக்குத் தைலம்

கொம்பரக்கு பலம் அரை, மலாக்காய்ச்சந்தனம் பலம் அரை, தேவதாரம் பலம் அரை, அகில்கட்டை பலம் அரை, மஞ்சட்டி பலம் அரை, வெட்டிவேர் பலம் முக்கால், விலாமிச்சம்வேர் பலம் கால், கடுகுரோகணி பலம் கால், மரமஞ்சள் பலம் கால், சதகுப்பை பலம் அரைக்கால், செங்கழுநீர் பலம் அரை, கோஷ்டம் பலம் அரை, குங்குமம் பலம் அரை, கோரோசனம் பலம் ஒன்று, புனுகுச்சட்டம் பலம் ஒன்று, சாதிப்பத்திரி பலம் மூன்று, சாதிக்காய் பலம் முக்கால், கிரும்பு பலம் அரை, ஏலம் பலம் முக்கால், அதிமதுரம் பலம் முக்கால், தாளிசப்பத்திரி, திப்பிலிமூலம் வகைக்குக்கால் பலம், மஞ்சள் பலம் அரைக்கால், ரேணுகம் பலம் அரை, கருநாவி பலம் அரைக்கால், அமுக்கருக்கிழங்கு பலம் கால், பெருங்குரும்பை பலம் ஒன்று, மாகாளிக்கிழங்கு பலம் இருபத்தொன்று, மெருகங்கிழங்கு பலம் இருபத்தொன்று, நன்னாரிவேர் பலம் இருபத்தொன்று இந்த மருந்தை உரலிலிடித்து வைத்துப் பசுவின்பால் படிஇரண்டு, மோரு படிஇரண்டு விட்டுப்பிசைந்து கடைச்சரக்கையும் பொடிபண்ணிப்போட்டு எண்ணெயும் விட்டு வேகவைத்து மெழுகுபதத்திலிறக்கவும். மூன்று நாளைக்கொருக்கால் முழுகி வரவும். இதனால் வாயு, பொருமல், இரைப்பு, கால்கடுப்பு, இடுப்புப்பிடிப்பு, பீனிசம், வெட்டை ஆகிய நோய்கள் தீரும். கைப்புப்புளிப்பு விடவும்.

## அண்டவாதத்திற்கு

விளக்கெண்ணெய் படி முக்கால், ஈரவெங்காயஞ்சிறங்கை ஒன்று, புங்கங்கொழுந்து, கழற்சிக்கொழுந்து, வாதமடக்கிக் கொழுந்து, வரிக்கற்றாழைவேர், சாரணைவேர், முடக்கொத்தானிலை, ஓமம் இவையெல்லாம் சமன்கொண்டு இடித்து எண்ணெயில் வேகவைத்து நல்ல பதத்திலிறக்கி நாளொன்றுக்குக் கரண்டிவீதம் ஐந்துநாள் சாப்பிட ஐந்துநாள் பத்தியங் காக்க அண்டவாயுக்கூட்டங்கள் நீங்கும்.

## அரையாப்பிற்கு

பழம்புளியை, கோழிமுட்டை வெள்ளைக்கரு, எருக்கம் பால் இவ்விரண்டிலுமரைத்து அதை, அரையாப்பைக்கசக்கிய பின் வெந்நீர் விட்டு கழுவி அதன் பிறகு பத்துப்போடவும் புரை விழுந்தால் புங்கம்பால் விடவும்.

## அத்திசுரம் சோகை பாண்டு சகலத்திற்கும்

பசுவின்நெய் நாழி, ஆடாதொடைச்சாறு ஒருநாழி, திப்பிலி, அத்தித்திப்பிலி, இந்துப்பு, சுக்கு, கொடிவேலிவேர், சவுக்காரம் வகைக்கு பலம் அரை, கலவத்திலிட்டு மேற்படிச் சாற்றில் கூட்டி நெய் ஒருபடி கூட்டிக் கலக்கி மெழுகுபதத்தில் காய்த்து வடித்துக் காலையில் ஒருகரண்டியளவு கொடுக்க பாண்டு, மூலக்கிராணி, மந்தசயம், நெஞ்சுக்கட்டு, கிறுகிறுப்பு, அத்திசுரம் இவை யாவும் தீரும். பத்தியங்காக்கவும்.

மேலும் மாலையில் திப்பிலி, திரிபலை, கடுகுரோகணி, வில்லைவேர், வேப்பம்பட்டை, முந்திரிகை, விலாமிச்சம்வேர், இந்துப்பு இவை வகைக்குப் பலம் அரை, இரண்டுபடி தண்ணீர் விட்டு நாலொன்றாய்க்காய்ச்சி உள்ளுக்குக்கொடுத்து வரவும். காலையில் நெய்யும் சாயங்காலம் குடிநீரும் கொடுக்கவும். கைகண்டது.

## அதிசாரத்திற்கு

குமிழங்காய்ச்சாறு, இருளிக்கிழங்குச்சாறு, பால், நெய் வகைக்கு நாழியாக ஒரு பானையிலிட்டு அத்துடன் திரிகடுகு, திரிசாதம், நெல்லிப்பருப்பு, ஓமம், கச்சோலம், மாசிக்காய், இந்துப்பு, வெள்ளுள்ளி, நற்சீரகம், கொருடப்பச்சை, நன்னாரி

வகைக்குப் பலம் ஒன்ருகக்கொண்டு இளநீரிலரைத்துக்கலக்கி, எரித்து மெழுகு பதத்தில் வடித்து, ஒரு காசளவு கொடுக்க எல்லாவகை கழிச்சல் நோய்களும் தீரும்.

**வேறு** :—திரிகடுகு, பெருங்காயம், இந்துப்பு, நற்சீரகம், கருஞ்சீரகம், வெள்ளுள்ளி, ஊசிக்காந்தம் வகைக்கு பலம் ஒன்று, தனித்தனியே வறுத்துப் பொடிசெய்து, கழிச்சலுக்குத் தூதுவிளங்காயளவு தேனில் கொள்ளவும். ரத்தம் விழுந்தால் அஞ்சு நெல்லிப்பருப்பெடுத்துத் தண்ணீர் விட்டரைத்துப் பசுவின்மோரில் அவித்ததண்ணீர் போக்கிக் காசிடைப்பொடி மேற்படி மருந்துடன் கொடுக்கத்தீரும்.

## அதிசாரவாயுவின் குணம்

குடல்பிரண் டிரைத்துநொந்து குருக்கினில் விலாவலிக்கும்
உடல்செவி கட்டுக்கைகால் ஓய்ந்துமேற் புளித்தேக்கிட்டுப்
பிடித்தனம் பெருகவுண்டாம் பருகுசேர்மலங்கழியும்(?)
அடிக்கடிவயறும்போகும் அதிசாரவாயுவாமே.

[ (பொ-ள்.) அதிசார வாயு நோயில், குடலைப்புரட்டச் செய்து நொந்து குறுக்கே பாய்வதுபோல் விலாப்பக்கம் வலிக்கும். உடல், கால் கை சோர்வடையும். அடிக்கடி புளித்தேப்பமுண்டாகும். வயிறு அடிக்கடி வலித்துப் பிடித்துக்கொண்டது போல் நோகும். அடிக்கடி வயிறு நொந்து சேறுபோல கழியும்.]

## அதிசாரசுரத்துக்கு

" ஆவின்பாலும் அன்புறுசீனியும்
மேவுசாத்திர பேதியுங்கூட்டியே
தாவிஞற்பது நாளதுதானுண்ண
வாவுமுட்ச்சுர மோடிப்பதுங்குமே "

[ (பொ-ள்.) சாத்திரபேதியை பொடிசெய்து வெருகடி பசும் பாலும் சீனியும் கூட்டிக் குடிக்கவும். அதிசாரசுரம்போம்.]

## அத்திசுரத்திற்கு லேகியம்

கோஷ்டம் பலம் எட்டு, நற்சீரகம் பலம் நான்கு, அதிமதுரம் பலம் நாலு, சந்தனம் பலம் ஒன்று, இவைகளைச் சூரணஞ்செய்து இளநீர் படி இரண்டு, நெய் படி அரைக்கால், தேன் படி விசம், சீனி வீசை முக்கால் இவைகளை

யெல்லாம் இளநீரில் கலக்கிக் காய்ச்சிப் பதத்தில் பொடி தூவிக் கிண்டிக்கொள்ளவும்.

## அரையாப்புக்கு

பெருங்காயம், இந்துப்பு, குருன், சுக்கு இது நாலும் சமன் கொண்டு கடுத்துருக்கீ(?) லரைத்துப்பூச, மாறும்.

அகப்பைக்காம்பை அடுப்புக்கும்பியில் புதைத்து எடுத்து சூடோடேசுடப்போம்.

அரையாப்பளவில் ஓடு எடுத்து அபின்தடவி அரையாப்பில் வைத்துக்கட்ட மாறும்.

நல்ல சந்தனம் முலைப்பாலிலுரைத்துப்பூச மாறும். கை கண்டது.

வெள்வெங்காயமும் மாவிலங்கஇலையும் இடித்து வீக்கங் கண்டது இடபுறமாயின் வலது பெருவிரல் நகக்கண்ணில் கட்டவும். வலதுபுறங்கண்டால் இடது புறங்கட்டவும். இப்படி மூன்றுநாள் வைத்துக்கட்டவும் தீரும்.

## அட்டசூரணம்

சீரியமூவருஞ் சிறந்தமூவருங்
கூரியஒருவரும் கோடியகாயமும்
ஆரியவடமலை அசமதாகமும்
நேர்படஅரைத்திட நெருப்போடொக்குமே.

[(பொ-ள்.) சுக்கு, மிளகு, திப்பிலி, கருஞ்சீரகம், சீரகம், ஓமம், காயம், இந்துப்பு வகைக்கு ஓர்அளவாக எடுத்து வெதுப்பிப் பொடிசெய்து கொள்ள பசித்தீயைத்தூண்டி செரிப்பை உண்டாக்கும். கழிச்சல் போம்.]

## அன்னுக்குப்புத்துக்கு ஆருதபுண்ணுக்கு வாயில் வருகிற சகல வியாதிக்கும், விக்கத்துக்கும், பாண்டுவுக்கும், மகோதரம் போலிருக்கின்றதற் கும் வாயில்கொப்பளிக்க மருந்து

சுண்ணும்புக்கல்லாகிலும், வெந்தசிப்பியாகிலும், ஏதேனும் ஒன்றை ஒரு ராத்(?) (அதில்) மூன்றுபிரு சுக்கைத்தண்ணீர் விட்டுக் கரைத்து பத்து நாளூரப்போட்டு, ஒரு நாளைக்குப் பத்து

முறை கிண்டவும். மேல்வருகின்ற நுரையை யெடுத்துப் போடவும். இப்படிப் பத்துநாள் பத்துமுறை கிண்டவும். அந்தத் தண்ணீரைத் தெளியவைத்து சுண்ணும்புசத்து இல்லாமல் நீரையெடுத்து செம்புப்பாத்திரத்தில் விட்டு வைத்துக்கொண்டு, அரை ஆழாக்காக வேளைக்குக்கொடுத்தும், மேலும் அந்த நீரிலேயே மூன்று கழஞ்சி நவச்சாரம்போட்டு, செம்பு பாண்டத்தில் வைத்திருந்த அந்த நீரைக்கொண்டு வாய் கொப்பளிக்கவும். வீக்கத்துக்குச் சீலையில் துவைத்துப் போடவும். கண்ணுக்குக் கண்ணிலிடவும். புண்ணுக்கு ஒரு குப்பித்தண்ணீருக்கு கழஞ்சி சவ்வீரம் பொடித்துப் போட்டு அந்தத்தண்ணீரைச் சீலையில் துவைத்து ஆருதபுண்ணில் விடவும். கைகண்டது.

## அசனவில்வாதி எண்ணெ

ஆக்முரத்தானே அசனவில்வாதியெண்ணெ
வாகடத்திற்கூறுமருந்துகேள்—தாகமுடன்
அசனமகில்வில்வம் அமுக்குருசித்தாமுட்டி
வசனஅமுதவள்ளிவாகா யிசையவே(?).

சீரகமிளகுதான்றி திரிபலைநன்னரி
நீர்விரவிக்காச்சி(ததனை) நீர்வடித்து—பேர்பெரிய
பாலிளநீர்யெண்ணெசமபாகங்கொண்டு
மேல்மருந்து விண்டுவிளம்பக்கேள்—கோலமுறு
வெட்பாலரிசிவிளாவரிசி சித்தரத்தை
நட்பாஞ்சிறுதேக்குவிளாமிச்சு—செப்பமுடன்.
சிறுமூலங்கோஷ்டந் தேவதாரமுடனே
நறுவியகச்சோலமுடனுகப்பூ—மறுவில்லா
வாசமுள்ளபச்சை மதில்பூமஞ்சட்டி
மோசமில்லாதிப்பிலிமூலமுடன்—நேசமுள்ள
செவ்வள்ளிக்குக்கிலிவை சேரொன்றுகழஞ்சாய்
அவ்வகையாகஅரைத்து நன்றாய்—இவ்வகையாய்
ஓக்கவிட்டுக்காச்சிஊறிப்பதம்வடித்துப் (?)
பக்குவமாய்த்தான்முழுகத்தீரும்நோய்—சுக்காம.

மண்டையுருசீலை மகோதரத்தினீர்த்தோடங்
கண்டத்திருமல்கரகரப்பும்—துண்டத்தில்
பீனிசமுங்காயம்பெருத்ததலைநோவு
மூலத்தில் கொண்டிருக்குமுட்க்காச்சல்—மானிடர்க்கு

வாதபித்தசிலேற்பனம்வருநோயை மாற்றுவிக்கும்
தீதறவேநோய்களெல்லாந்தீருமே—வேதமென
சொன்னூர்தமிழ்முனிவர் சூழ்ந்தயிருடிகளுக்கு
முன்னூலாம் வேதமுறை ".

## அன்னபேதிக்குளிகை

அன்னபேதிவேர்க்கோம்பு அரியமிளகுவெள்ளுள்ளி
பின்னுமனிம்பத்தளிறுடனே பெருத்தமுருங்கை
[வேர்ப்பட்டை
மின்னேகேள்கருஞ்சீரகமு வேரூர்ச்சோமனுதியுடன்
முன்னோர்சொன்னூர் கடுகுநொச்சி மும்மூன்றுன்பது
[வாங்குவதே
வாங்குமருந்துச்சரியிடைதான் வாதமடக்கிச்சாறதனுல்
ஓங்கியரைத்துவழித்துருட்டி யிளந்தைப்பிஞ்சுக்
[காயளவாய்ப்
பாங்காயுலர்த்திவேர்க்கொம்பு பரிவாயவித்ததண்ணீரில்
நீங்காதருந்தவாய்வெல்லா நில்லாதோடுங்கண்டீரே.

## தொண்டைநோய்க்குப் புகை

வாயுவிலய்யமேயாகில்வலித்துப் பின்னெரித்துக்
[காட்டும்
ஏயதோரசனந்தண்ணீர் எதிரெடுத்தருவருக்குஞ்
சாய்வேஉடம்புநொந்து சந்துகாலுடலுங்காந்தி
பேய்கள்போலமந்தம்பற்றிப் பலங்களைக்குரைக்குந்
[தானே.

இஃது அசுவகந்தாதிச்சூரணத்தில் தீரும்.

நீர்முள்ளிவேரும் கிரும்பும் சுங்கானில் வைத்துப்புகை குடிக்கவும். தொண்டை நோய்தீரும்.

## அரையாப்புக்கு

(1) கொடுவேலிவேரை யிடித்துத்தெள்ள அதில் காசிடை நெய்யில் போட்டுக்கொடுக்கவும்.

(2) வேம்புப்பொடி செய்து தின்னமாறும். பின்னும் வேம்பின் இலை, பட்டை, வேர் இவைகளைச்சுட்டு மஞ்சள் கூட்டி மோரிலரைத்து வீக்கத்தில் பூசவும்.

(3) அவுரிவேர் செம்மறியாட்டின் புழுக்கை, கஸ்தூரி மஞ்சள் சிறுநீரிலரைத்துப் பூசவும்.

(4) பெருங்காயம், இந்துப்பு, சுக்கு சமன்கொண்டு சாரு யத்திலரைத்துப் பூசத்தீரும்.

(5) அரையாப்பு கன்றிப்போனால் பழுக்க, நல்லசந்தனம் முலைப்பாலிலரைத்து மூன்றுநாள்பூச அரையாப்பு உடைந்து சீழ் வெளியாகும், எளிதில் உலர்ந்துபோம். கைகண்டது.

## அனலைமாற்ற

ஆவரைவிரை, ஆவரைக்கொழுந்து, ஆவரைப்பட்டை, நற்சீரகம் இந்த நான்கையும் பசுவின்பாலில் அவித்து, மூன்று கொதி வருமட்டும் எரித்து இறக்கி மூடிவைத்து மறுநாள் காலை யில் குடிக்கவும்.

பால்கொதிக்குமுன்பே சாதிக்காய், ஏலம், கிரும்பு இவை கூட்டிக் கிழிக்கட்டிப்பாலோடு போட்டு அவித்துப் பிழிந்து இந்த மருந்தும் பாலிலரைத்துக்கலக்கிக் கொடுக்கவும்.

## அக்கினித்தம்பனம்

சிறுபயறு, நெல்லிப்பருப்பு, வெள்ளைமிளகு சரியிடை கொண்டு கையாந்தகரைச்சாறுவிட்டு அரைத்து தலையில் பூச்சு இட்டு மறுநாள் வெந்நீர் வைத்துக் குளிக்க உடல் வேட்கை மாறும்.

## ஓமகற்பம்

அசமோதகத்தை கலசத்திலிட்டுப் பழச்சாறு விட்டுப் பிசறி, நிழலிலுலர்த்தி மறுபடி கைய்யாந்தகரைச்சாறு விட்டு நன்றாயுலர்த்திப் பொடிச்செய்து வெருகடிப் பிரமாணந்தின்று வரவும். வாந்தியாகும், சோகைமாறும், காமாலை, பித்தம், பாண்டுரோகம், படர்தாமரை, சிரங்கு, குட்டம் இவை தீரும். உடலை வற்றச்செய்யும், நெய் பால் மிகுதியாய்க் கூட்டவும். தம்பனமுண்டு. ஸ்திரீபோகமுண்டு. இது கைகண்டது.

## பெருநோய்க்கு

கொடிவேலிவேர், சாரணைவேர் இவைகளைப் பொடிச் செய்து நல்லெண்ணெயில் கலந்துகொடுத்து மேல்எண்ணெய்

தடவத்தீரும். பின்னும் கொடிவேலிவேர், சாரணைவேர், காரை வேர் பொடியாக்கிச் சதுரக்கள்ளிச்சாறும், எருக்கிலைச்சாறும், கோமூத்திரமும் நாழி, கூட்டி எரித்து வடித்து உடம்பில் தடவவும். கைகண்டது.

## அட்டகுன்மவாய்வுக்குப்பொடி

நற்சீரகம், கருஞ்சீரகம், சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், இந்துப்பு, பெருங்காயம் பொடிசெய்து வெருகடிதூள் தின்னப் போம்.

## அமுதஎண்ணை

வெள்ளைக்குங்கிலியம் பலம் மூன்று, தூள்செய்து இரும்புக் கரண்டியில் விட்டு நல்லெண்ணெயுமிட்டு காய்ச்சி கிண்ணத்தில் தண்ணீர்விட்டு அதில்ஊத்தி கையால்பிசைந்து இப்படி ஏழு முறைசெய்ய வெண்ணெயாம். கொட்டைப்பாக்களவு தின்ன நீர்க்கடுப்பு, நீர்ச்சுருக்கு, மேகம் இவை தீரும்.

## உப்புக்குழப்பு

சுக்கு, மிளகு, ஓமம், வெள்ளுள்ளி, நொச்சிக்கொழுந்து, முருங்கைக்கொழுந்து வகைக்குப் பலம் ஒன்று எடுத்து நன்ருக அரைத்து. உப்புபட்டப்புத்திரும் வரையில் வறுத்து எடுத்தது பலம் ஒன்று, பனைவெல்லம் பலம் ஒன்று கூட்டிக் கிண்டி சிறிது நல்லெண்ணெய் விட்டு லேகியபதமாய்க்கிண்டி நெல்லிக்காய் அளவு இரண்டு வேளையுந்தின்று வரவும். இரைச் சல், கழிச்சல், வாயு, குன்மம் இவையெல்லாந்தீரும். கை கண்டது.

## அமுதக்கடுகு

சீனியுழக்குநெய்நாழி தேத்தாம்பால்வேர்த்தோல்நாழி
ஆனதாதனைவேறுடனே அடுக்குத்திப்பிலிபேய்ப்புடல்தான்
தானேவெந்துகடுகுதின்ன சயரோகம்போமீளையில்லை
மானேபாரில்மெய்காசம் மாந்தந்தீருங் கண்டீரே.

## அனல்கழிச்சலுக்கு

செய்யகோஷ்டமதிமதுரம் சீரியவிலாமிச்சிருவேலி
பொய்யாமுத்தஞ்சந்தனமும் போர்ந்தயிளநீர்நெற்பெரியும்

மெய்வாய்ப்பதிவாகக் காய்ச்சி மீருதிறுத்துக்கொள்வீரேல்
அய்யாசொன்ஞரிதுவுண்மை அனலின்கழிச்சலகன்றிடுமே.

## அறக்குத்தைலம்

சென்ஞயுருவிசிறுக்கீரை தேவதாரமோடரத்தை
பொன்ஞமிளகுபெருங்குரும்பை பேசுமிலாமிச்சிறுவேலி
திண்ஞர்சுக்குமலேமஞ்சள் சேறறஅரைத்துவட்டித்ததனே
மின்ஞர்மேலில்பூசுவீரேல் மேவும்வெதும்புமுள்சுரமு
மன்ஞயிருந்தபதியெனவே மயங்கியோடும்வாராதே.

## அலகுகட்டு திறக்க

மிளகு பன்னிரண்டு, உப்புக்கல் ஐந்து, நாயுருவித்தோல், குருஞ்சான்வேர், வெள்ளுள்ளி, எலுமிச்சங்காய்த்தோல், இவற்றை எலுமிச்சம்பழச்சாற்றிலரைத்துக் கண்ணில் தடவத் தீரும். கைகண்டது.

## அண்டவாதத்திற்கு

பூனேமுருங்கையிலே அரைத்துப்பசுவின் வெண்ணெயில் ஐந்துநாள் கொடுக்கவும். பத்தியம் காக்கவும்.

## அரிதாரச் செந்தூரம்

புரசம்பட்டைச்சாம்பல், அரசம்பொருக்குச்சாம்பல் படி இரண்டு, அரைக்கீரைத்தணடுச்சாம்பல் படி இரண்டு முன் சொன்னபட்டையும் பொருக்குச் சுட்டசாம்பலும் நாழிமட்டும் சட்டியில்வைத்து அதுமேல் கீரைத்தண்டு சுட்டசாம்பல் பரப்பி எருக்கிலே இரண்டு வைத்து இதன்மேல் வேண்டிய அரிதாரம் வைத்து அதன்மேல் ஒருஇலேமூடி அதன்மேல் தண்டுசுட்ட சாம்பல் பரப்பி, அதன்மேல் அரசன்பொருக்குச் சாம்பல்பரப்பி முப்பது நாழிகை ஊமத்தங்காயளவு தீயெரித்து ஆறவிட்டுப் பார்க்கச் செந்தூரமாம். பணவிடை செந்தூரங்கொள்ள குட்டங்குறைநோய், ஈளே உளேமாந்தை, சயநோய், வாதம் (எண்பது) சிலேற்பனம், வயிற்றுவலி இவைகள் தீரும். கை கண்டது.

**பத்தியம்:**—கோதுமைஅரிசி பலம் ஒன்றுக்கு மூன்றுபங்கு வைத்து பசுவின்பாலிலரைத்துக் கொடுக்க நன்று. கை கண்டது.

## அண்டம் கிழிறங்கினதற்கு

நாருக்கறந்தையும் வெள்ளுள்ளியும் அரைத்து மூன்றுநாள் முள்ளிக்காயளவு கொடுக்க வாங்கும்.

## அரையாப்பில் விக்கங்கண்டால்

ஊமத்தங்காய்க் காம்பைச்சுட்டு அந்த அளவு கல்சுண்ணும் பும்கூட்டி சிறுநீர் விட்டரைத்துப்போட ஒருநாளிலே வீக்கங் கரையும்.

## அரையாப்புக்குப்பத்து

முட்டை வெள்ளைக்கருவுஞ் சுண்ணும்பும் மத்தித்து சீலையிலூட்டிப் போடவும். கட்டிகரைந்தால் பத்து விடும். கைகண்டது. பின்னும் மூவிதழ்கிழங்கு அரைத்துக்கொதிப்பித்து இடவும்.

## அரையாப்பு, கிரந்தி, பவுத்திரம் இவைக்கு

அவிச்சூற்றிய விளக்கெண்ணெய் படி கால், திருகுகள்ளிப் பால் படி அரைக்கால் கூட்டி, மெழுகுபதத்தில் காய்ச்சிக்கொள்ளவும். பத்தியம் காக்கவும்.

## அரையாப்பு, கிரந்தி, இரத்தப்பிரமேகம், மஞ்சள் பிரமேகம் இவைகளுக்கு

நல்லெண்ணெய் படி அரை, கொடிவேலிவேர்த்தோல், எலுமிச்சங்காய் அளவு, கருப்புக்கட்டி அவ்வளவு சேர்த்து மெழுகுபோல் அரைத்து எடுத்துக்கொண்டு, சுண்டைக்காயளவுருட்டி வேளைக்கு உருண்டையும் ஒருகரண்டி எண்ணெயும் கொடுக்கவும்.

## அரையாப்புக்குப்பத்து

அரையாப்புத்தடித்தபோது உவர்மண்ணை அரையாப்பிற்கு கரைபோட்டாற்போல கரையிட்டுக் கொடிக்கள்ளிப்பால் நடுவேயிட்டு: அதன்மேல் மஞ்சள்பொடி பலம் அரை, சுண்ணும்புப்பொடி பலம் அரை இது இரண்டும் அதன்மேலிட்டுக் காயுமளவு அசையாமலிருந்து கொள்ளவும். உள்ளுக்கு நத்தைச்சூரிவேர் கொட்டைப்பாக்களவு அரைத்து நல்லெண்ணெயில் மத்தித்துக்கொடுக்கவும். பத்தியம் கொள்ளவும். கைகண்டது.

## அருவருப்புக்கு

ஏலம், லவங்கம், சுக்கு, திப்பிலி வறுத்துப்பொடி பண்ணித் தேனில் கொடுக்கத்தீரும்.

## அடிகுத்துப்பட்டால்

பருத்தியிலைச்சாறு ஒரு சிரங்கை கொடுக்க நன்று.

## அரிதார செந்தூரம்

அரிதாரம் சுத்திச்செய்து மூக்கரட்டைச்சாரணையை யிடித்து அடைதட்டிச் சட்டிக்குள் வைத்து, அதன்மேல் அரிதாரம் வைத்து மேலொரு அடையால்மூடி மேல்சட்டிமூடி சீலைமண் செய்து, எட்டுச்சாமமெரியவிட்டுக் குளிர்ந்தபின் எடுக்க தாளகம் கட்டுப்பட்டுச் செந்தூரமாகும். இதனால் ஒற்றைத்தலைவலி, புண், சிரங்கு இவைகளுக்கு தக்க அளவில் தேனிலும், வாத நோய்களுக்கு கருப்புட்டியிலும், வயிற்றுக்கடுப்புக்கு முந்திரி கைப்பழத்திலும், கண்ணோய்க்கு எலுமிச்சம்பழச்சாற்றிலும், பிரமேகத்திற்குப் பூசணிக்காய்ச்சாற்றிலும் கொடுக்க நன்று.

**வேறு** :—முத்தெருக்கன்செவிச்சாற்றில் அரிதாரத்தை நன்றாய் அரைத்து வில்லைபிடித்து உலர்த்தி சட்டியில் வைத்து மேல்சட்டிமூடி சீலைமண்செய்து கவுதாரிப்புடம் போடவும். செந்தூரமாம்.

## அரையாப்பு, விப்புருதி, கண்டமாலை துடைவாழை இவைக்கு

நத்தைச்சூரிவேர், குப்பமேனிவேர், கழுநீரில் பிசைந்து பொட்டணங்கட்டிக் காதில் விடவும். மூன்று நாளைக்கு உள்ளுக்குங் கொடுக்கவும். பத்தியம், மிளகுநீறுஞ் சோறுங் கொடுக்கவும்.

## அரணைகடிக்கு

சாரணைசமூலம் சிறுநீரிலரைத்து உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் பூசத்தீரும்.

## சன்னிக்கு

சாரணையும், குப்பைமேனியும், கொட்டைப்பாக்கும் வெற்றிலையுடன் தின்னத்தீரும்.

## கோரோசனைக் குளிகை

ஏலம், கோஷ்டம், அதிமதுரம், செம்புத்தூள், இலவங்கப் பட்டை, சீரகம், கோரோசனை, கலைக்கொம்பு, உத்திராட்சம், கருடப்பச்சை, விலாமிச்சு இவைகளைச் சமன்கொண்டு கொடிவேலிவேர், வெட்டிவேர் அவித்ததண்ணீரைக்கொண்டு அரைத்து மிளகு பிரமாணம் உண்டை செய்து உலர்த்தி அதில் ஒன்றை காலை மாலை சுரம், தலைநோய், சன்னி இவைக்குக் கொடுக்கலாம்.

## அறுபெறலுக்கு

காக்கை குளித்த தண்ணீர் வாய் பேசாமலிடவும்.

## அசீரணம், உள்குத்து, பிறவிச்சு இவைகளுக்குக் குளிகை

மகிழம்பருப்பு, கழச்சிப்பருப்பு, முருங்கைப்பருப்பு, புங்கம் பருப்பு, மாவிலிங்கவேர், உகாவேர், பிரண்டைவேர், ஈசுவர மூலிவேர், அவுரிவேர், உத்தாமணிவேர் இவையாவும் சமன், கழிச்சிப்பருப்பும், மகிழம்பருப்பும் மட்டும் இருபங்கு; மிளகு, சுக்கு, திப்பிலி, கருஞ்சீரகம், இந்துப்பு, பேரரத்தை, கடுகு, கிறம்பு, கார்போகஅரிசி, வாலுவை, அக்கராகாரம், கற்பூரம், துருசு, வெள்ளுள்ளி, கடுக்காய் இவையாவும் ஒருநிரை, உத்தாமணிச்சாறுவிட்டு அரைத்து இலந்தைக்காயளவு உருட்டி நிழலிலுலர்த்தி, உள்வீசு, புறவீசு, விப்புருதி, வாயு, மந்தம், அசீரணம், குளிர், சன்னி இவைகளுக்கெல்லாம் இஞ்சிச்சாற்றி லும், முருங்கைவேர்ச்சாற்றிலும், தேனிலும் பயமில்லாமல் கொடுக்கவும். கைகண்டது.

## அண்டவாயுவுக்கு

மலைதாங்கிவேரும், புகையூரலும், சுண்ணும்பும் காய்ச்சிக் கொடுக்கத்தீரும்.

## அரையாப்புக்குச்சூடு

வலது புறங்கண்டால் இடது புறங்காலில், பெருவிரலில் சுட நிற்கும்.

## பாம்புக்கடியால் செத்தவர் பிழைக்க

வாளவிரைமகிழம்விரை பேப்பீர்க்குவிரைமிளகு
வசந்தரசம்தேவதாரம் வகைகேளுசமனுய்
கோளவேதேசிப்பழச்சாற்றிலேயூறிக்
குளிகைசெய்துநிழலுலர்த்திநீபுத்தில்
வாளரவந்தீண்டியேமடிவோர்கள் கண்ணிலிட
மாத்திரைகேள்எறுக்கிலையின் சாற்றிலிட
நீளமதுகூறுகையாந்தகரைச்சாறும்
நிசமிதுவே விடந்தீரும்தீராது போனல்
தாளமொழிப்பேசுவோர் சிறுநீரில்கண்ணிலிடுசலவைத்
துணியில்நனைத்து அவன்தன்சரீரம்போதிந்து
வாலுலகில்மூன்று நாழிகையிலேஎழும்புவான்
வல்லயுரன்கிருபையால் வருமுயிருதிட்டம்
காளமதுவூதியே யிம்மருந்துசெய்நீகலங்காதே
நான்செய்து கைகண்டதுண்மையே(?)

## பயித்தியத்துக்கும், பித்தம் 40-க்கும்

பழைய பீர்க்கங்காய் விரைகள் பதினறு முலைப்பாலி லரைத்துக்கொடுக்க கபம் வாயாலெடுக்கும். அதன் பிறகு பதினறு விரை முலைப்பாலிலரைத்து, நாசியில் நசியங்கொடுக்கத் தலையிலிருக்கிற தண்ணீரெல்லாம் வாங்கிப்போம். இப்படி மூன்று நாட்கள் காலையில் இவ்வாறு செய்தால், பித்தநோய்கள் நாற்பதும் பயித்தியமும், மண்டையைப்பற்றிய நோய்களும் நீங்கும்.

## பித்தசுரத்திற்கு குடிநீர்

பேய்ப்புடல், கடுகுரோகணி, பெருங்குரும்பை, சீந்தில், சந்தனம், பங்கம்பாளைவேர், கொத்தமல்லி, சுக்கு இவைகள் பலம் இரண்டு, இருநாழி தண்ணீர்விட்டு எட்டொன்ருய்க் காய்ச்சி கொடுக்கத்தீரும்.

## மாதவிடாயில்லாத பேருக்கு

சிவந்ததுளசி இரண்டுபச்சைப்பாக்களவு அரைத்துக்காலை யில் மாதவிடை கண்டமுதல் மூன்றுநாள் கொடுக்கவும். இப்படி மூன்றுமாதங்கள் கொடுக்க மாதவிடாய் நன்ருய்க் காணும்.

## எரிகுன்மத்திற்கு

முருங்கையிலைச்சாகமும், வெற்றிலைச்சாகமும் வகைக்கு சிரங்கையை, நல்லெண்ணெயில் மத்தித்துக் கொடுக்கவும். மூன்றுநாள் இரண்டு நேரமுங்கொடுக்க எரிகுன்மம் மாறும்.

## பேய்போக

பெருந்தும்பைவேரும், வெள்ளைச்சாரணைவேரும் பொடித்துக்கண்ணிலிடப் பேய்போகும்.

## சுரக்குடிநீர்

சுக்கு, கொத்தமல்லி, சாரணைவேர், சுண்டைவேர், அமுக்கரா, நன்னாரி, கொடித்தும்பைவேர் இவை வகைக்குப் பலம் ஒன்றரை, நாயுருவிவேர் பலம் இரண்டு இவைகளை ஒன்றிரண்டாக இடித்து நீர்விட்டு எட்டொன்றாய்க்காய்ச்சி இரண்டு நேரமும் மூன்றுநாள் கொடுக்கவும். சுரவகைகள் போம்.

## சுரம் 64-க்கும், சன்னி 18-க்கும், பலத்துக்கும் கிஷாயம்

விஷ்ணுக்கிராந்தி பிடி ஒன்று, சிறுபுள்ளடி பிடி இரண்டு, நெல்பொரி சிரங்கை, கொத்தமல்லி சிரங்கை இவையெல்லாம் இடித்து நீர்விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி நாழியில் ஒருபங்கு எடுத்து பொன், வெள்ளி, கோரோசனை, காண்டாமிருகத்தின் கொம்பு, கடல்தேங்காய், வெள்ளைக்கருடப்பச்சை, அதிமதுரம், மாசிக்காய், கலைக்கொம்பு, உத்திராட்ச்சம், சாத்திரபேதி, இவையெல்லாம் சரிகூட்டி ஒரு குன்றியளவு அரைத்துப் பத்து நாள் இரண்டு வேளையும் குடிநீருடன் கொடுத்துவர நன்று. கண்டது.

## சன்னி பதினெட்டுக்கும் பூச்சுமருந்து

இருதிப்பிலி, கடுகு, பூதவர்க்கம், சுக்கு, வசம்பு, வெள்ளுள்ளி, வெளுத்தபிசின், பெருங்காயம், கருவாய்ப்பட்டை, இவையெல்லாம் சமன்கொண்டு வெந்நீரிலரைத்துப்பூச நன்று.

## சகல காய்ச்சலுக்கும் குடிநீர்

கொத்தமல்லி, சீரகம், அதிமதுரம், இருசந்தனம், கடுக்காய், ஏலம், நெல்லிக்காய், திப்பிலி, கிரும்பு, இருவேலி, தென்னம் வேர், கிளியூரல்பட்டை, சாதிக்காய், மாசிக்காய், மூங்கில்

தோல் சமன்கூட்டி ஒரு பொட்டணங்கட்டிப்போட்டு தண்ணீர் விட்டு சிறுதீயால் எரித்து சிவந்து வரும்போது இறக்கிக் கொடுக்கவும்.

## சூலை வயிறு கழிச்சலுக்குக் கஷாயம்

சீரகம், கருஞ்சீரகம், ஓமம், சாதிக்காய், கிரும்பு, ஏலம், இருசந்தனம், இருவேலி, விலாமிச்சு, கொத்தமல்லி, வெள் ளுள்ளி, சாத்திரபேதி, சுக்கு இவைவகைக்கு கழஞ்சு கால், கூவி ளம், ஆடாதொடைவேர், மாதுளைஓடு வகைக்கு பலம் கால், ஒன்றரைப்படி தண்ணீர் விட்டுக்காய்ச்சி அரைப்படியாக இறக்கி, சீரகம், சாதிக்காய் சமன் வெவ்வேருகப் பொடித்துக் கூட்டிச்சாப்பிட சூலை, வயிறு கழிதல், குன்மம் இவைகள் போம்.

## சூலைகழிச்சலுக்கு

சீரகம், ஓமம், மாதுளை ஓடு, வசம்பு, காயம், இவை சமன் கொண்டு பொடித்துக் கொடுக்கத்தீரும். நன்று.

## கணைநோய்க்கு

கிரும்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, அதிமதுரம், கருவாய்ப் பட்டை, கருடப்பச்சை, நீலகருடப்பச்சை, சாத்திரபேதி, பிலாசுவிரை, ஓமம், சீரகம், கொத்தமல்லி, கடுக்காய், செஞ் சந்தனம், மாசிக்காய், தும்பைப்பூ இவை சமன்கொண்டு பொடிசெய்து சீலையில் வடித்துக்கொண்டு வயிறிளக்க் கடுக்கா யில் வெல்லம் கூட்டிக்கொடுக்கவும். வாயுவுக்கு இஞ்சிச்சாற்றி லும், கிருமிக்குத் தண்ணீரிலும், உட்டினரோகத்திற்குச் சீரகமும், வெல்லமும் கூட்டிக்கொடுக்கவும். இதுவே வயிற்றுப் பொறுமலுக்குமாகும். உடல்வன்மைக்கும் கொடுக்கலாம். கை கண்டது.

## கணைக்கு நெஞ்சிலிடத்தளம்

கருவாய்ப்பட்டை, நெல்பொரி, அதிமதுரம், கூவிளம், மிளகு, மஞ்சள், கச்சோலம், சன்னிநாயகம் இவைகளை சமன் கொண்டு முலைப்பாலிலரைத்துத் தளமிடக் கபக்கட்டு இரைப்பு இவையெல்லாந் தீரும்.

## கணைநோய்க்கு

வரப்புநண்டு, மஞ்சள், வசம்பு, அரத்தை, கரியுப்பு, வெள்ளுள்ளி, நற்சீரகம், நாவல்கொழுந்து இவைகளை ஓர்

அளவாகக்கொண்டு பொடித்துத் தேன்விட்டுக்கிண்டி மெழுகு பதத்தில் எடுத்து அதில் கரண்டி வீதம் கொடுக்க கணைநோய் தீரும்.

## சாதிலிங்க மெழுகு

சாதிலிங்கம், நேர்வாளம், பொரிகாரம் இவைகளைச்சுத்தி செய்து சமன்கூட்டி அத்துடன் இந்துப்பு, ஆமணக்கு முத்து, கால் பங்குகூட்டி அரைத்துக்குழம்பு பக்குவத்தில் எடுத்து சிமிழிலடைத்து ஒரு மஞ்சாடியளவு சீனியிலாகிலும், கருப்புக் கட்டியிலாகிலும் பழுப்புச்சர்க்கரையிலாகிலும் கொடுக்கவும் பேதியாகும். சரியாக ஆகாவிட்டால் வெந்நீர் கொடுக்கப் பேதி யாகும். பிள்ளைபெற்ற பெண்களுக்கும் தினப்படி இந்த மருந்து கொடுத்தால் மலம்போம். கழுக்கையும் போகும். பயப் பட வேண்டாம். சோறும், மிளகு ரசமும் கொடுத்து வரவும். மற்றவர்களுக்குமாகும், கைகண்டது.

## அரணைகடிக்கு

வெற்றிலை, அகத்தியிலை, மிளகு ஓர் அளவாக அரைத்துப் பூச அரணைகடி தீரும்.

## குன்மத்திற்கு

ஓரிலைத்தாமரையும் முசுமுசுக்கையிலையும் பசுவின் பாலி லரைத்துக் கலக்கிக் கொடுக்கத்தீரும்.

## சிறுபிள்ளைகளின் பல பிணிகளுக்கும்

நற்சீரகம், கொத்தமல்லி, உள்ளி, சிறுபுள்ளடி, குருக்கத்தி யிலை இவைகளை இடித்து அரைப்படி தண்ணீர் விட்டுக்கால் படியாக்கி, சர்க்கரைகூட்டி மூன்றுநாள் கொடுக்கவும். நன்று.

## வாதத்துக்கு

நொச்சிச்சாறு உழக்கு, தேங்காய்ப்பால் உழக்கு, பழங்கூழ் உழக்கு இந்த மூன்றுங்கூட்டிக் களிகிண்டித் தின்னவும். இப்படி ஆறு நாளிரண்டுநேரமும் தின்ன வாயு நோய்கள் எல் லாம் போம்.

## வாதநோய்க்கு எண்ணெய்

புதிய சிற்றாமணக்கு எண்ணெய் ஒரு கோப்பை நோயினன் சிறுநீரொரு கோப்பை இவ்விரண்டும் நன்றாய் கலக்கிக் குடிக்க

வும. இப்படி மூன்று நாள் ஆறுவேளை குடித்தால் மூட்டுகளி லுள்ள நோயும், களைப்பும், கைகால் களைப்பு, முடக்க முடி யாமையும் தீரும். உப்பு, புளி தள்ளவும். கஞ்சித்தண்ணீர் சோறும் கொடுக்கலாம். காற்றிலும், வெயிலிலும் அலையாமல் காத்துக்கொள்ளவும்.

## முடக்குவாதத்துக்கு

தேங்காயெண்ணெய் ஆழாக்கு, நல்லெண்ணெய் ஆழாக்கு, பசுவின் நெய் ஆழாக்கு, சதிரக்கள்ளிச்சாறு உழக்கு, குந்திரிகம் பலம் இரண்டு, கஸ்தூரி மஞ்சள் பலம் இருபது, இவைகளை எல்லாம் கூட்டிக் காய்ச்சி நோவுள்ள இடங்களில் பூச முடக்கு வாதந்தீரும்.

## சன்னி, வாதத்திமிர், வாதக்கரப்பான் இவைக்கு

வெள்ளாட்டுப்பால் ஒருபடி, புளியிலைச்சார் ஒருபடி, ஆமணக்கெண்ணெய் ஒருபடி, கள்ளிப்பால் உழக்கு, எருக்கம் பால் உழக்கு ஆக இவை எல்லாங்கூட்டி வெந்து மெழுகு பதத் தில் வருகையில் வடித்து, உள்ளுக்கு, உடல் வன்மைக்குத்தக்க படி அரைக்கால் உச்சிக்கரண்டி முதல் அரை உச்சிக்கரண்டியளவு கொடுத்து, மேலுக்கும் நாடி நரம்புகளிலேயும் தடவி ஒருநாள் சும்மாயிருந்து, மறுநாளுமப்படிச்செய்து சாயங்காலமரப்புத் தேய்த்து வெந்நீரில் குளிக்கவும். அல்லது வாதமடக்கியிலை, எருக்கிலை, அத்தியிலை, நொச்சியிலை இந்த இலைகளை நீரில் போட்டு காய்ந்த நீரில் குளிக்கவும். இதனால் சன்னிவாதம், திமிர் வாதம், வாதக்கரப்பான் இவை தீரும்.

## இருமல், வாதம், காமாலை, பக்கநோய், வாதசுரம், சேத்துமச்சுரம் இவைகளுக்குக் குடிநீர்

சுக்கு, கோஷ்டம், சிறுமூலம், சீந்தில்தண்டு, கண்டங்கத்தரி வேர் ஆக இவைகள் பன்னிரண்டு களஞ்சியிடை இடித்துப் பொடித்து அத்துடன் இரண்டுபடி நீர்விட்டு உழக்காகக் காய்ச்சி, திப்பிலிப்பொடி சிறிது போட்டுக் குடிக்க சுரம் தீரும்.

## பிரமேகம், சூலை, கடுப்பு, கால், கை முடங்கின வாதம் இவைக்குப்பொடி

சீனிபலம் இரண்டு, திப்பிலி பலம் ஒன்று, ஓமம் பலம் அரை, இம்மூன்றும் வெவ்வேருகப் பொடித்து, மூன்றும் வெவ் வேருக வடிக்கட்டி ஒன்ருகக்கூட்டி எட்டுநாள் காலே மாலே உண்ணவும். உப்பு, புளி தடுக்கவும். கோழிக்கறியும், கோழி முட்டையும் கூட்டவும். வெந்நீர் கொஞ்சமாகக் குடிக்கவும். எட்டுநாள் சென்றபின், மருந்தைக்கொடுக்காமல் மூன்றுநாள் சென்றபின் வெந்நீர் விட்டுத் தலைமுழுகிக்குளிக்கவும். மறுபடி யும் நாலு நாளைக்குப்பிறகு எண்ணெய் தேய்த்து முழுகவும்.

## கை, கால் முடங்கின வாதத்துக்கு எண்ணெய்

எருக்கிலை, புளியிலை, நொச்சியிலை, வகைக்குப்படி ஒன்று, பசுவின் மூத்திரம் படி ஒன்று; குளவிந்தமஞ்சள், வெண்சிறு கடுகு, அமுக்கருவேர், கொடிவேலிவேர், ஈந்து இருவேலி, விலாமிச்சம், சாரணைவேர், சதைகுப்பை, செவ்வியம், வசம்பு இவைகள் வகைக்குக் கழஞ்சு வாங்கி அரைத்து மேற்படி சாறு களுடன் கரைத்து நல்லெண்ணெய் படிஒன்று விட்டுக் காய்ச்சிப் பதத்தில் வடித்துப் பூசவும். முடங்கினவாதமும் வலியுந் தீரும்.

## வாதத்துக்கு

நொச்சியிலையும், மஞ்சளும் கூட்டிக் காடித்தண்ணீரி லரைத்து உலர உலரப் பூசவும்.

## வாதத்திற்குப் பூச்சு

கடுக்காய் ஒன்பதைப்பொடித்து, கோழிமுட்டை மூன்றின் வெண்கரு, எருக்கிலைப்பால், ஊமத்தஞ்சாறு இவைகளைக் கொண்டு ஒன்றின்பின் ஒன்ருக விட்டரைத்து முதுகில் பூசவும். வாதந்தீரும்.

## அடிபட்ட காயத்துக்கு

கடல் நுரையை முலைப்பாலிலுரைத்துத் தடவவும். அல் லது அத்துடன் கருவேலன்பட்டை கூட்டி அரைத்துப்போட காயந்தீரும்.

## கண்ணுக்கு நெய்

அதிமதுரம், கோரோசனை, குங்குமப்பூ, ஏலம், திரி, நற்சீரகம் இவை வகைக்கு ஒரு கழஞ்சி, கொடுப்பைவேர் பலம் ஒன்று, சிறுகீரைவேர் பலம் ஒன்று, இஞ்சிநீர் பலம் மூன்று, இந்த மருந்துகளை எல்லாம் பசுவின் பாலிலரைத்துப் பசுவின் நெய் ஆழாக்கு ஊற்றிக் காய்ச்சி, கல்கம் உடையும் பதத்தில் வரும்பொழுது இறக்கி வைத்துக்கொண்டு, கண்ணிலே ஒரு துளிவிட கண்நோய்கள் யாவும் தீரும்.

## கண்ணுக்குக்களிம்பு

சாதிப்பத்திரி, வாய்விளங்கம், இலவங்கம், கற்பூரம், கிரும்பு, மாசிக்காய், குன்றிபருப்பு இவைகள் ஓர் அளவாக எடுத்து நன்ருய்ப் பொடிசெய்து, வடிகொண்டு பசுவின் வெண்ணெய் கொண்டு நன்ருக அரைத்துச் சிமிழியில் அடைக்கவும். இதனை எடுத்துக் கண்ணிலிட கண்ணிலுண்டான நோய்கள் எல்லாந் தீரும்.

## கண்ணில்பூவுக்குக் குளிகை

தேத்தான்விரை, வெள்ளைக்காயகத்தின்வேர், சமுத்திராப் பச்சை, வகைக்குப்பலம் ஒன்று எடுத்துப் பொடியாக்கி நிழலிலுலர்த்தி உமிழ்நீரில் அரைத்து உரைமாத்திரையாக உருட்டி உலர்த்தி அதை, உமிழ்நீரில் உரைத்துரைத்துக் கண்ணிலிடப்பூ மாறும்.

## கண்ணில் சதை வளர்ச்சிக்குக் குளிகை

கோரோசனை, கோஷ்டம் இரண்டையும் புங்கன்பட்டைச் சாற்றிலரைத்து மாத்திரை பிடித்து நிழலிலுலர்த்தி, முலைப் பாலிலுரைத்துக் கண்ணிலிடச் சதைமாறும்.

## கண்ணுக்கு ரத்தினநிகுளிகை

பொன், வெள்ளி, பவழம், செம்பு, ஈயம், முத்து, புலிப்பல், மாட்டு எலும்பு, கலைக்கொம்பு, துத்தம், சாதிலிங்கம், கற்பூரம், பொன்னுங்காணிவேர், சமுத்திராப்பச்சை, செங்கழுநீர்க்கிழங்கு, துருசு, கிரும்பு, இவைகள் சமன்கொண்டு எலுமிச்சம்பழச்சாற்றிலரைத்து உரை மாத்திரையாகப் பிடித்து நிழலிலுலர்த்தி முலைப் பாலிலுரைத்துக் கண்ணிலிட கண்நோய், படலம், காசம், பல நோய் தீரும்.

## கண் ணுக்குக்குளிகை

சந்தனம், தேவதாரு இவைகளின் இடைக்குக் காவிதுத்தம், துளசித்தளிர் இவைகூட்டி நன்ருக அரைத்தபின், மஞ்சள் மெழுகை உருக்கு வடித்து கூட்டுத்தொகைக்குக் கூட்டியபின் நந்தியாவட்டைச்சாற்றை படி ஒன் றுகொண்டு சிறுகச்சிறுக விட்டரைத்து உரை மாத்திரைகளாகச்செய்து முலேப்பாலில் இழைத்து கண்ணிலிட கண்நோய்கள் போம்.

**வேறு :**—சந்தனம், காவிமண் ணு, கோலரக்கு, சமுத்திராப் பச்சை, துளசிமொட்டு இவை சமன்கொண்டு முலேப்பாலிலரைத்து உருட்டி நிழலிலுலர்த்தி முலேப்பாலில் இழைத்துக் கண்ணிலிட கண்ணேய், கண்பூ, விழியுந்தி, கண் சாய்ந்து பார்க்கும் பார்வை, கண் புகைச்சல் இவையெல்லாந் தீரும்.

**வேறு :**—பசுவின் பால், சந்தனம், பவழம், முத்து, இந்துப்பு, மனேசிலே, மஞ்சள், மிளகு, கோழிமுட்டை ஓடு, ஆமையோடு, கவடி, யானேப்பல், கலேக்கொம்பு, கடல்நுரை, செம்புப்பொடி, துத்தம், கழுதைப்பல் இவை சமன்கொண்டு, நார்த்தங்காய்ச் சாற்றிலரைத்து மாத்திரை பிடித்து நிழலிலுலர்த்தி, முலேப் பாலிலேனும், கரும்புச்சாற்றிலேனும் உரைத்துக் கண்ணிலிட, வெள்ளெழுத்து முதலிய கண்நோய்கள் எல்லாம் தீரும்.

## கண் ணுக்குப்பொடி

துருசு பணவிடை மூன் று, மிளகு பணவிடை அரை, சுக்கு பணவிடை நாலு, கற்பூரம் பலம் ஒன் று, வெள்ளேப்பீங்கான் பணவிடை எட்டு, புனுகு பணவிடை இரண்டு, புனுகுதவிர மற்றவைகளே எல்லாம், இடித்துச் சலித்து மைபோல் அரைத்துப்பின் புனுகுகூட்டி நன்ருய் அரைத்துப் பொடியாக்கிக் கண்ணிலிட படர்மாசு அகலும்.

## கண் ணுக்குக்குளிகை

தூரிசு, துத்தம், மிளகு, கற்பூரம், சுக்கு, திப்பிலி, கடுக்காய், பீதரோகணி இவை வகைக்குப்பலம் மூன் று எடுத்து அத்துடன் யானேப்பல், குதிரைப்பல், கோழிநெஞ்சின் மொட்டெலும்பு, இவை ஒவ்வொன் று பலம் நாலு, எடுத்து எல்லாம் கூட்டி முதலில் முதல்இலே வரும் பனேக்கிழங்கு நீரிலும், இரண்டாவது முலேப்பாலிலும், மூன்ருவது புளியிலே நரம்பு இடித்துப்

பிழிந்தசாற்றிலும், நான்காவது நார்த்ங்காய் நீரிலும், ஐந்தாவது கொடுவை வேரிடித்துப் பிழிந்திறுத்த நீரிலும் அரைத்து உலர்த்திக்கொண்டு, முலைப்பாலிலாவது, பச்சைவெள்ளத்திலாவது விட, பில்லம், படலம், பித்தகாயம், இரத்தபடலம், தேசகரணம், பொளிவாதம், கண்ணீரொழுகுதல் பூ இவை தீரும்.

## கண்ணுக்குத்தாரை

மஞ்சிட்டி, திப்பிலி, இருவேலி, வெட்டிவேர், விலாமிச்சம் வேர், மரமஞ்சள், தேவதாரம், அதிமதுரம், முந்திரிப்பழம், கோலரக்கு, தேற்றும்பால், அரைத்த சந்தனம் வகைக்குப் பலம் ஒன்று, பச்சோந்தித்தோல் பலம் ஒன்று, இவைகளை எல்லாம் கூட்டி மைபோல் அரைத்து அவ்விடைக்குச் சுத்தவெல்லம் கூட்டி நன்ருய் அரைத்து மெழுகுபோல் எடுத்து சிமிழியில் அடைக்கவும். அதில் ஒன்றேகால் குன்றி வெள்ளத்தை பலாயிலையிலெடுத்துக்கூட்டி பிசைந்து ஐம்பத்தொன்று துளி ஒரு கண்ணிலிட இரத்தப்படலம், புல்லு, பூ, சதை, வெள்ளெழுத்து எல்லாந்தீரும்.

## ஆனந்தவாயுவுக்கு

நல்வேளை வேருந்தூரும் பிடிங்கிக் காடிவிட்டு இடித்துக் கிழிகட்டி ஒற்றிடமிடவும்.

**வேறு:**—கழற்சிக்கொடிவேர் துவைத்து எண்ணெயில் கலக்கி சூரியபுடம் வைத்து இரண்டு காசிடை அரைத்து ஒரு நாளைக்குக் கொடுக்கவும். வீக்கத்திலுந் தடவவும்.

**வேறு:**-கழற்சிச்கொடிக்கொழுந்து நாலு காசிடை அரைத்து ஒரு நாளைக்குக் கொடுக்கவும்.

**வேறு:**—முள்முருக்கம்பட்டை, எலுமிச்சம்பழ அளவு தேங்காய்ப்பாலில் அரைத்துக் கொடுக்கவும்.

## ஆனந்தவாயுவுக்குப்புகை

வெள்ளாட்டின்புழுக்கை, வெள்ளுள்ளிச்சருகு, செவ்வரிசித்தவிடு, வேப்பம்புண்ணுக்கு, இவைகூட்டிப் புகைகாட்டவும். நோவுள்ள விடத்தில் வேப்பெண்ணெயும், ஆமணக்கெண்ணெயும் தடவிப் புகை காட்டவும்.

## ஆனந்தவாயுக்கும் வெள்ளைக்கும்

வெள்ளுள்ளி பலம் ஒன்று, அரைத்துச் சீலையிலூட்டி ஆமணக்கெண்ணெய் விளக்கேற்றி சீலையில் மைபற்ற வாட்டித் தைலம் வடித்து அந்த தைலத்தில் இரண்டு குன்றியளவு சமுத்திராப்பழம் பொடிசெய்து போட்டுக்கொடுக்கவும். ஆனந்த வாயு, மாருத பிரமேகம், மூன்று நாளைக்குள்ளே மாறும். கை கண்டது.

## குளிர்சுரத்திற்கு

ஆடாதொடை, பேய்ப்புடல், சீந்திற்றண்டு, முத்தக்காசு, நீர்முள்ளிவேர், கொடுப்பை, நன்னாரி, வேப்பாலை சரியிடை கொண்டு இருநாழி தண்ணீர்விட்டு, உழக்காகக்காய்ச்சி இறக்கி அரைசிரங்கை கொடுக்கவும். சுரம் அறுபத்துநாலும், தீரும்.

**வேறு :**—சந்தனம், சுக்கு, கோஷ்டம், தான்றிக்காய், மிளகு, இருவேலி, வகைக்குப் பலம் ஒன்று, மூன்றொன்றாய்க்காய்ச்சிக் கொடுக்கவும், குளிர்சுரம் தீரும்.

## ஆனந்தவயிரவன் சந்தனாதிக்குளிகை

கடுகுரோகணி, பொன்னரிதாரம், கருஞ்சீரகம், நற்சீரகம், திரிகடுகு, அரத்தை, திராட்சை, நாபி, கெந்தி, தேவதாரம், அதிமதுரம், வெண்காரம், விழலரிசி, சந்தனம், செஞ்சந்தனம், வசம்பு, நன்னாரி, சாத்திரபேதி, சாதிலிங்கம், களிப்பாக்கு வகைக்குக் கழஞ்சு ஒன்று, அவின் பலம் இரண்டு, முருக்கிலைச் சாற்றில் ஒரு நாளரைத்து வைக்கவும். மறுநாள் கையாந் தகரைச்சாற்றில் அரைக்கவும். இலந்தங்கொட்டைப் பிரமாண முண்டைசெய்து நிழலிலுலர்த்தி, ரத்தசீதங் கடுப்புக்குப் பெருஞ்சூரைச்சாற்றில் தேங்காய்ப்பால் கூட்டியிடு. பெருங் கழிச்சல், பொருமல், அசீரணத்துக்கும் சரியாமைக்கும் நொச்சி யிலைச்சாற்றில் இடு. வாத உதிரத்திற்குத் தேன்கூட்டியிடு. குன்மத்துக்குத் தேனிலிடு. வாதகுன்மத்திற்கு வேப்பெண் ணெயிலிடு. சிலேற்பன குன்மத்திற்கு முருங்கைப்பட்டைச் சாற்றிலிடு. பெருவயிறுக்கு கோமயத்திலிடு. உதிரவாதத்திற்கு ஆமணக்கெண்ணெயிலிடு. தண்ணீர்த்தவனத்திற்குக் கொடிக் கழற்சிச்சாற்றிலிடு. நஞ்சு விரேசனத்துக்குப் பிராயம் பட் டைச்சாற்றிலிடு. நீர் கடுப்புக்கு ஆலம்பழச்சாற்றிலிடு. ஈளைக்குத் தேனும் வேப்பிலைச்சாறுங் கூட்டியிடு. சுரத்திற்குச் சீனியிலிடு.

பெரும்பாட்டுக்குத் தென்னம்பூசாற்றிலிடு. நீர்ச்சுரப்புக்கு இளநீரிலிடு. நஞ்சு தின்றவர்கட்கு தவிட்டாமிலைச்சாற்றிலிடு. கோரை விப்புருதிக்கடுப்புக்கு மருக்காரைப்பழச்சாற்றிலிடு. கல்லடைப்புக்கு முடக்கொத்தான்சாற்றிலிடு. உதராங்கவாயுக்கு முலைப்பாலிலிடு. வீக்கத்துக்கு புளியிலிடு. அசீரணத்துக்கு இலைக்கள்ளிச்சாற்றிலிடு. மாந்தசுரத்துக்கு முருங்கையிலைச் சாற்றிலிடு. பத்தியங் காக்கவும்.

## ஆனந்தவயிரவன் குளிகை

ரசம், கொத்தி, வெள்ளைப்பாடாணம், திரிகடுகு, கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய், சாதிப்பத்திரி, வகைக்குப் பலம் ஒன்று, கையாந்தகரைச்சாறு விட்டரைத்து வெந்தயமளவு உருட்டி, நிழலிலுலர்த்தி, ஒரு திப்பிலி, இரண்டு கிரும்பு வெதுப்பிப் பொடிசெய்து ஒரு குளிகைகூட்டி வெந்நீரில்கொடுக்க சன்னி தோடம், வலி, சயித்தியம், பிரமை, குளிர், நடுக்கல், இவை தீரும்.

குறிப்பு :—பாடாணம் அளிஞ்சிச்சாற்றிலூறப்போடச் சுத்தியாம். இப்படி ஊறப்போட்டுக் கூட்டிக்கொள்ளவும்.

## ஆரூதபுண்ணுக்கு

வெள்ளுள்ளி, வசம்பு, ஊமத்தம்வேர், இவை சமன்கூட்டி அரைத்து, நல்லெண்ணெயில் வெந்து சிவந்த பருவத்திலிறக்கிப் புண்ணிலிட ஆறும்.

வேறு :—நரையில்லாத மனிதன் எலும்பு, முத்தம், துருசி இவற்றை எலுமிச்சஞ்சாறு வார்த்து அரைத்துப் பிறகு பசுவின் வெண்ணெயிலுரைத்து புண்களுக்குப்போட்டு, பச்சைக்கழுதை லத்தி பிழிந்து சிரங்கைச்சாறு மூன்றுநாள் கொடுக்கவும். உப்பு, புளி தவிர்க்கவும். புண்தீரும். கைகண்டது.

## ஆரோக்கிய சூர்ணம்

சதகுப்பை, கருஞ்சீரகம், நற்சீரகம், இலவங்கப்பட்டை, கருவாய்ப்பட்டை, மகிழம்பு, மகிழம்விரை, அதிமதுரம் வகைக்குக் கழஞ்சி, கொத்தமல்லி பலம் எட்டு, வெள்ளைக் கற்கண்டு பலம் பதினாறு இவைகளை எல்லாமிடித்துச் சலித்து இரண்டு வேளையும் வெருகடிதூள் தின்றுவர, ஈரல் குலையை பலப்படுத்தும். தலையெரிவுகளை மட்டுப்படுத்தும். நெஞ்சு மிருது

வாகும், இருதயமசுத்தங்களைத் தள்ளும், கண்ணில்நீர் விழுந்தால் நிறுத்தும், கண்ணுக்குப் பிரகாசங்கொடுக்கும், அசீரணத்தைப் போக்குவிக்கும், நித்திரை வரப்பண்ணும், வயிற்றுப்பூச்சிகளைத் தள்ளும், இடுப்பு நோக்காட்டை நிறுத்தும், கல்லடைப்பயைத் தள்ளும், தொண்டைச் சளிகளைத்தள்ளும், கழுத்தில் வருகிற பொல்லாப்பை விடுவிக்கும், பசியெடுக்கும், சரீரத்திலுள்ள கட்டுகளை விடுவிக்கும். கைகண்டது.

## ஆசனக்கடுப்புக்கு

பெருச்சாளித்தோலை உலர்த்திப் பொடிசெய்து ஆசனத்தில் புகை பிடிக்கத்தீரும்.

## ஆனந்தவாயு, ஏறுவாதம், குடல்வாதம் இவைக்கு

ஆமணக்குவேர், கழற்சிவேர், சாரணைவேர், முடக்கத்தான் வேர், இவற்றின் இலை சமமாக அவித்துக்கொடுக்க எல்லா வாயுக் களும் தீரும். கைகண்டது.

## ஆனந்தவயிரவன்

துத்தந்துருசுகெந்தகமும் துய்யநாவிமனோசிலையும்
சுத்தம்சூதம்ரோகணியுஞ் சொன்னேன்சமனாய்த்தான்
[கொண்டு
முத்தித்துவண்டபேய்க்கரும்பை முறுக்கிப்பிழிந்த
[சாறதனால்
சிதைத்தரைத்தஉளுந்ததுபோல் செய்தேஉலர்த்தி
[நிழலுலர்த்தி
செய்தேவாதசன்னிக்குத் திரமாயானந்தவயிரவனைக்
காத்தேபடாமலிருந்துகொண்டு கருத்தாயிஞ்சிச்சா
[றதனால்
பார்த்தோருருண்டைதன்னைவிடப்பகருஞ்சன்னிபதினெட்டு
மூத்தோர்சொன்னமுறைப்படியே முடுகுசன்னி
[பறந்திடுமே.

## ஆண்பிள்ளை கோபம் அமர

சிறுநீரும், நாயுருவிச்சாறும், நல்லெண்ணெயில் காய்ச்சி முழுகக் கோபம் அமரும்.

## குழந்தைகள் கன்னபாசிக்குணம்

உச்சியும்நெஞ்சுங் குளிர்ந்திருக்கும்.

துத்தந்துருசு அனலிலே வெதுப்பி, வெள்ளைக்குங்குலியம், கஸ்தூரிமஞ்சள், முதாரிசங்கு, காசுக்கட்டி, களிப்பாக்கு, வெற்றிலைமுரிச்சு இதுவெல்லாம் சமன்கூட்டி அரைத்துப் புண்ணுக் குத்தடவ குணமாம். முலைக்குத்துக்கு நிலைப்புனைக்கிழங்கு முலைப்பால் வார்த்து அரைத்துப்பூச உடனே தீரும்.

## மாலைக்கண்ணுக்கு

திப்பிலியை பூசனியிலைச் சாற்றிலுரைத்துப்போட ஒளி வரும்.

## சர்வக்கிரந்திக்கும்

சித்திரமூலம் விராகனிடை நாலு, சாதிக்காய் விராகனிடை நாலு, வெள்ளருகு விராகனிடை நாலு, சங்கன்வேர் விராகனிடை நாலு, எள்ளு பலம் ஐந்து, சேங்கொட்டை பலம் பத்து, கருப்புக்கட்டி பலம் நாலு, இவைகள் எல்லாம் பொடிசெய்து ஒன்றாய் லேகியம் செய்து கழற்சிக்காய் அளவு சாப்பிடவும். ஏழுநாள் சாப்பிட்டு, ஐந்துநாள் மறுபத்தியமிருந்து பதிமூன்று நாள் வெந்நீருஞ்சாதமும் சாப்பிட்டு எண்ணெய் தேய்த்துத் தலை முழுகவும்.

## உஷ்ணத்திற்கு

சித்திரமூலம், திப்பிலி, மிளகு, சுக்கு, கடுக்காய், சீரகம், ஓமம், பெருங்காயம், சயிந்தலவணம், விடாபவம் சமன்கூட்டிச்சூரணம் பண்ணி வெந்நீரில் கொள்ளத்தீரும். கைகண்டது.

## காந்தரசபற்பம்

கந்தகம், அரிதாரம், மனோசிலை, காந்தம், கற்பூரம், ரசம், சாதிலிங்கம். சுக்கு, கருஞ்சீரகம் வகைக்கு விராகனிடை ஒன்று, வெள்ளைப்பாடாணம் மஞ்சாடி விராகனிடை ஒன்று, இவையெல்லாம் சுத்திசெய்து, மேனிச்சாற்றில் நாலு சாமமரைத்து, மஞ்சாடிப் பிரமாணமுண்டைசெய்து நிழலிலுலர்த்தி ஓட்டில்வைத்து சீலை செய்து, தாளிக்குள் மணலிட்டு, ஒரு சாமமெரித்து, எடுத்துத் தேனில் கொடுக்கவும். குட்டம், சொரி, சிரங்கு, பறங்கிப்புண், சூலை எல்லாந்தீரும். பத்தியம் பாலுஞ்சோறுஞ் சாப்பிடவும்.

## சன்னிக்கு மாறன்குளிகை

காந்தம், நாபி வெங்காரம், திரிகடுகு, திரிபாலே, ஓமம், சீனக் காரம், குருசானி, இவை சமன், இலிங்கம் இரட்டி, இஞ்சிச் சாற்றிலரைத்து சிறுபயறுப்பிரமாணம் உண்டைசெய்து தேனி லிட சன்னிதீரும்.

## வெள்ளைக்கு

ரசகற்பூரம் விராகனிடை இரண்டு, வெள்ளைக்குங்குலியம் விராகனிடை மூன்று, கற்கண்டு விராகனிடை ஐந்து, கந்தகம் விராகனிடை இரண்டு, கூட்டியரைத்து ஆறு பொட்டணமாக, மூன்று நாளாறுபொழுது, சாப்பிட வெள்ளை தீரும். பத்தியம் இருக்கவும்.

## கிரந்திப்புண்ணுக்கு

ரசகற்பூரம் விராகனிடை ஒன்று, வேப்பங்கொழுந்து பலம் அரை, வெல்லம் பலம் அரை, முன்சொல்லிய ரசகற்பூரத்தை முலைப்பாலிலரைத்துப் பின் சொல்லிய வேப்பங்கொழுந்தைப் போட்டு இரண்டையுமரைத்துப்பின் வெல்லத்தைப்போட்டு அரைத்து பதினான்கு உருண்டையாகச்செய்து ஏழுநாள் பதினான்கு உருண்டையும் சாப்பிட்டு ஏழுநாள் மறுபத்திய மிருந்து பதினைந்து நாள் தலைமுழுகி சிறுகீரைச்சாறுகுடித்து பிற்பாடு மிளகுநீருஞ்சாதமும் சாப்பிட இரசகற்பூரவேகந் தீரும். மறுபத்தியம், உப்பு வறுத்துக்கூட்டவும். சகல புண் கிரந்திதீரும்.

## நளிறுக்கு

கள்ளிக்கொழுந்து பலம் அரை, உள்ளி பலம் கால், மிளகு பலம் கால், வெற்றிலை மூன்று, இதை அரைத்து நளிறு வரும் போது மூன்று நாள் கொடுக்கத்தீரும்.

## மாட்டுப்பிணிக்கு

**உதிரமடைப்பன் செய்குணம்** :—நாலுகடையு முடைந்து பதறும், கண் பூளைசாறும், அமருமறும். நீர் விடுகில் குன்றி நிற்கும். மயிர் சிலுக்கும். வாயால் நுரைதள்ளும்.

**இதற்கு மருந்து** :—நெய்க்கொட்டான்பழம், கோழிக்காரம், இவற்றை, காடித்தெளிவில் கலக்கிக் கொடுக்கத்தீரும். கை கண்டது.

## குளிர்தோஷத்திற்கு

இரண்டு கழற்சிக்காய் வாங்கி உள்பருப்பை எடுத்துப் போட்டு, ஒவ்வொரு கழற்சிக்கும் கரஞ்சிரசம் விட்டு மெழுகிலு லடைத்து, கருப்புநூல், சிவப்புநூல், மஞ்சநூல், வெள்ளைநூல், நாலுவகை நூலும் சுற்றி தாயத்தாகச்செய்து கட்டவும்.

## பேதிக்கு

நல்லெண்ணெயில் எலிப்புழுக்கையை உரைத்து தொப பூழில் தடவித்துடைக்க, பேதியாகும்.

## சாவல்கட்டுவெல்ல

கீரைமேல் புல்லுருவிக்காயும், பூவுமாக வெட்டி வந்து மடியிலிருக்க நம்முடைய சாவல் வெல்லும்.

**வேறு:**—மாட்டுக்கொழுப்பை சக்கிலியனிடத்தில் சாவல் கத்திக்கித்தடவச் சொல்லி விடவேணும்.

## வழக்குவெல்ல

கவிழ்தும்பைவேர், பயற்றம்வேர், விடதாரியிலைவேர் இவை களைக்கொண்டு குளிசமாடித் தலையில் வைத்துப்போக, மன்றத் தின் வழக்கை வெல்லலாம்.

## மல்லுக்கட்ட

குப்பைமேனிவேரும், இளம்புளியமரத்தின்வேரும், தலையில வைத்துப்போக மாற்றான் விழுவான்.

## முகத்தில் விழுந்த கருப்புவாங்க

நத்தைச்சூரிவேரைப்பிடுங்கி பசுவின் பாலில் மூன்று நாளரைத்துக் கொடுக்கத்தீரும்.

## வயிறு கழிச்சலுக்கு

சந்தனம், நற்சீரகம், அதிமதுரம் இம்மூன்றையும் நன்று யரைத்துப்பாககளவு முலைப்பாலில்கலக்கிச் சிறிது வெண்ணெயும் கூட்டிக்குழைத்து விழுங்கத்தீரும்.

## கிரிப்பூச்சிக்கு

தேவதாரம் முக்கழஞ்சு, கொண்டு வந்து தட்டி தண்ணீர் விட்டுக்காய்ச்சிக்கொடுக்கக் கூண்டோடு பூச்சிவிழும். இது கைகண்டது.

## வயிற்றுவலிக்கு

பிரண்டையை அரைத்துப்பாக்களவு தேனில்கொள்ள வயிற்றுவலி தீரும்.

## எல்லா நஞ்சுக்கும்

சிறுகீரை, செங்நாயுருவி, இவைகள் சமூலம் பிடுங்கி அத்துடன் பச்சரிசிகூட்டி கஞ்சிவைத்து அந்த நீரைக்கொடுக்க சகல கடி நஞ்சு முரியும்.

## கிரிப்புழுவிழ

மான்கொம்பு இரண்டு, மூன்று நாள் சாருயத்திலுரைத்துக் கொடுக்கப் பூச்சிவிழும்.

## கண்ணில் அடிபட்டுச் சிவந்ததற்கு

சித்திராபலாடை சமூலம் பிடிங்கி நறுக்கி முலேப்பால் விட்டுப்பிசைந்து கண்ணிலே பிழியவும். கண்ணில் வைத்துக் கட்டவும். கைகண்டது.

## சந்திரகேசரக்குளிகை

கோரோசனே சாதிலிங்கம், சூடன், கற்பூரம் வகைக்குப் பலம் ஒன்று, முலேப்பாலிலரைத்து உளுந்து அளவு உண்டைபண்ணி, நிழலிலுலர்த்தி முலேப்பாலில் கொடுக்க, சுரவகை தோஷம் எல்லாம் தீரும்.

## தண்ணீர் தாகத்துக்கு

அத்திப்பிஞ்சுச்சாறு கொண்டு, இந்தச் சாற்றில் மணிக்காரம், நெல்லிக்காரம், ஏலம் இவை சமனரைத்து, நெய்விட்டு, வேண்டிய அளவு சீனி சேர்த்துக்கிண்டி மெழுகுபதத்தில் எடுத்து சுண்டை அளவு கொடுக்க நீர்வேட்கை போம்.

## குழந்தைகளுக்குக்காணும், கன்னபாசிக்கு

**அதன் குணங்கள் :—**

உச்சிநெஞ்சுகுளிர்ந்திருக்கும் உண்ணும்பாலுந்தங்காது
பச்சைநிறமேவயிர்கழியும் பாசம்போலச்சிரிதழுகும்
எச்சங்கருக்கும்எழுந்திருக்கு மெடுத்துக்குடிக்குந்தண்ணீரை
கச்சாங்கருந்துமுலேமடவீர் கன்னபாசிக்குணமிதுவே.

இதற்கு மருந்து :—ஒரு பிடி பொன்னுவாரை, ஒரு பிடி கொழிஞ்சி, ஒரு கழஞ்சி வெள்ளுள்ளி, இந்த மூன்று மருந்து

சமன்கொண்டு இடித்து சார்பிழிந்து சிறிது வெல்லம் கூட்டிக் காய்த்து வடித்து ஓர் உச்சிக்கரண்டி அளவு காலை மாலை கொடுக்கப்போம்.

## குழந்தைகள் கணைக்கு

மக்கிப்பூ, கிராம்பு, வசுவாசி, சாதிக்காய், நற்சீரகம், மாசிக்காய், கருவாய்ப்பட்டை, கொத்தம்பால், கடுக்காய், அதிமதுரம், ஈறுள்ளி, மாதுளம்பூ, சமன்கொண்டிடித்துக் கஷாயமிட்டுக் கொடுக்கவும். கணையெட்டுந்தீரும்.

## வெள்ளெழுத்து

பருத்தியின் பழுத்த இலையைக் கையில்வைத்துக்கசக்கிக் கண்ணில் பிழிய வெள்ளெழுத்து மாறும்.

## கண்ணு கழுவநீர்

நெல்லிக்காய், கடுக்காய், தானிக்காய் இவைகளின் கொட்டையைப்போக்கி ஓர் அளவு எடுத்து அத்துடன் புளியிலையும் கூட்டி கிழிக்கட்டி பானையில் நீர் எட்டுபங்கு விட்டு வெந்தபின் வடித்தநீரை வைத்திருந்து இரண்டு நேரமும் கண்ணைக்கழுவவும்.

## பெண்களுக்கு வெள்ளைபடுகிறதிற்கு

ஈறுள்ளி மூன்று பலமிடித்துச் சாறெடுத்து, உள்ளுக்குக் கொடுக்கவும். வெள்ளைபடுவது மாறும்.

## நீரிழிவிற்கு

நெல்லிக்காயும், நல்ல களிப்பாக்குமரைத்து, பசுவின் பாலிலிட்டு நீர் பாதியாகக் குறுக்கிக்காய்ச்சி குடிக்கத்தீரும்.

**வேறு :**—பூவரசின் தோலுலர்த்திப் பொடிசெய்து தேனில் குழைத்து, ஒரு சுண்டைக்காயளவு விழுங்க நீரிழிவு நிற்கும்.

**வேறு :**—கற்றுழை வேர் வடக்கே போகிற வேர் கொண்டு வந்து அரைத்து ஒரு எலுமிச்சங்காயளவு நல்ல சந்தனமும் வைத்து அரைத்து பசுவின் பாலில் குழப்பிக்குடிக்க நீரிழிவு நிற்கும்.

## அடிக்கடி சிறுநீரிழிதற்கு

எலுமிச்சம்வேர் ஒரு பாக்களவு அரைத்து, நல்லெண்ணெயில் கொடுக்கவும்.

## நீரதிர்ச்சியாய்ப் போகிறதற்கு

கோழித்தோலை உரித்து, அந்தத்தோலை வெய்யிலில் உலர்த்திப்பொடிசெய்து பன்னீரில் குழைத்து, மூன்றுநாளாறுபொழுது, தின்ன சிறுநீர் அதிர்ச்சியாய்ப் போவது நிற்கும்.

## கல்லடைப்புக்கு

நல்ல சுரையிலையை வாட்டிப்பிழிந்து, ஒரு காசளவு பொரித்த வெங்காரமும், சர்க்கரையும் கூட்டிக்குடிக்கக்கல்லு விழும்.

## நீரடைப்புக்கு

ஆட்டின் புழுக்கை கொண்டுவந்து, ஆண்பிள்ளைகள் சிறுநீரில் கலக்கி வெதுப்பி அடிவயற்றில்பூச நீர்விடும்.

## சிறுநீர் மெத்தப்போகிறதற்கு

பச்சைப்பலாயிலையை உலர்த்திப்பொடித்து, வட்டத்துத்தியிலைச்சாறு, சுட்ட வெள்ளைப்பூண்டு, பன்றிநெய், தேங்காயெண்ணெய், கோழிமுட்டை வெள்ளைக்கரு, கற்றாழைச்சாறு, இவையாவும் சமன்கொண்டு காய்ச்சி, பக்குவத்தில் எடுத்து வடித்து வைத்துக் கொண்டு, அளவோடு குடிக்க சிறுநீர் மெத்தப்போகிறது நிற்கும்.

## பித்தத் தலைச்சுற்றலுக்கு

நாயுருவியிலையை அரைத்து வெந்நீரில் கொடுக்கப் பித்தம், தலைசுற்றல், கிறுகிறுப்பு இவைகளெல்லாந்தீரும்.

## காமாலைக்கு

தேங்காய்ப்பால் நாழியில், கருங்குங்குலியம் பொடிசெய்து, போட்டு மூன்று நாள் கொடுக்கக் காமாலை தீரும்.

**வேறு:**—குப்பைமேனிவேர், வெள்ளைச்சாரணைவேர் கூட்டி பசுவின் பாலிலரைத்து மூன்றுநாள் அந்தி சந்தி கொடுக்கத் தீரும்.

## மஞ்சள் காமாலைக்கு

பருத்தியிலை ஒருபிடி இடித்தரைத்து பசுவின் பாலில் கொடுக்கவும்.

## பித்தத்துக்கு

நற்சீரகம், சமுத்திராப்பழம், கற்கண்டு, இவைகளைப் பொடி செய்து தின்னப் பித்தந்தீரும்.

## கண் புழுவிற்கு

ஆடுதீண்டாப்பாலைச்சாற்றை சீலையிலூட்டி உலர்த்தி எண்ணெயில் நனைத்துக் கண்ணிலிடத்தீரும்.

## சோகைக்கு

நாயுருவியிலை கருகவறுத்தது ஒருபடி, மஞ்சள்வேர் ஒருபிடி, மிளகு ஒருபிடி, அரப்பொடி ஒருபிடி, கூட்டி அரைத்து சிவக்க வருத்து எடுத்து தக்க அளவில் தின்ன, சோகை, பித்தம், பாண்டு நோய்கள் இவை எல்லாந்தீரும். கைகண்டது.

## குழி தோஷத்திற்கு

இரண்டு கழற்சிக்காய் வாங்கி உள்பருப்பை எடுத்துப் போட்டு, ஒவ்வொரு கழற்சிக்கு ஒரு கழஞ்சி சீரகம் போட்டு மெழுகினலடைத்து கருப்புநூல், சிவப்புநூல், மஞ்சள்நூல், வெள்ளைநூல், நாலுவகை நூலுஞ்சேர்த்துத் தாய்த்துப்போலே தைத்து தூபங்கொடுத்துத் தாய் கழுத்திலேயும், பிள்ளை கழுத்திலேயும் கட்டவும். பசலைவேரை அரைத்து ஆமணக்கெண்ணெயில் கலந்து முலைப்பாலில் புகட்டவும். குழிதோஷம் போகும்.

## சிரங்குக்கு

வாகைப்பட்டையை இடித்து உழக்கு வேப்பெண்ணெயில் வேகவைத்து இடவும். இந்த எண்ணெய் காதிலிட காதில் புகுந்த ஈ சாகும்.

## தலை நோவுக்கு

தேத்தான் வீரை சிறிது முலைப்பாலிலரைத்து நசியம் பண்ணத் தலைநோய் மாறும்.

## ஈளைக்கு

முதலைச் சதையை பாக்களவு எருமை மோரில் கொடுக்கவும்.

வேறு:—இலுப்பைக் கட்டியைத் தூள் செய்து சட்டியில் தண்ணீர் வார்த்து, வேடுகட்டி இந்த தூளைவைத்து மறுபடி சட்டியால் மூடியவித்து எடுத்து அதில் இரண்டு, மூன்று காசிடை கொடுக்கத்தீரும். சளைகூண்டோடு விழும். தொண்டை வலித்தால் பச்சரிசியும், பச்சப்பயறும் அவித்துக் கஞ்சி கொடுக்கவும்.

## குழந்தைகள் கணைக்கு

மக்கிப்பூ, கிரும்பு, வசுவாசி, சாதிக்காய், சீரகம், மாசிக்காய், கருவாய்ப்பட்டை, கொத்தமல்லி, கடுக்காய், சுருள்ளி மாதளம்பூ, இவைகளைச் சமன்கொண்டு இடித்துக் குடிநீரிட்டுக் கொடுக்கவும். கணையெட்டுந்தீரும்.

## பித்தத்தலைக் கிறுகிறுப்புக்கு

நாயுருவியிலையை அரைத்து வெந்நீரில் கொடுக்கத் தீரும்.

## காமாலைக்கு

தேங்காய்ப்பால் நாழியில், கருங்குங்குலியம் பொடிசெய்து போட்டு மூன்று நாள் கொடுக்க காமாலை தீரும்.

## பித்த வாயுவுக்கு

நற்சீரகம் தண்ணீரிலிட்டுக் காய்ச்சி வெல்லம் போட்டுக் கொடுக்கத்தீரும்.

## வாயுவுக்கு

சுக்கு, மிளகு, வெள்ளைப்பூண்டு, காயம் சமன்கொண்டு இடித்து புன்னைக்காய் அளவு தின்ன வாயு தீரும்.

## வெந்த புண்ணுக்கு

நெல்லிக்காயும், மாதுளைத்தோலும் கருகவறுத்து முலைப் பாலி லரைத்துக் குழப்பிப்பூசத் தீரும்.

## வெட்டுப்பட்ட புண்ணுக்கு

தும்பையிலையை அரைத்து எண்ணெயில் வேகவைத்து மெழுகு பதத்திலிறக்கி புண்ணிற்போட வெட்டுப்பட்ட புண் ணாறும்.

## வயிற்றுக் கடுப்புக்கு

சாதிக்காய், நெய்யில் போட்டுப் பொரித்து அரைத்துத்தயி ரில் குழைத்துத்தின்னவும். தாகமும், வயிற்றுக்கடுப்பும் மாறும்.

## மஞ்சள் சோகைக்கு

கோவையிலைச்சாறும், சிறுபயறும் சமன்கூட்டி அத்துடன் சீனி சிறிதுகூட்டிச் சிறங்கை கொடுக்கத்தீரும்.

## புண்ணுக்கு

கந்தகம் பலம் இரண்டு, ரசம் பலம் ஒன்று, ஈயம் பலம் கால் பொடித்துக்கொண்டு மோருஞ்சோறும் கொடுத்து இந்தப் புகை காட்டவும். பிறகு குளித்து வரத்தீரும்.

## கொள்ளைக் கழிச்சலுக்கு

சாதிக்காய் ஒன்றரை, கிரும்பு இருபது, ஓமம் பலம் ஒன்று, நெல்லிப்பருப்பு பலம் ஒன்று, பொரி அரிசிமாவு சிறங்கை ஒன்று, விஷக்கொத்துப் பொடிசிறங்கை ஒன்று, இந்த மருந்துகளையெல்லாம் சூரியபுடம் வைத்து இடித்துச் சூரணஞ்செய்து வெருகடி பசுவின் தயிரில் கொடுக்கவும். எந்தக்கழிச்சலும் மாறும்.

## மேகம் 21-க்கு

வெள்ளைச்சாரணைவேரை, பசுவின் பாலிலவித்து உலர்த்தி சூரணஞ்செய்து தேன், சர்க்கரைகூட்டி, குழப்பி, நெல்லிக் காயளவு அந்தி சந்தி தின்று வரவும். பத்தியம் கைபிடிக்கவும். மேகம் இருபத்தொன்றும் தீரும். கைகண்டது.

## பித்தங்கக்க

கடுக்காய்ப் பொடியும் சீனியுங்கலந்து வெந்நீரில் கலக்கிக் கொடுக்க வாந்தியோடு பித்தங்கழியும்.

## எலிகடிக்கு

சிறுவிளாவேர் வடக்கே போகும்வேரை வெட்டிவந்து, அதைக் கலவத்திலிட்டு பசுவின் பாலில், அத்தியிலைச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு, இவை கலந்து அரைத்துக் கொடுக்கவும். அதன்பிறகு அரசன்பட்டைவேர், வில்வவேர், அவுரிவேர், முருங்கைவேர், கருவேப்பம்வேர், குதிரைவாலிவேர், சாரணைவேர் சமன்கூட்டி அத்துடன் உள்ளி, வசம்பு, கருஞ்சீரகமும் கூட்டி இடித்து நல்லெண்ணெயில் காய்ச்சி உள்ளுக்குக் கொடுக்கவும். எலிகடி நஞ்சு தீரும். கைகண்டது.

## வயிரெரிவுக்கு

சீனிசிறங்கை ஒன்று, நெய்சிறங்கை ஒன்று, நற்சீரகம் சிறங்கை ஒன்று, இம்மூன்றுங்கூட்டி நறுக்கிக் கொஞ்சம் வேக வைத்துத்தின்ன வயிரெரிவு தீரும்.

## தலைமுடி புழுவெட்டுக்கு

வேப்பமுத்து, கருஞ்சீரகம், மிளகு சமன்கூட்டி எண்ணெ யிலரைத்துக் கலக்கித் தலைமுழுகிவர நன்று.

## விக்கத்திற்கு

உப்பை பழச்சாற்றிலரைத்துப்பூச மாறும்.

## புண்ணுகளின் புழுவிழ

ஈருள்ளியை எண்ணெயிலிட்டுக் கொதிக்க வைத்துப் பிழிந்து அதனை புண்ணிலிடத் தீரும்.

## வயிற்று வலிக்கு

கடுக்காய் பலம் இரண்டு, வேப்பிலை பத்து, பிரண்டைச் சாறு விட்டரைத்து விளக்கெண்ணெயில் கலந்து விழுங்க பழைய மலக்கட்டு விழும். வயிற்றுப்புழு வெளியாகும். வயிற்றுவலி தீரும்.

## சிறுபிள்ளைகள் இருமலுக்கு

தேத்தான்கொட்டை, கடுக்காய், மாசிக்காய், சீனிக்காரம் இவை சமன்கூட்டி சிறிது எடுத்து முலைப்பாலிலுரைத்துக் கலக்கிக்கொடுக்கவும், வெந்நீர் கொடுக்கவும், தீரும்.

## வயிற்றுக் கடுப்புக்கு

மாதுளைத்தோல், உலுவாய், நற்சீரகம், ஓமம், நெற்பொரி, மாசிக்காய், சுக்கு, இவை எல்லாம் சமன்கூட்டி தயிருடன் அரைத்துக் கலக்கிக் கொடுக்கவும்.

## பிள்ளைகள் வயிற்றுக் கடுப்புக்கு

**ரத்தஞ்சீதங் கண்டால் குளிகை :**—வில்வவேர், நீலக்குமிழம் வேர், நற்சீரகம், நன்னாரிவேர் சமன்கொண்டு அரைத்து, முலைப் பாலிலரைத்து உண்டைசெய்து பழச்சாற்றில் கொடுக்கவும். கைகண்டது.

## பல்லரணைக்கு

சதுரக்கள்ளிப்பட்டையும், மகிழம்பட்டையும் சமனிடித்துச் சுவைக்க பல்லுறுதியாகும். பல்லரணைபோம்.

## பல்லசைவுக்கு

நொச்சியிலையில் சர்க்கரையைக் கரைத்துத்தெளித்து நிழலிலுலர்த்தி, வாழையிலையில் சுருட்டி அந்தி சந்தி புகை குடிக்கப் பல்லசைவு நிற்கும்.

## நடுக்குக் காய்ச்சலுக்கு

காய்ச்சலுங்குளிரும் வந்தநேரம், கீழாநெல்லியிலையைப் பாக்களவு அரைத்து, இரண்டு பணவிடை வெண்காரம், பொரித்துக்கலந்து வெற்றிலையில் வைத்துத்தின்ன சுரம் மாறும்.

## கண்ணில்விழும் பூவிற்கு

கத்தாழைசோற்றை ஏழுதடவை தண்ணீரில் கழுவி, சீனக்காரம் பொரித்து, நற்சீரகம் இம்மூன்றும் சமன் கொண்டு சீலையில் கட்டி முலைப்பாலில் துவைத்துக் கண்ணிலிடப் பூமாறும்.

## வயிற்றுக் கடுப்புக்கு

சுக்கைப்பொடிசெய்து வெறுகடி எலுமிச்சம்பழச்சாற்றில் கொடுக்கவும்.

## புண்ணின் புரையடங்க

புங்கம்பால்சிறங்கை ஒன்று, நல்லெண்ணெயிருசிறங்கை விட்டுக்காய்ச்சி, துருசு கழஞ்சி கால், கூடப்போட்டுக் காய்ச்சி மணல்பருவம் வரும்போது இறக்கி வைத்துக்கொண்டு, எந்தப் புண்ணுக்கும் சீலையிலூட்டிப் போடத்தீரும். கைகண்டது.

## வயிற்று வலிக்கு

முருங்கைப்பட்டை, வெங்காயம், உள்ளி, வசம்பு, சுக்கு, மிளகு, இவற்றை உழக்குத்தண்ணீரில் போட்டு ஆழாக்காகக் காய்ச்சி, வடித்து பெருங்காயங்கூட்டிக் கொடுக்க வயிற்றுவலி தீரும்.

## சன்னிக்கு

முருங்கைப்பட்டைச்சாறும் தேனுங்கூட்டி உள்ளுக்குக் கொடுக்கவும்.

**நசியம் :**—முருங்கைப்பட்டைச்சாறும், தும்பைச்சாறும், வேப்பம்பட்டைச்சாறும், குப்பைமேனிச்சாறும், மிளகும் சமனரைத்து நசியம் பண்ணச் சன்னி தீரும்.

## பேய் விலக

மூஞ்சூர் எலியைப் பிடித்து வந்து உரித்து வசம்பும் வெள்ளுள்ளியும் கூட்டி வேப்பெண்ணெயில் வேகவைத்து உடலிலிட காலனும் விட்டோடும்.

## கண்டமாலைக்கு

பச்சை நாவியை உரைத்து வீக்கத்தில் தடவவும், நல்ல சதையில் படக்கூடாது. இவ்வாறு மூன்று நாளைக்குப் பூசவும். சில நாள்கள் விட்டு விட்டு இவ்வாறாக ஆறு முறை பூசி வரவும். கைகண்டது.

## எலிகடிக்கு

எலிப்புழுக்கை கழஞ்சி இரண்டு, பசுவின்பாலில் குழப்பிக் கொடுக்கவும். பத்தியம் ஆறு நாளிருக்கவும். கைகண்டது.

## எலிகடி நாள்சென்றால்

ஊமத்தனிலைச்சாறும், நல்லெண்ணெயும் சரியாக மத்தித்து மூன்றுநாள் காலையில் மூன்று காசிடை கொடுக்கவும். உப்பு, புளி தவிர்க்கவும். ஆறு நாள் பத்தியம். மயக்கமானால் பச்சைத்தண்ணீர் வார்க்கவும். மயக்கம் இல்லாதிருந்தால் வெந்நீர் கூட்டவும். கைகண்டது.

## எலி ஓட்ட

குப்பைமேனிச்சாற்றில் சாதிலிங்கமரைத்து ஒரு எலியைப் பிடித்து அதன் மேல் தடவிவிட சகல எலியும் வீட்டைவிட்டு ஓடிப்போம்.

## ஒருதலை வலிக்கு

இலுப்பைக்கட்டி பாக்களவு சீலையில்கட்டி நீரிலூறப் போட்டு நோயுள்ள காதில் பிழியவும். பின்னும் பெருங்காயம் வெள்ளுள்ளித்தோல், மஞ்சள், இலுப்பைக்கட்டி வகைக்குக் கழஞ்சு ஒன்று, இவைகளை அரைத்து சீலையிலூட்டி நாசியி லூட்டி நாசியில் புகை பிடிக்கவும்.

**வேறு:**—கிரும்பு, அபின், கழற்சிப்பருப்பு, வகைக்குக் கழஞ்சு ஒன்று, திரிசெய்து நாசியில் புகைபிடிக்கவும். கை கண்டது.

## கலங்கின கண்ணுக்கு

ஊமத்தனிலையைக் கசக்கி மூன்றுதுளி கண்ணிலிட்டு, அந்த இலையும் மூன்று மிளகுமரைத்து கண்ணில் வைத்துக் கட்டவும். தீரும்.

## காதின் புழு விலக

பிரண்டைச்சாறும், எலுமிச்சம்பழச்சாறும் கூட்டிக் காதிலிடப் புழு சாகும்.

## காதில் சீழ் வடிதலுக்கு

தேங்காயைத்திருவி சுண்ணும்புபோட்டுக் காய்ச்சி நெய்யாக்கிக் காதிலிட சீழ் வடிதல் தீரும்.

**வேறு:**—புளியாரைக்கீரை, வசம்பு, மூத்தின புங்கம் பட்டை, வெள்ளுள்ளி இவை சமன்கூட்டி அரைத்து நல்லெண்ணெயில் கூட்டி முறுகக்காய்ச்சிக் காதில் பிழியவும் தீரும். கை கண்டது.

## காய்ச்சல் குளிருக்கு

கெவுரி, சாதிலிங்கம், இரண்டும் சரியிடை கொண்டு ஊமத்தம் சாறுவிட்டு ஒரு நாளரைத்து சிறுபயறளவு உண்டை செய்து வெந்நீரில் கொடுக்கவும். கைகண்டது. காய்ச்சல் மறுபடி வந்தால் நொச்சியிலையும் மிளகும் ஒன்றுயவித்துக் கொடுக்கவும்.

## காதில் தினவு, பூச்சி இவைக்கு

அருகம்புல்லை அரைத்து நல்லெண்ணெயில் கொதிப்பித்துத் தடவவும்.

**வேறு:**—உத்தாமணிச்சாறு பிழிந்து காதிலிட கூண்டோடு பூச்சி விழும். கைகண்டது.

## கிராணிக்கு

கருங்கண்தேங்காய் ஒரு மூடியைத்திருகி வெந்நீர் தெளித்து அரை உழக்குப் பாலெடுத்து அதில் குன்றியளவு அபின் கரைத்துக் கொடுக்கத்தீரும். இப்படிக்கு மூன்று நாளைக்கு கொடுத்து மூன்று நாளைக்கு உப்பு, புளி நீக்கவும். கைகண்டது.

## இளைப்பு நோய்க்கு

அட்டையைப்பிடித்து சட்டியிலிட்டு தண்ணீர்விட்டு சீனியும் கொஞ்சம் போட்டுக்காய்ச்சி அதில் அரைக்கால் படி தண்ணீர் கொடுத்து அட்டையை எடுத்து உலர்த்திப் பொடிசெய்து இரண்டு பங்கு சீனியும் போட்டுக் கொடுக்கத்தீரும். கைகண்டது.

## சன்னிக்கு

**சந்திரப் பிரகாசவுண்டை :**—கந்தகம் பலம் ஒன்று, பச்சை நாபி பலம் ஒன்று, சாதிலிங்கம் பலம் முக்கால், கழற்சிப்பருப்பு பலம் முக்கால், நெல்லிப்பருப்பு பலம் முக்கால், திப்பிலி பலம் மூன்று, இவைகள் எல்லாவற்றையும் இஞ்சிச்சாற்றில் அரைத்து குன்றிமணி அளவு உண்டைசெய்து கொடுக்கவும். சன்னி தீரும். கைகண்டது. பத்தியம் பாலுஞ்சோறும்.

## சிறுபிள்ளைகள் வாந்திக்கு

அதிமதுரத்தைப் பாலிலரைத்து பஞ்சில் துவைத்துப் பிழியவும். அல்லது நெல்பொரியை பாலிலரைத்துக் கொடுக்கவும்.

## சிறுபிள்ளைகள் சுரத்திற்கு

சுக்கு, வசம்பு, கொத்தமல்லி, வெள்ளுள்ளி, பற்பாடகம், முத்தக்காசு, வகைக்குக் கழஞ்சி ஒன்று, சேர்த்து ஒரு சட்டியி விட்டு ஒருபடி தண்ணீர்விட்டு நாலொன்றாய்க் காய்ச்சி ஒன்று அல்லது இரண்டு பாலாடை கொடுக்கத்தீரும்.

## தண்டுகட்டுக்கு

நிலப்பனைக்கிழங்கு பலம் ஒன்றரை, பொடிசெய்து சர்க்கரை பலம் அரை கூட்டித் தின்னவும்.

## தலைநோய்க்கு

பெருவிரலால் தலையை ஊன்றிப்பார்க்க நோய்தோன்றும். நோயுள்ள அந்த இடத்தில் சூடுபோட நிற்கும்.

## பல்வலிக்கு

சீந்தில்கொழுந்தும், சுக்கும் அரைத்துப்பூசவும். பல்வலி நிற்கும்.

## பாம்பு நஞ்சுக்கு

சிறுகொமட்டி சமூலத்தைப் பொடிசெய்து வெருகடி தூள் வெந்நீரில் போட்டுக்கொடுக்கவும். கைகண்டது.

## நல்ல பாம்புக்கு

மூக்கரைச்சாரணைவேரை வில்லை வில்லையாய் நறுக்கி நிழலி லுலர்த்தி வைத்துக்கொண்டு அதனில் இரண்டு மூன்று வில்லை கொடுத்து வெந்நீர் கொடுக்கத்தீரும். கைகண்டது.

## பாம்பு சாக

சுங்கான்களிம்பை உலர்த்திப் பொடிசெய்து பாம்பு முகத்தில் போடச் சாகும்.

## பாம்பு பிழைக்க

சுருள்ளியைக் கசக்கி பாம்பின் நாசியில்விட உயிர்வரும்.

## பித்த நோய்களுக்கு

பஞ்சதாரைநாற்கழஞ்சு பருத்தமதுரமிருகழஞ்சு
இஞ்சிசுக்குயிருகழஞ்சு ஏலந்தானுமொருகழஞ்சு
அஞ்சுமொன்ருய்த்தான்கூட்டி ஆவின்பாலில்கொள் [வீரேல்
மிஞ்சுபயித்தியம்நாற்பதுவும் விட்டேஓடுங்கண்டீரே.

## பிள்ளையில்லாமல் மாதவிடையில்லார்க்கு

ஆண்பனைக்குருத்தைச் சுட்ட சாம்பலை பாலில் கொடுக்க சூதக விலக்கம்மாறி நின்று விட்டவர்களுக்கும், மீண்டும் சூதகம் உண்டாகும். பிள்ளை பெறுவார்.

## பிள்ளையுண்டாக

தேவாங்கின் முதுகெலும்புடன், கருப்புப் பசுவின் பாலிட் டரைத்து விலக்கமான மூன்று நாள் கொடுக்கப் பிள்ளை யுண்டாம்.

**வேறு:**—விஷ்ணுக்கிராந்தியும், ஓரிதழ்த்தாமரையும் கூட்டி பாலிலரைத்து மாதவிடை கண்ட விடியற்காலை கொடுக்கவும்.

## பிசாசு ஆடாமல் நிற்க

தூபகலசத்தில் பீதரோகணி போட்டுப் புகையூட்ட, பேய் போல் ஆடுகின்றவர்களின் ஆட்டம் அடங்கும்.

## பிள்ளை பிறக்க

திப்பிலியைக் காடியிலரைத்து முதுகிலும் கீழ்வயிற்றிலும் தடவ, செத்தபிள்ளையானாலும் விழும்.

## புண்புரைக்கு

பசுவின்நெய் ஒருபடி, கொடிவேலிவேர், எலுமிச்சங் காயளவு, கருப்புக்கட்டி அந்த அளவு கூட்டிக்காய்ச்சி, வெருகடி கொடுத்து நெய்யும் தடவவும். புரை ஆறும். நன்று.

## பேய்நாய் கடிக்கு

வேப்பெண்ணெயில் நெல்லிக்காய் கந்தகம் பொடியிட்டு இருப்புக்கரண்டியில் நன்றாய் எரித்து, கடிவாயில் எருமைச்சாணி வளைத்து எண்ணெய்விட்டு சாணியால் மூடவும். அழிஞ்சிப் பட்டையை அரைத்து தேத்தாம்பழம் அளவு மூன்று நாள் ஆறுவேளை கொடுக்கவும். பத்தியம் : பன்னிரண்டு நாளைக்குப் பிறகு ஒவ்வொன்றாய்க் கூட்டவும். சுட்டுப் புண்ணாகியதை மருந்திட்டு உலற்ற வேண்டாம். கைகண்டது.

## மஞ்சள் காமாலைக்கு

கற்றாழைவேர்ச்சாறு படி கால், பசுவின்பால் படி கால், கொஞ்சம் சீனியும் கலந்து கொடுக்கவும்.

**வேறு :—**தேங்காய்ப்பாலில் ஆவாரைவேர்த்தோல் எலுமிச் சங்காயளவு அரைத்துக்கலக்கி மூன்றுநாள் கொடுக்கத்தீரும்.

## மண்டை நோவுக்கு

திரிகடுகு, வெள்ளுள்ளி, கடல்நுரை, இலுப்பைப்பருப்பு, இவை சமன் அரைத்துக் காய்ச்சி முழுகவும்.

## மாலைக்கண்ணுக்கு

கழுதை எலும்பை முலைப்பாலிலுரைத்துக் கண்ணிலிடவும்.

**வேறு :—**முருங்கைவிரையை தண்ணீர் விட்டரைத்து வாசப் படியில் கிடத்திக்கொண்டு கண்ணிலிடவுந் தீரும்.

## முலைப்பால் சுரக்க

(1) கட்டுக்கொடிக்கிழங்கை, கருப்பு ஆட்டின் பாலி லரைத்துக் கொடுக்கப் பால்சுரக்கும்.

(2) ஆலம்விழுதைத் தயிரிலரைத்துக் கொடுக்கவும்.

(3) கோழிமுட்டைவெள்ளைக்கருவில் சாதிப்பத்திரி பொடித்துக் கலந்து கொடுக்கவும்.

## மூலக்கடுப்பில் இரத்தம் விழுதற்கு

இளநீர் கண்திறந்து சீனிபோட்டு விடியற்காலங் கொடுக்கத்தீரும்.

## மூட்டைப் பூச்சி போக

நாறுகரந்தையைப் புதுச்சட்டிக்குள் வைத்து சிறிது பாலூற்றி வீட்டின் ஒரு புறம் வைக்க மூட்டைப்பூச்சி சாகும்.

## ரசகுளிகை

முத்தெருக்கஞ்செவியதனை முலைப்பாலிலிட்டரைத்து
மூன்றுகுகைபிடித்தனில் கழஞ்சிஇரதம்விட்டு
பத்தியுடன்பூநுகம் பதிந்ததனில்பூசி
பதிவாகச்சூட னுடனெய்தனைவிட்டு
எட்டுவித்தையாடுமப்பா யிதுதொழிலைச்சொன்னேன்
எவர்க்குமறிவிக்காதே என்குருவினுண்மை(?)

வேறு :—கருஊமத்தின்சாற்றில் ரசம்விட்டு செவ்வத்திக் கொம்பால் கடைய மணியாம்.

## வங்கபற்பம்

வெள்ளீயம் கழஞ்சி ஐந்து, பால்கருடப்பச்சை கழஞ்சி ஐந்து, பொடிசெய்து வறுக்கப் பற்பமாம்.

## வயிற்று கட்டிக்கு

காட்டாமணக்கு இலையை வேகவைத்துத் தின்ன கட்டி கரையும். கழிச்சலதிகமானால் மோரும் சோறும் கொடுக்கத் தீரும்.

## வஞ்சனை சூனியந்திர

சிறுதுத்திவேரும், தூதுவளைவேரும் காடியிலரைத்துக் கொடுக்கத்தீரும்.

தூவாலை :—நீர்மேல்நெருப்பு இலையை எலுமிச்சம்பழச் சாற்றிலரைத்துத் துவாலை இடத்தீரும். கைகண்டது. இச்சா பத்தியம்.

**உண்டை :—**இரசம் பலம் ஒன்று, கெந்தி பலம் இரண்டு, வெங்காரம் பலம் மூன்று, சுக்கு பலம் நாலு, மிளகு பலம் ஐந்து, கடுக்காய் பலம் ஆறு, இவைகளைச் சுத்திசெய்து அத்துடன் சுத்த நேர்வாளம் பலம் ஏழு கலுவத்திலிட்டு கற்ருழைச்சாறு விட்டரைத்து குன்றிப்பிரமாணம் உண்டை செய்து உலர்த்தி, மூன்று உண்டையை நசுக்கி வெல்லத்தில் பொதித்து கொடுக்கவும். வயிறுகழியும். மிகுதியாகக்கழியின் அதற்கு மாற்று, மோருஞ்சோறுங் கொடுக்கவும்.

## மூர்க்கமுள்ள பெண்களை ஒடுக்க

நல்லபாம்புச் சட்டையைக் கோலில்சுற்றி விளக்கில் பிடித்தால், தைலம் கருப்பாய் விழும். அதில் பச்சைக்கற்பூரமும், பச்சைப்புனுகும், கூட்டிக்கலக்கி அதில் சிறிது எடுத்து பூவில் தடவி அவளுடன் புணர அவளின் உடம்பு குளிர்ந்து மோகம் வெளியில் காணும். ஆணுக்கும் இன்பம் பெருகும். இன்பமுண்டாம்.

## சுரத்திற்கு

**உண்டை :—**இலுப்பைப்பூ பலம் ஒன்று, கடுகுரோகணி பலம் இரண்டு, வாளம் பலம் இரண்டு, இவைகளைக் கலுவத்திலிட்டுத் தண்ணீரிலரைத்துக் குன்றியளவு உண்டைசெய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு, ஒரு உண்டை வாதசுரத்துக்கு இஞ்சிச்சாற்றிலும், பித்தசுரத்திற்கு சர்க்கரையிலும், சிலேற்பனசுரத்திற்குத் தேனிலும், வாதசன்னிசுரத்திற்கு முலைப்பாலிலும் கொடுக்கத்தீரும்.

## மூலம் கூண்டோடுவிழ

காட்டுக்கருணை, கறிக்கருணை, மெருகங்கிழங்கு, புளிநரளைக் கிழங்கு, மணிப்பிரண்டைக்கிழங்கு, இவைகளைக்கழுவி சிறு துண்டுகளாக்கி உலர்த்திப் பொடிச்செய்து பேய்ச்சுரைக்குடுக்கையிலடைத்து வைத்துக் கொண்டுமூன்றுநாளைக்கு வெருகடிப் பிரமாணம் தேனில் குழைத்துத்தின்ன மூலங்கூண்டோடு விழும்.

## மூலம்விழ

வெண்தோன்றிக்கிழங்கும், அரணைக்கிழங்கும் வேலிப்பருத்தியும் இடித்துப் பானையில் போட்டு மிதக்கத் தண்ணீர் விட்டுக் காய்ச்சி, அதன் ஆவியைக்காட்ட மூலம் விழும்.

## இரத்தங் கக்கலுக்கு

கடுக்காய், நெல்லிவேர், சிறுகீரைவேர், சந்தனம் ஆகிய மூன்றுஞ் சரிகொண்டு துவைத்துப்பிழிந்து மூன்றுநாள் பசுவின் பாலில் கொடுக்கத் தீரும்.

மலங்கட்டினுல் கோழியின் கல்லீரல் வாங்கி அதனுள்ளே இருக்கிற கல்லை எடுத்துப் பசுவின் பாலிலரைத்துச் சீனிகூட்டிக் கொடுக்கவும்,

## வயிற்றெரிவுக்கு

பருத்தியிலைச்சாறும், எண்ணெயுங் கூட்டிக் கொடுக்கவும். அல்லது இந்த இலையைப் பொடிசெய்து நெய்யில் குழைத்து விழுங்கவும். தீரும்.

## வயிற்றுகடுப்புக்கும், மூலக்கடுப்புக்கும்

பருத்திப்பிஞ்சு பலம் ஒன்று, இலந்தையிலை பலம் ஒன்று, ஈறுள்ளி பலம் ஒன்று, இவைகளைக் காடித்தெளிவில் அரைத்து மூலத்தின்மேல் துணியில் நனைத்துக்கட்ட நன்று. கைகண்டது.

குன்றியிலைச்சாறு மூன்று காசிடைத் தேனில் கலந்து கொடுக்கவும். வயிற்றுகடுப்புத்தீரும். கைகண்டது.

**வேறு:**—இலவங்கப்பட்டை பலம் ஒன்று அரைத்து நாணல்சாறு கலந்து, மூன்று கிரும்பை ஒரு துணியில் முடிந்து நாளொன்றுகக் காய்த்து ஒரு கிரும்பும் கொஞ்சம் தண்ணீரும் கொடுக்கவும்.

## வயிற்று வலிக்கு

நல்ல அரக்கு, வெள்ளுள்ளி இவை சமன், அரிசி இரண்டு பங்கு கூட்டி அரைத்துக் காய்ச்சிக் குழம்பானபின் எடுத்து அதனில் முள்ளிக்காயளவு தின்னவும். வயிற்றிலுள்ள பூச்சியும் சாகும்.

**வேறு:**—நெல்லிப்பிஞ்சு படி ஒன்றை, பசுவின் கோமயம் படி அரையிலிட்டு வைத்து பத்துநாள் கரியாகச்சாப்பிடவும் நன்று.

## வாயுவுக்கு

இரசம் ஓர் பணவிடை, வெண்காரம் ஓர் பணவிடை, நேர்வாளம் நஞ்சு போக்கியது பன்னிரண்டு பணவிடை, திப்பிலி ஓர் பணவிடை, இவைகளை எல்லாம் நொச்சிச்சாற்றிலரைத்துப்

பின்பு முருங்கையிலைச்சாறு விட்டரைத்து, மஞ்சாடியளவு உருட்டி, நிழலிலுலர்த்திக் கொண்டு, சுக்குக் குடிநீரில் கொடுக்க எல்லா வாயுவுந்தீரும்.

**வேறு** :—வேர்க்கொம்பு, வெங்காயம், மிளகு, வசம்பு, இவை சமன்கூட்டிக் குடிநீர்செய்து கொடுக்க சகல வாயுவுந்தீரும்.

## இருமலுக்கு

*நெல்லி திப்பிலி நெல்பொரி சர்க்கரை*
*நல்லதேனில் நறுநெய்யி லீந்திடில்*
*இல்லை யில்லை யிருமலு மீளையும்*
*தில்லை யம்பல நாதர் தணையே.*

*நீடுமா தளை நெல்பொரி சர்க்கரை*
*தேடுந் திப்பிலி தேனில் குழைத்திடில்*
*பீடை யீளையும் பெரு விக்கல்சத்தியும்*
*ஓடிஓடி ஒளிந்திடு முண்மையே.*

[(பொ-ள்.) நெல்லி, திப்பிலி, நெல்பொரி, சர்க்கரை, இவைகளை ஓர் அளவாகப் பொடித்துத் தேன், நெய் கூட்டிக் கிண்டி உண்ண இருமல் போம்.

நெல்பொரி, திப்பிலி பொடித்து அதில் மா துளைப்பழச்சாறு, சர்க்கரை, தேன் கூட்டிக் குழைத்துக் கொடுக்க, இருமல், விக்கல், வாந்தி இவை போம்.]

## இருமலுக்கும், ஈளைக்கும்

ஏலம், லவங்கம், பச்சிலை, திரிகடுகு, கடுக்காய், நெல்லி, தான்றி, வசம்பு, கடுகுரோகணி, அதிவிடயம், செவியம், விளாலரிசி, அத்தித்திப்பிலி, நிலவேம்பு, தூதுவளைவேர், ஓமம், பங்கம்பாளைவேர், சிறுமூலம், இவை வகைக்குப் பலம் ஒன்று, பொடிசெய்து சிற்றாமணக்கெண்ணெயில் குழைத்துத் தின்றுவர இருமல், ஈளை, குடல்வாதம், விக்கல், மூலரோகம், பீலிகை, காமாலைபாண்டு, நெஞ்சு நோக்காடு, பல்நோய் இவை எல்லாந்தீரும்.

**வேறு** :—முருங்கைவிதை, இலை, வேர், ஆகிய இவைகளை அரைத்துக்கலையத்திலப்பி வெய்யிலில் வைக்கத்தைலம் விழும். இதை எடுத்து வெற்றிலையில் தடவிக்கொடுக்க, ஈளை, இருமல் தீரும்.

**வேறு:**—ஆடாதொடையிலைவேர், தூதுவளை சமூலம், திப்பிலி, உள்ளி, கருஞ்சீரகம், இவைகளைச் சமன்கூட்டி பசுவின் நெய்யில் வேகவைத்துக் கொடுக்க மாறும்.

**வேறு:**—திப்பிலி வறுத்துப் பொடிசெய்து வெருகடி தூள் எடுத்து ரூபாயிடைத்தேனில் குழைத்துத்தின்ன ஈளை இருமல் தீரும்.

**வேறு:**—பொடுதலை ஒரு பிடி, சுக்கு, மிளகு, திப்பிலி சமன் பொடிசெய்து தேனில் வெருகடிதூள் குழைத்துத்தின்ன தீரும். கைகண்டது.

## இரத்த பித்தத்துக்கு

கார்எள்ளு கழஞ்சி, சர்க்கரை கழஞ்சி, வெள்ளாட்டுப் பாலிலரைத்துக் கொடுக்கப்போம். கைகண்டது.

## ஈளைக்கு

உத்தமதாளி சமூலமிடித்துப் பொடிசெய்து வெருகடி நெய்யில் குழைத்து விழுங்கவும்.

**வேறு:**—கரியுப்பை எருக்கம்பாலில் எட்டு நாள் ஊறப் போட்டு பழம்புளி இரண்டு பாக்களவு கூட்டி வெந்நீரில் கொடுக்கவுந் தீரும்.

## முலையை எழுப்பவும், ருது ஆகவும்

குருவையரிசிமாவும் முத்தெருக்கன்செவிவேர் பொடியும் ஒருபிடி எடுத்துக் களியாகக் கிண்டி நல்லெண்ணெய் கூட்டி ஏழு நாள் தின்ன முலை புறப்படும். ருது ஆகும்.

நெல்லிமுள்ளி உள்பருப்பு ஒன்றரைப் பலம் பீங்கானில் போட்டு தண்ணீர் விட்டு, மறுநாள் காலையில் அதில் சிறிது நற்சீரகத்தூள், எட்டு மிளகு பொடியும் கூட்டி அரைப்படி பசுவின் தயிரில் கலந்து கொடுக்கவும். இப்படியாக மூன்றுநாள் கொடுக்கவும். முலை எழும்பும்.

## ரச முரிய

கருஊமத்தையிலை இடித்துத் துவாலை இடவும்.

## இருமலுக்கும், நெஞ்சுவலிக்கும்

பேராமுட்டி விராகன் இரண்டு, கருஞ்சீரகம் விராகன் ஒன்று, திப்பிலி விராகன் ஒன்று, மிளகு விராகன் அரை,

இவைகளை அரைத்துப் பனைவெல்லம் சமன் கூட்டி பசுவின் நெய் படி கால் வீதம் விட்டு லேகியம் செய்து தின்ன எரிவு, இளைப்பு, இருமல் தீரும்.

## வில்வாதி லேகியம்

வில்லைவேர் பலம் இருபது, மூட்காய்வேளைவேர் பலம் இருபது, சங்கம்வேர் பலம் இருபது, சித்தாமுட்டிவேர் பலம் பத்து, சிற்றுமல்லி, பேராமல்லி, முள்ளிவேர், கண்டங்கத்திரி வேர், சாரணைவேர், முதியார்கூந்தல், விலாமிச்சவேர், சீந்திற் றண்டு, கொடிவேலிவேர், பொன்முசுட்டைவேர், சிறுதேக்கு, நன்னாரிவேர், இவை வகைக்குப் பலம் ஐந்து, இவைகளை எல்லாம் இடித்துப் பானையில் போட்டு எட்டு மரக்கால் தண்ணீர்விட்டு நாலொன்றாய்க் காய்ச்சி, லவங்கம் பலம் ஒன்று, நாகப்பூ, சீரகம், திரிகடுகு, செவ்வியம், சித்திரமூலம், கருஞ்சீரகம், இந்துப்பு, சாதிக்காய், கொத்தமல்லி, கோஷ்டம், தாளிச பத்திரி, அரத்தை, ஓமம், குரோசானி ஓமம், அதிவிடயம், இவை களின் பொடி வகைக்குப் பலம் அரை, சர்க்கரை, பலம் முப்பது, தேன் படி கால், அரப்பொடி பலம் இரண்டு, கிட்டம் பலம் ஒன்று, நெய் படி கால, முறைப்படி லேகியம் கிண்டி எடுத்துப் பதினைந்து நாள் தானியபுடம் வைத்தெடுத்து, புன்னைக்காயளவு காலை மாலை தின்ன, பாண்டு, காமாலை, சூதிகா வாயு, வாந்தி, பித்தம், மூலம், நாசிகாபீடம், நடுக்கல், மேகம் இருபத்தொன்று, காமாலை, காசம், இரத்தவாந்தி இவைகள் எல்லாந் தீரும். அயக்காந்த செந்தூரங்கூட்டி ஒருமண்டலம் சாப்பிடவும். இச்சா பத்தியம்.

## இரசச்செந்தூரம்

இரசம் விராகன் இரண்டு, கந்தகம் விராகன் ஒன்று, இருப்புச்சட்டி அடுப்பில் வைத்து சட்டி காய்ந்தபிறகு, அதில் கந்தகத்தைப் போட்டு ஆலம்விழுது கொண்டு கடைந்து, சிவந்த பக்குவத்தில் வரும்பொழுது ரசத்தைவிட்டு உரவாக்கி, பசரைச்சாறு ஆழாக்கு வைத்துக்கொண்டு, தெளித்துத் தெளித்து ஆலம் விழுதால் கடைந்து களிம்பாகும் மட்டும் கிண்டிப் பொடிசெய்து சிமிழில் வைத்துக்கொண்டு, காலை யில் ஒரு அரிசி முதல் இரண்டு அரிசி எடை செந்தூர மெடுத்து வில்வாதி லேகியத்துடன் சேர்த்துக்கொஞ்சம்

விளக்கெண்ணெயும் கூட்டித் தின்ன சகல நோயுந்தீரும். வீரிய மிகுதியுண்டாம். லேகியம் இல்லையானுல் செந்தூரம் ஒரு அரிசி அளவு விளக்கெண்ணெயில் குழைத்துக் கொடுக்கவும். இப்படி ஐந்து நாளைக்குக் கொடுக்க வீரிய மிகுதியுண்டாம். இச்சா பத்தியம்.

அல்லது, இச்செந்தூரத்துடன் சாதிக்காய் ஒன்று, அபின் விராகன் அரை, கொண்டு ஊமத்தங்காயில் அடைத்து சீலைமண் செய்து ஏழுவிராட்டியில் புடமிட்டு எடுத்து மெழுகுபோல் அரைத்து மிளகு அளவு உண்டைசெய்து காலையில் ஒரு மாத்திரையும், மாலையில் ஒரு முருங்கக்காயை விளக்கில் வெதுப்பித் தின்னவும். வீரிய மிகுதியுண்டாம்.

## விரியமற்றபேருக்கு

வெப்பாலைப்பட்டை பலம் பத்து, பால்விட்டு அவித்து உலர்த்தி, சூரணித்து, காலையில் அச்சூரணம் கால் ஆழாக்குப் பசுவின் பாலில் சாப்பிட்டு, மாலையில் தேனிலாவது, சர்க்கரையிலாவது, சாப்பிடவும். இப்படி எட்டுநாள் சாப்பிட விந்தூரி வீரிய மிகுதியுண்டாம்.

**வேறு :**—கற்றுழைவேர் கொண்டுவந்து காலையில் ஒரு கொட்டைப்பாக்களவு அரைத்து பசுவின் வெண்ணெயில் கொட்டைப்பாக்களவு இழைத்துக் கொடுக்கவும். இப்படி இரண்டு நேரமும் மூன்றுநாள் ஆறுபொழுது கொடுக்க பலம் மிகுந்து விந்தூரி விரிய மிகுதியுண்டாம். இவ்வகை மருந்துகளுக்குப் பசுவின்பால், சர்க்கரை, பழவகைகள், நெய், பருப்பு இவை கூட்டி வரவும்.

**வேறு :**—திப்பிலி சேர் ஒன்று, பசுவின் பால் சேர் நாலு. திப்பிலியை பசுவின் பாலில் போட்டுக் காய்ச்சிப் பால் சுண்டின பின், திப்பிலியை எடுத்து உலர்த்திச் சூரணித்து கற்கண்டு சேர்த்து இடித்து வைத்துக்கொண்டு காலையில் துட்டிடை சூரணமும், துட்டிடைக் கற்கண்டும், கலந்து வாயில் போட்டு பசுவின் பால் ஆழாக்குக் காய்ச்சி சுடச்சுட கொப்பளித்து முழுங்கவும். இப்படி இரண்டு நேரமும் பத்து நாள் சாப்பிட வீரிய மிகுதியுண்டாம்.

**வேறு :**—உள்ளி சேர் ஒன்று, ஆவின்பால் சேர் இரண்டில் சேர்த்துக் காய்ச்சி வெல்லம் சேர் ஒன்று, நெய் சேர் ஒன்று,

கூட விட்டுக் காய்ச்சி இரண்டு வேளையும் கொட்டைப்பாக்களவு இருபது நாள் சாப்பிட வீரியமுண்டாம். விந்தூரும். இம் மருந்து சாப்பிடும்போது பகலில் கிச்சடி, நெய், ஆட்டுக்கறி இவை கூட்டி சாப்பிட்டு, இரவில் மிளகு நீருண்டு, மருந்து சாப்பிடும் மட்டும் பெண்முகம் பாராமல், இருபது நாள் கழிந்த பின், தலைமுழுகி, மறுநாள் போகிக்க வெகு இன்பம் நல்கும்.

## நட்டுவாக்காலி நஞ்சிற்கு

கத்திரிக்காயை வகுந்து கும்பி நெருப்பில் வெதுப்பிக் கடி வாயில் கட்டவும். அவ்வாறு வெதுப்பியகாய் ஒன்றை அரைத்து எலுமிச்சங்காயளவு விழுங்க நட்டுவாக்காலி நஞ்சு தீரும்.

## நஞ்சு கடிகளுக்கு

இரசம் கழஞ்சி ஒன்று, துருசி கழஞ்சி அரை, கந்தகம், அரிதாரம், நாவி, இவை வகைக்குக் கழஞ்சி அரை, வெள்ளைபாடாணம், கெவுரி கழஞ்சி ஒன்று, சுத்திவாளம் கழஞ்சி பதினைந்து, சாரணைக்கிழங்கு, திரிபுரத்தான் இவைகளின் சாறு தனித் தனியே விட்டரைத்துக் குன்றியளவு உருட்டி நிழலிலுலற்றி வெற்றிலைச்சாறுகிலும், எறுக்கம்பாலாகிலும் இரண்டொன்றில் மத்தித்து நாவில் சிறிது தடவி கடிவாயிலுந் தேய்த்திட, செய்யான், பூரான், தேள், பாம்பு, விரியன், சுண்டெலி, இவற்றின் நஞ்சுகள் சிதறி முறையிட்டோடும். பச்சைப்பயறு போட்டு கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும்.

## விரேசன முறை

(1) வாளம் விராகன் எட்டு, சுக்கு விராகன் அரை, மிளகு விராகன் ஒன்று, வெங்காரம் விராகன் ஒன்று, கந்தகம் விராகன் ஒன்று, இவைகளைப் பொடித்து இளவெந்நீரில் ஒரு சாமமரைத்துத் தேத்தான்விரை அளவு உருட்டி நிழலிலுலர்த்தி ஒரு குளிகையைத் தண்ணீரில் கொள்ள பேதியாகும். மிளகு நீரும், சாதமும் சாப்பிடவும். வயிற்றுநோய், மகோதரம், மலக் கட்டு, பழைய வாதம், பழைய சுரங்கள் எல்லாந் தீரும்.

(2) முருங்கை இலைச்சாறு ஆழாக்கு, வெங்காயச்சாறு ஆழாக்கு, ஆமணக்கெண்ணெய் அரை அழாக்கு, இவ்வகை களைச்சேர்த்து வற்றக்காய்ச்சிக் குடிக்கப் பேதியாகும். இது சுகபேதி. சகலவாயுக்களையும் அறுத்து தீபன முண்டாக்கும்.

(3) கடுக்காய் ஏழு, களிப்பாக்கு ஏழு, கொட்டைப்பாக்கு ஏழு, கடுகுரோகணி விராகன் ஒன்று, சுக்கு விராகன் இரண்டு, கற்றாழைச்சோறு, எலுமிச்சங்காயளவு நறுக்கிப்போட்டு அரைப்படி தண்ணீர்விட்டு ஆழாக்காகக் காய்ச்சி வடித்து அரைத்துக் குழப்பி கொடுக்கப் பேதியாகும். இப்படி மூன்று நாளைக்கொரு முறையாக மூன்றுமுறை பேதிக்குச் சாப்பிட உஷ்ணம். மேகவாயு, வயிற்றுவலி முதலியனவுந் தீரும்.

(4) கற்றாழைச் சோறு எலுமிச்சங் காயளவு, பசுவின் பால் படி அரையில், கூட்டிக்காய்ச்சி இதைப் பிசைந்து குடிக்கப் பேதியாகும். இப்படி மூன்றுநாளைக்குக் கொடுக்க பசியுண் டாய், வாயு மேகங்கள் தீரும்.

(5) இரண்டு குத்து நெல்லியிலை, கடுக்காய் இருபது, சட்டியிலிட்டுக் கருக்கி ஒரு படி தண்ணீர் விட்டு ஆழாக்காகக் காய்ச்சிப் பிசைந்து வடித்து ஒரு பெரியகரண்டி விளக்கெண் ணெய் விட்டு மத்தித்துக் கொடுக்கப் பேதியாம். இப்படி மூன்று முறை கொடுக்க மேகங்கள், உஷ்ணங்கள் தீர்ந்து பித்தமயக்க முந்தீரும்.

(6) சீயக்காய் இரண்டு பாக்களவு அரைத்து எருமைத் தயிரில் குழப்பிக்கொடுக்கப் பேதியாம். இப்படி மூன்றுமுறை கொடுக்க பித்த குன்மம், வயிற்றுவலி இவை தீரும். இவ்வாறுகக் கூறிய பேதிகளுக்கெல்லாம் சோறும் நீரும் சாப்பிடவும்.

(7) சுத்திசெய்த நேர்வாளம் பருப்பு இருபது, எலுமிச்சம் இலை ஐந்து, இவைகளை வேகவைத்து அரைத்து சிற்றாமணக் கெண்ணெயில் குழைத்து நாபியில் தடவ பேதியாகும். அதிக மானல் மருந்தைக் கழுவி மிளகுநீரும் சாதமும் சாப்பிட பேதி நிற்கும்.

(8) சுத்திசெய்த நேர்வாளம் விராகன் ஆறு, லிங்கம் விராகன் இரண்டு இவற்றை கரிசிலாங்கண்ணிச்சாறு விட்டு ஒரு சாமமரைத்துப் பாகையிலைச்சாற்றில் ஒரு சாமமரைத்து, முருங்கையிலைச்சாற்றில் ஒரு சாமமரைத்து குன்றியளவு மாத்திரை திரட்டி உலர்த்தி ஒரு குளிகையைப் பசு வெண் ணெயிலாவது, தண்ணீரிலாவது கொடுக்கப் பேதியாம். வாயு, வயிற்றுவலி, உப்பிசம் இவை தீரும். இப்படி ஐந்துநாள் கொடுக்கவும்.

(9) சிவதைவேரைப்பாலில் ஊறவைத்து உலர்த்தி இடித்த சூரணம் பலம் பதினொன்று, நெல்லிப்பருப்பு, வாய்விளங்கம், ஏலம், லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, கோரைக்கிழங்கு, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், கடுகுரோகணி, இவை வகைக்குப் பலம் அரை, இவைகளைப் பொடித்துக் கலந்து ஒரு வேளைக்குச் சூரணம் பலம் கால், சர்க்கரை பலம் கால், கூட்டிச் சாப்பிட்டு வெந்நீர் குடிக்கப் பேதியாம். பேதி அதிகமாக வேணுமென்றால் சுக்குத்தூள் கூட்டி எலுமிச்சம்பழச்சாற்றில் இழைத்துக்கொடுக்க பித்த நீரைவாங்கி சரிப்பை உண்டாக்கும். அசீரணம், பித்த வாதங்களும் தீரும்.

(10) இரதம், வெங்காரம், கந்தகம், மிளகு, சுக்கு, சுத்தி பண்ணினவாளம் இவை சமமாக இஞ்சிச்சாறுவிட்டு நாலு சாம மரைத்துக் குன்றியளவு குளிகையுருட்டி நிழலிலுலர்த்தி ஒரு குளிகை தேங்காய்ப்பாலில் கொடுக்க சுகபேதியாகும். பேதி மிஞ்சினால் அலரிவேர் பாக்களவு அரைத்து வெந்நீரில் கொடுக்க பேதி நிற்கும். வயிற்றுவலி, குன்மவலி, வாயு இவை தீரும். இப்படிக்கு ஐந்துமுறை கொடுக்கவும். மிளகுநீரும் சோறும் கொடுக்கவும்.

(11) சதுரக்கள்ளிப்பால் ஒன்றரை விராகன் கொண்டு வந்து அதில் ஓமத்தை விட்டுப்பிசரி உலர்த்தி மிளகு, பத்து கூட்டி அரைத்து நோயின் வன்மையையும் வயதின் அளவையும் அறிந்து கொடுக்கவும். பேதியாகும். மாற்று: மோரும் சோறும் சாப்பிட நிற்கும். சகல வயிற்றுவலி, குன்மங்கள் போம். இப்படி மூன்று நாள் மூன்றுமுறை கொடுக்கலாம்.

(12) கோது நீக்கிய புளி பலம் ஒன்றை, கள்ளிப்பால் விராகன் ஒன்றரை விட்டுப் பிசைந்து வைத்துக் கொண்டு வேண்டியபோது ஒரு விராகன் இடை சாப்பிடப் பேதியாகும். பேதி மிகுதியானால், மாற்று: மோரும் சாதமும் சாப்பிட நிற்கும்.

(13) அழவணவிரையை அரைத்த விழுது எலுமிச்சங் காயளவு வெண்ணெய் அவ்வளவுகூட்டி இழைத்துக் கலயத்தில் போட்டு வெய்யலில் வைக்கத் தைலம் இறங்கும். இந்தத் தைலத்தை சிறு புட்டியில் அடைத்துக்கொண்டு விரேசனம் வேணுமென்றபேருக்கு விரற்கிடை எண்ணெயை உள்ளங்

காலில் தடவி வெய்யிலில் இருக்கப் பேதியாகும். போதுமானல் குளிர்ந்த தண்ணீரில் மருந்தைக் கழுவி கால் கை சுத்தம் செய்து மிளகு நீரும் சாதமும் சாப்பிடப் பேதி நிற்கும்.

## தைலவகை

நொச்சிச்சாறு, பனைமட்டைச்சாறு, ஊசிமல்லிகைச்சாறு, முருங்கையிலைச்சாறு, பச்சைமஞ்சள்சாறு, பேரறத்தைச்சாறு, மருள்கிழங்குச்சாறு, துளசிச்சாறு, தாழம்விழுதுச்சாறு, இஞ்சிச்சாறு, பாகலிலைச்சாறு, வெற்றிலைச்சாறு இவைகள் வகைக்கு படி கால், நல்லெண்ணெய் படி ஒன்றேகால், பசுவின் பால் படி ஒன்றேகால், இவைகளைச் சட்டியிலிட்டுச் சித்தரத்தை, வாய்விளங்கம், தேவதாரம், மஞ்சள், அதிமதுரம், செங்கழுநீர், கோஷ்டம், கொடிவேலி, சுக்கு, மிளகு, திப்பிலி, ஆம்பல், வசம்பு, பெருங்காயம், கடுகு இவை வகைக்குப்பலம் அரை பொடித்து முன் எண்ணெயில் போட்டுக் காய்ச்சிப் பதமாக இறுத்து வாய்கட்டித் தானியபுடத்தில் பதினைந்து நாள் வைத்து எடுத்த தைலத்தில் மூன்று காசிடை காதுக்குள் விட்டும் மேலுக்குப் பூசியும் தலை முழுகவும். இவ்வாறு மூன்று நாளைக்கு ஒரு முறை தலை முழுகவும். செவிடு, தலையில் பிறக்கும் நோய்கள், பீனிச வகை ஏழு, எல்லாம் தீரும். இச்சாபத்தியம். இலுப்பைக்கட்டி அரப்பிட்டு முழுகவும்.

**வேறு:**—நொச்சியிலை, எருக்கம்பழுப்பு, கையாந்தகரை, வாழைப்பூ, பருத்தியிலை, முருங்கையிலை, இஞ்சி பாகல் இவைகளின் சாறு வகைக்குப் படி அரை, நல்லெண்ணெய் படி ஒன்று கூட்டிச் சட்டியிலிட்டுக் காய்ச்சி தைலப்பக்குவத்திலிறக்கி இந்த தைலத்தில் இரண்டு துளி காதுக்கு விட்டு மேலுக்கும் துவளை யிட்டு மூன்றுநாளைக்கு ஒரு முறை முழுகி வர கன்னசூலை, ஒருபக்கத் தலைவலி, காதடைப்பு, சன்னி, தீருத தலை பாரம் எல்லாந் தீரும். இச்சாபத்தியம்.

**வேறு:**—வெள்ளாட்டுக் கோமயம் உழக்கு, சயிந்தவ லவணம் பலம் கால், இதை அரைத்துச் சூரியபுடத்தில் வைத்து அரைவாசி சுண்டின பின்பு காதில் இரண்டு துளி விட்டுப் பஞ்சடைக்கக் காதடைப்பு, காதில் சீழ்பாச்சல், புண்கள் எல் லாந் தீரும். இச்சாபத்தியம்.

## இரத்த மூலத்திற்கு

பசுவின் நெய் படி அரை, முருங்கவேர்பட்டைச்சாறு ஆழாக்கு, வெங்காயச்சாறு ஆழாக்கு இவற்றைச் சட்டியிலிட்டுக் காய்ச்சும்போது, சீரகத்தூள் பலம் ஒன்றரை, போட்டுப் பக்குவத்திலிறக்கி காலை மாலை வேளைக்கு ஒரு கரண்டி கொடுத்துவர இரத்தமூலந் தீரும். இச்சாபத்தியம்.

**வேறு :—**பசுவின் நெய் படி அரை, சட்டியிலிட்டு, மருள் கிழங்கு, காட்டுக்கருணைக்கிழங்கு, புளிக்கருணைக்கிழங்கு, பிரண்டைக்கிழங்கு, கொடிவேலிவேர் இவை வகைக்குப் பலம் கால், இவைகளைப் பஞ்சுபோல் நறுக்கி நெய்யுடன் போட்டுக் காய்ச்சிப் பதத்திலிறக்கி வடித்துக் காலை மாலை வேளைக்கு ஒரு கரண்டியாக பத்து நாள் கொடுக்க இரத்த மூலம், மேகத்தால் எழுந்த மூலம், அக்கினி மாந்தம், மூலவாயு எல்லாந் தீரும். இச்சாபத்தியம்.

## சகல மூலத்திற்கும்

**லேகியம் :—**வில்வவேர் பலம் பத்து, சித்தாமுட்டி பலம் இருபத்தைந்து, சிறுகாஞ்சிவேர் பலம் பதினைந்து, இவைகளைச் சூரணித்து ஆறு படி தண்ணீரில் கரைத்துக் காய்ச்சி ஒருபடியாக்கி, வடித்து அதனுடன் சர்க்கரை வீசை ஒன்று போட்டுக்கிண்டி, பாகுபதத்தில் திப்பிலி பலம் ஒன்று, தாளிசபத்திரி பலம் இரண்டு, கற்கடகசிங்கி பலம் ஒன்று, இவைகளின் சூரணத்தைத் தூவிக்கிண்டி எடுத்து பக்குஏடு கட்டி தானிய புடத்தில் முப்பது நாள் வைத்து எடுத்ததில் காலை மாலை பலம் அரை வீதம் பத்து நாள் கொடுக்க மூலம், வாந்தி, உப்பிசம், இளைப்பு, அக்கினிமந்தம், சுரங்கள் எல்லாந் தீரும்.

**வேறு :—**கருஞ்சீரகம், நற்சீரகம், கோஷ்டம், குடசப்பாலை, பாலைப்பட்டை, சதைகுப்பி, ஆனைத்திப்பிலி, லவங்கம், நாகப்பூ இவை வகைக்குப்பலம் இரண்டு, இவைகளைச் சூரணித்து, இதற்குச் சமன் சிவதைவேர்ச்சூரணங்கூட்டி சர்க்கரை பலம் இருபது, தேன் படி கால் எல்லாங்கூட்டி லேகியமாக்கி வைத்துக் கொண்டு காலை மாலை வேளைக்குப் பலம் ஒன்றரை வீதம் பத்து நாள் கொடுக்க மூலம், பித்தவாயு, அக்கினி மந்தம், அசீரண வாயு, சுரங்கள் முதலானவை தீரும். இச்சாபத்தியம்.

**வேறு :—**கருணைக்கிழங்கு பலம் ஐந்து, மேல்புறணி சீவி கல்லுரலிலிடித்து நல்ல வெல்லம் பலம் ஐந்து கூடப்போட்டிடித்து

லேகியம் போல் செய்து காலை மாலை வேளைக்கு நெல்லிக்காயளவு, பத்து நாள் கொள்ள மூலம் தீர்ந்து மூலச்சூடு தணியும்.

**வேறு :**—கருணைக்கிழங்கு, காட்டுக்கருணைக்கிழங்கு, புளிநரளைக்கிழங்கு, பிரண்டைவேர், மிளகரணைவேர்ப்பட்டை இவை வகைக்குப் பலம் ஒன்று கலவத்திலிட்டு, ஒரு சாம மரைத்து சுண்டைக்காயளவு மாத்திரை திரட்டி காலை மாலை வேளைக்கு ஒரு மாத்திரை தேனில் பத்து நாள் கொடுக்க முளை மூலம் முதலான சகல மூலமுந்தீரும்.

## வீரிய விருத்திக்கு

வெள்ளைக்குண்டுமணிப்பருப்பு வேண்டிய அளவு சட்டியிலிட்டு அதற்குச் சமன் வெள்ளாட்டுப் பால் விட்டுப்பிசரி சூரிய புடம் வைத்துக் காய்ந்த பிறகு மீண்டும் அவ்வளவே ஒவ்வொரு முறையும் வெள்ளாட்டுப்பாலிட்டு ஏழு முறை அவ்வாறு செய்து பருப்பை நன்றாய் உலற்றி ஒரு குடத்திலிட்டு குழித்தைலம் இறக்கி அத்தைலத்தில் உடல் வன்மை அறிந்து இரண்டு முதல் பத்து துளி வரை வெற்றிலையில் தடவி மூன்றுநாள் இரண்டு வேளை சாப்பிட்டு, மாமிசம், புளிப்பு இவை தடுக்க மகாவீரிய விருத்தி யுண்டாம்.

**குறிப்பு :**—சிலருக்கு பெருங்கழிச்சல் உண்டாகும். ஆதலின் மிக பயபக்தியோடு வழங்கல் வேண்டும்.

## விந்துகட்ட

ஊமத்தை விரையை வேண்டிய அளவு எடுத்து சிறு குடத்திலிட்டு குழித்தைலம் இறக்கி அதில் பாக்கைவெட்டிக் கூட்டி, பிசரி மூன்றுநாள் ஊறினபின் உலர்த்தி வைத்துக் கொண்டு, வேண்டியபோது சாயங்காலம் ஒரு பாக்கு அளவு வாயில் போட்டுக்கொண்டு அதற்குத் தக்கவாறு வெற்றிலை சுண்ணும்பு கொண்டு மென்று விழுங்கவும். ஒருசாமத்திற்குப் பிறகு பாலுஞ்சாதமும் சாப்பிட்டு போகிக்க விந்து விழாது போதுமானால் ஒரு எலுமிச்சம்பழம் சாப்பிட விந்து கழிந்து விழும்.

**வேறு :**—சாதிக்காய் ஒன்றைக்குடைந்து, அதனுள் அபின் விராகன் ஒன்று அடைத்து அதன்மேல் சாதிக்காய்த்தூளை யடைத்து, எள்ளிலைச்சாறு பிழிந்து அந்தச்சாற்றை சீலையில்

ஊட்டி சாதிக்காய் மேலே ஏழுமுறை சுற்றி அதன்மேல் களி மண்ணால் மூடி கும்பிநெருப்பில் புடம் போடவும். இப்படியாக எள்ளின்சாற்றை சீலையில் துவட்டி மீண்டும் இரண்டு புடம் போட்டு, பின்பு சீலைநீக்கி காயை எடுத்துக் கலவத்தி விட்டுத் தேன் விட்டரைத்துக் குன்றுமணி அளவு மாத்திரை திரட்டி வைத்து வேண்டியபோது சாயங்காலம் ஒரு மாத்திரை விழுங்கி சாமத்திற்குப் பிறகு பாலுஞ்சாதமும் சாப்பிட்டு போகிக்க விந்து விழாது. போதுமானால் பழம்புளியும், சுக்கும், பழச்சாறு விட்டரைத்து கொட்டைப்பாக்களவு விழுங்க விந்து கழிந்து விழும்.

வேறு:—

*சென்னாயுருவி, சிறுபீளை..............தேவதாரம்*
*தின்னற்கரியகற்பூரம், தேனிலிழைத்துமேல்பூசி*
*மின்னலிடையாள் தனைச்சேற வேண்டுமிதையந்தான்*
*[தருவாள்*
*மூன்னே அவள்தான்முடுவலெனப் பின்னே திரிவாள்*
*[கண்டீரே.*

*[(பொ-ள்.) செந்நாயுருவி வேர்பட்டையும், சிறுபீளை வேர்பட்டையும் பச்சைக்கற்பூரமும் ஓரளவாகக்கூட்டி தேன் விட்டு அரைத்துக் குழப்பி ஆண்குறியின் மீதுபூசிக் கூட இன்பம் விளைவிக்கும்.]*

வேறு:—சுத்திசெய்த கந்தகம் பலம் பத்து, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், வாய்விளங்கம், சுக்கு, திப்பிலி, ஏலம், லவங்கம், சந்தனம், கடலைப்பருப்பு, சிகடிக்கொட்டை, சித்திரமூலம் இவை வகைக்குப் பலம் ஒன்று, இவைகளைச் சூரணித்து இதற்குச் சரியிடை சர்க்கரைகூட்டிக் காலை மாலை வேளைக்கு விராகனிடை தேனிலாவது பசுவின் நெய்யிலாவது குழைத்துப் பத்துநாள் சாப்பிட ஆயுள் விருத்தியாகும். அதிக பலமுண்டாம். பகலில் நக்ஷத்திரம் தெரியும். அன்றியும் குஷ்டம் பதினெட்டு, கிராணி நாலு, மூலம் ஆறு, வாதம் எண்பது, நாள்பட்ட விஷபாகம், சுவாசம், விக்கல், தலைவலி, வயிற்றுவலி, மூத்திரக்கிரீச்சரம், பவுத்திரம், சிலந்தி, யோனிக்கவிசை முதலான வியாதிகளும் தீரும். பசுவின் பால், மோர், தயிர், நெய், எண்ணெய், வாழைப்பழம் எல்லாங்கூட்டி வரவும். வறுத்த உப்புக் கூட்டவும்.

## சகல நஞ்சுக்கும்

பேய்ப்பீர்க்கன்காய்ச்செடி காய்த்து இருக்கையில் அந்தக் காயில் சிறு துளைசெய்து அரை விராகனிடை ரசத்தைக்காய்க் குள் விட்டு துவாரத்தைக் களிமண்ணாலடைத்துச் செடி காய்ந்துபோகுமட்டும் பத்திரமாய் காத்து எடுத்து அந்தக் காயை உடைத்துக்கொட்டத் தூள்விழும். அந்தத் தூளைச் சிமிழில் அடைத்து வைத்துக்கொண்டு சகல விஷத்துக்கும் பணவிடை தூள், நாசியில் ஊத நஞ்சுகள் எல்லாம் முரிந்து போம்.

## தேள்விஷம் இறங்க

புத்துமேலிருக்கும் காஞ்சொரிவேரைக் குளிசமாடி வைத் துக்கொண்டு தேள் கடித்த இடத்தில் வைக்க நஞ்சு இறங்கும்.

**வேறு:**—கோழிஎச்சம், புளியங்கொட்டை அளவு வெற்றிலை யில் சுருட்டி மென்று விழுங்க, தேள் விஷம் இறங்கும்.

**வேறு:**—ஆகாசகருடன்கிழங்கு, கொட்டைப்பாக்களவு மென்று விழுங்க தேள் விஷம் நீங்கும்.

**வேறு:**—வெள்ளெருக்கன் பாலில் துணியை நனைத்து அதை மயில் இறகின்மேல் சுற்றி அதன்மேல் கோழிஎச்சம் தடவிக் காயவைத்து அதைக்கொளுத்திப் புகைகாட்ட தேள் விஷம் போம்.

## மழுவெடுக்க

பாவட்டம்வேருக்குக் கோழியை பலிகொடுத்து அந்த வேரை அரைத்து நெற்றியில் பொட்டிட்டு அந்தப் பொட்டைப் பார்த்துக்கொண்டே மழுவெடுக்கலாம்.

## வீரியம் பெருக

சடைக்கஞ்சா பலம் ஐந்து, முருங்கைப்பூ பலம் இருபது, முருங்கைப்பிசின் பலம் இருபது, இவைகளை ஒருபடி ஆவின் பாலிலிட்டுக் காயும்போது சாதிக்காய், சாதிப்பத்திரி, ஏலம், நீர்முள்ளிவிரை, இவை வகைக்குப்பலம் இரண்டு, சூரணித்துக் காயும் பாலில் தூவிக்கிண்டி பிசின்போல் வரும்போது இறக்கி, அதில் விராகனிடை லேகியம் சாப்பிட்டுச் சாமத்திற்குப்பிறகு பாலுஞ்சாதமும் சாப்பிட்டு நித்திரை செய்யவும். இப்படி பதினைந்து நாள் சாப்பிட்டு வர இரத்தபுஷ்டியாகும். மருந்து சாப்பிடும்போது ஸ்திரீ முகம் பாராமல் இருந்து பதினாறும்

நாள் தலைமுழுகி, பதினேழாம் நாள் போசிக்க அதிக பலன் செய்யும். இச்சாபத்தியம்.

## சங்கன்வேர்த் தைலம்

சங்கன்வேர் வீசை இரண்டு, இடித்துப் பன்னிரண்டு படி தண்ணீரில் போட்டுக்காய்ச்சி மூன்றுபடி தண்ணீரிருக்கையில் வடித்து நல்லெண்ணெய் படி ஒன்று, அதில் இட்டு அத்துடன் மிளகு பலம் ஒன்று, அரைத்துப்போட்டு மெழுகுபதத்தில் வடித்து நாலு நாளைக்கொருமுறை முழுகிவர, குஷ்டம், கிரந்தி, சூலைநோய், சொரி, சிரங்கு, கரப்பான், வண்டுகடி, க்ஷயம், இருமல் எல்லாந் தீரும். இச்சாபத்தியம்.

## வெட்டிவேர்த் தைலம்

வெட்டிவேர் பலம் பத்து, ஆறு படி தண்ணீர் விட்டுக் காய்ச்சி, ஒரு படியாக வடித்து, நல்லெண்ணெய் படி அரை கூட்டி அதில், அதிமதுரம் பலம் ஒன்று, மேற்படி கிஷாயம் விட்டரைத்துக் கரைத்துக்காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்து ஐந்து நாளைக்கொருமுறை முழுகிவர மண்டைச்சூலை, குஷ்டம், நீர்க்கோர்வை, மயக்கம், கண்புகைச்சல், காதுமந்தம், இரைப்பு, ஈளை, உப்பிசம், உடல்கடுப்பு, இவைகள் தீரும். இச்சாபத்தியம்.

## வில்வத்தைலம்

வில்வவேர் பலம் பத்து, ஆறுபடி தண்ணீரில் போட்டுக் காய்ச்சி ஒருபடியாக வடித்து நல்லெண்ணெய் படி அரை விட்டு, அதில் சந்தனம் பலம் ஒன்று அரைத்துப்போட்டு மெழுகுபதத்தில் வடித்து நாலு நாளைக்கொருமுறை முழுகி வர மேகம், பித்தம், சரீரயெரிவு, காந்தல் எல்லாந் தீரும். கண்ணொளி உண்டாம். இச்சாபத்தியம்.

## கரிசிலாங்கண்ணித்தைலம்

கரிசிலாங்கண்ணிச்சாறு, கற்றாழைச்சாறு, நெல்லிக்காய்ச் சாறு, நல்லெண்ணெய் இவைகள் வகைக்கு படி ஒன்று, சாதிக்காய் பலம் ஒன்று, அரைத்துக்கூட்டிக் காய்ச்சி மெழுகு பதமானபோது வடித்து, ஐந்து நாளைக்கொருமுறை முழுகி வர, கண்ணில் தோன்றும் தொண்ணூற்றாறு நோய்களும், தலைவலி, செவிநோய், பித்தம், பீனசங்கள் எல்லாந் தீரும்,

## பொன்னுங்கண்ணி கிருதம்

பொன்னுங்கண்ணிவேர், வெட்டிவேர், விலாமிச்சவேர், ஓரிலைத்தாமரைவேர், சிறுகீரைவேர், இவை வகைக்குப் பலம் ஒன்று எல்லாம் பசுவின் பால் விட்டரைத்து ஒருபடி பசுவின் நெய்யில் கரைத்து, சாதிக்காய் பலம் கால், அதிமதுரம் பலம் கால், மாசிக்காய் பலம் கால், இவைகளை அரைத்துப் போட்டுக் காய்ச்சிப் பதமானபோது இறக்கி, காலை மாலை கரண்டி நெய், பத்துநாள் சாப்பிட, மேகம், கண்நோய்கள், உடல்வேட்கை, சிரங்கு, வறட்சி, அக்கரம், இவைகள் தீரும். இச்சாபத்தியம்,

## தூதுவளைகிருதம்

தூதுவளை, துளசி, கண்டங்கத்திரி, ஆடாதொடை, விஷ்ணுக்கிராந்தி, பிரமியிலை இவை வகைக்குப் பலம் பத்து இடித்துப் பன்னிரண்டு படி தண்ணீரில் போட்டு ஒன்றரை படியாக வடித்து, நல்லெண்ணெய் படி ஒன்று, நெய் படி ஒன்று, திப்பிலி பலம் ஒன்று, சிற்றரத்தை பலம் ஒன்று, இவைகளை வறுத்து மெல்லியதாய் அரைத்து எல்லாமொன்ருய்ச் சேர்த்து, காய்ச்சி மெழுகுபதமாக இறக்கி, அந்தி சந்தி வேளைக்கொரு கரண்டி கொடுத்துவர, ஈளை, இருமல், உட்சுரம், காய்ச்சல், வாயு, கபக்கட்டு, க்ஷயநோய் எல்லாந் தீரும். இந்த கிருதம் சாப்பிடும்போது, திரிகடுகு, நெல்பொரி, இவற்றைப் பொடித்து வஸ்திர காயம்பண்ணி, வைத்துக் கால் பலம் சூரணம் தேனில் குழைத்துச் சாப்பிடவும். இது சாந்தி என்றறியவும்.

## அக்கினிகுமரன் சூரணம்

குப்பைமேனி சமூலம் பலம் பத்து, சீரகம் பலம் ஐந்து, இவைகளைப் பொடித்து, அதில் பலம் கால், காலை மாலை நாற்பது நாள் சாப்பிட, வாயு, மந்தம், உஷ்ணம், சில விஷங்கள் எல்லாந் தீரும். பசி உண்டாம். இச்சாபத்தியம்.

## சுராங்குச மாத்திரை

இரதம், கந்தகம், அரிதாரம், வெண்காரம், நெல்லிமுள்ளி, கடுக்காய், தான்றிக்காய், காந்தம், வேர்க்கொம்பு, மிளகு, திப்பிலி, இவை வகைக்கு விராகன் ஒன்று, சுத்திசெய்த வாளம் விராகன் பத்து, இவைகளை இஞ்சிச்சாற்றில் ஒரு நாளைக்கொரு சாமமாக நாலு நாள் அரைத்து, மிளகு பிரமாணமாக மாத்திரை

திரட்டி நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு,சுரங்களுக்கெல்லாம், இஞ்சி, ஓமம், சீரகம், இவைகளில் ஏதேனும் ஒன்றில் ஒரு மாத்திரை கொடுக்கக் குளிர்சுரம் முதலிய சுரங்கள் எல்லாம் தீரும்.

## சுரங்களுக்கு

இரதம், லிங்கம், கெவுரிபாடாணம், தொட்டிப்பாடாணம், துத்தம், துருசு இவை வகைக்கு விராகன் ஒன்று, கந்தகம் விராகன் மூன்று, இவைகளைச் சுத்திசெய்து கையாந்தகரைச் சாற்றால் இரண்டு சாமமரைத்துப் பயறளவு மாத்திரையாகத் திரட்டி நிழலிலுலர்த்தி ஒரு மாத்திரையை முலைப்பாலிலாவது, சுக்குக்கிஷாயத்திலாவது உரைத்துக் கொடுக்க சுரம் விடும். புளி, புகையிலை தள்ளவும். ஒரு மாதம் மட்டும் நல்லெண்ணெய் ஆகாது. விளக்கெண்ணெயில் முழுகவும். கைகண்டது.

## சன்னிக்கு

கெவுரிபாடாணம், லிங்கம், துருசு, இவை வகைக்கு விராகன் ஒன்று, முலைப்பாலில் ஒரு சாமமரைத்து பச்சைப்பயறளவு மாத்திரை திரட்டி நிழலிலுலர்த்தித் தேனிலாவது, முலைப் பாலிலாவது ஒரு மாத்திரை கொடுத்துவர சன்னி, சுரங்கள் தீரும். சரீரத்தில் வீக்கங்கண்டால் சிறுகீரையாவது பருத்தி வேராவது, அவித்த தண்ணீரைக் கொடுத்துவர வீக்கம் வற்றும். வாய்வெந்து புண்ணானால் மிளகு தண்ணீர் விட்டுக் காய்ச்சிக் கொடுக்க குணமாம்,

## ஆனந்தவயிரவன் மாத்திரை

நாவி, லிங்கம், கந்தகம், வெங்காரம், மிளகு, இவைகள் சமமாகப் பழச்சாறு விட்டொரு சாமமரைத்துக் குன்றி அளவு மாத்திரை திரட்டி நிழலிலுலர்த்தி ஒரு மாத்திரை பித்த சுரத்திற்கு சீரகக்கஷாயத்திலும், வாதசுரத்திற்கு சுக்குக் கஷாயத்திலும் சிலேட்டுமசுரத்திற்கு கடுகுரோகணிக் கஷாயத்திலும் இடத்தீரும். புளி தள்ளவும்.

## சுராங்குச மாத்திரை

மனோசிலை, அரிதாரம், இரதம், கந்தகம், இவைகள் சமமாக சிறிது பாகல்சாறு விட்டு ஒரு சாமமரைத்து பயறளவு மாத்திரை திரட்டி நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு சுரங்களுக்

கெல்லாம் தேனில் ஒரு மாத்திரை கொடுத்து வரவும். தக்க அனுபானங்களில் கொடுக்க எல்லா சுரங்களும் தீரும்.

## கட்டுவாதி மாத்திரை

அவின், அதிவிடையம், கோரோசனை, ஓமம், சாதிக்காய், லவங்கம், இலவம்பிசின், இவைகள் சமமாகக்கூட்டி, குப்பை மேனிச்சாற்றில் ஒரு சாமமரைத்து குன்றி அளவு மாத்திரை திரட்டி நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு வட்டத்திருப்பிக் கஷாயத்தில் இரண்டு மாத்திரை கொடுத்துவர கழிச்சல் என்னும் அதிசாரங்கள் தீரும். வாழைக்கச்சல் அரைக்கீரை, அத்திப்பிஞ்சு இவை கூட்டவும்.

## சுராங்குச மாத்திரை

சுக்கு, மிளகு, திப்பிலி, கிரும்பு, கருஞ்சீரகம், சாதிக்காய், ஏலம், சாதிப்பத்திரி, வாளம், லிங்கம் இவை வகைக்கு விராகன் ஒன்று, இவைகளைப் பழச்சாறு விட்டு ஒரு சாமமரைத்துப் பயறளவு மாத்திரை திரட்டி நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு இரண்டு மாத்திரை, சுக்கு, கடுகுரோகணி கூட்டிக் கஷாயமிட்டுக் கொடுத்துவர சன்னி, சுரங்கள் தீரும். பிள்ளைகளுக்கொரு மாத்திரை, சீரகம், கொத்தமல்லி, தானிக்காய் கூட்டிச் செய்த கஷாயத்திலிட்டுவர பிள்ளை கணை தீரும். ஓமப்பாலில் ஒரு மாத்திரை கொடுக்க மாந்தசுரங்கள் தீரும். புளி தள்ளவும்.

## பாலசஞ்சீவி மாத்திரை

காந்தம், சீனக்காரம், துருசு, வெங்காரம், கந்தகம், இரதம், துத்தம் இவை வகைக்கு விராகன் இரண்டு, இவைகளை கலவத்திலிட்டு நெழுக அரைத்து, அதில் பாதித்தூளை ஒரு சிறு சட்டியிலிட்டுப் பரப்பி, அதன்மேல் இரண்டு விராகனிடை செம்புப்பொடி பரப்பி, அதன்மேல் பாதித்தூளைப் பரப்பி கையான்தகரைச்சாறு உழக்கு, பழச்சாறு ஆழாக்கு, மருந்தின் மேல் விட்டு மேலோடுமூடி ஏடுகட்டி நெல்லுப்பானையில் ஏழு நாள் புதைத்துப் பின்பு எடுக்க நீலமாயிருக்கும். அதை சூரிய புடத்தில் வைக்க இறுகும். அதைக் கலவத்திலிட்டு வாழைப் பூச்சாற்றில் இரண்டு சாமமரைத்துப் பணவிடைப் பிரமாணம் மாத்திரை திரட்டி நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு தேனில் ஒரு மாத்திரை கொடுத்துவர அட்டகுன்மம் தீரும். சுக்குத்

தூளிலொரு மாத்திரை கொடுத்துவர மூலவியாதிகள் தீரும். நெய்யில் ஒரு மாத்திரை கொடுத்துவர சோகை, பாண்டு, க்ஷய ரோகம் முதலானவை தீரும். இந்த மாத்திரை இரண்டு நேரமும் இருபது நாள் கொடுத்து வரவும். இச்சாபத்தியம். வெந்நீரும் பொரிமாவும் கொடுக்கவும்.

## அதிசாரக்கிராணிக்கு

சாதிக்காய், அதிவிடையம், கிராம்பு, சாதிப்பத்திரி, தாளிசப் பத்திரி, இலவங்கப்பத்திரி. இலவங்கப்பட்டை, இவைகள் சம மாகக்கொண்டு பொன்னிறமாய் வறுத்துப் பொடிசெய்து பெரிய மாதுளம்பழம் கொண்டு வந்து உள்விரை எடுத்து இந்தப் பொடியை அதனுள் அடைத்து ஓட்டின்மேல் மூடி சீலைமண்செய்து கொஞ்சம் புடம்போட்டு மேல்தோல் கருகும்போது எடுத்துக் கஞ்சாயிலைச்சாறு விட்டரைத்துத் தாதுவிளங்காய் பிரமாணம் மாத்திரை திரட்டி நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு ஒரு மாத்திரையைப் பசுவின் தயிரிலாவது, வெந்தயக்குடிநீரிலாவது கொடுக்கவும். அதிசாரம், கிராணி தீரும். இச்சாபத்தியம். உணவு: வெந்நீரும், பொரிமாவும்.

## மகாகோடாசுழி மாத்திரை

இருவி, நாவி, கந்தகம், இரதம், பொன்னரிதாரம், கடுக்காய்த்தோல், நெல்லிமுள்ளி, தானிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி, வெங்காரம், இவைகள் வகைக்கு விராகன் ஒன்று, வாளம் சுத்தியானது பலம் ஒன்றரை, ஆகக்கூட்டி கலவத்தி லிட்டு கரிசலாங்கண்ணிச்சாறு விட்டு ஒரு நாள் அரைத்து, பழச்சாறு விட்டொருநாள் அரைத்து உளுந்துப் பிரமாணமாய் மாத்திரை திரட்டி நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு, ஆறு மாத்திரை விளக்கெண்ணெயில் கொடுக்க சுகபேதியாம். பசு வின் நெய்யில்கொடுக்கக் கிராணி தீரும். பாம்பு கடிவாயி லுரைத்துத் தடவிக்கட்ட விடந்தீரும். இஞ்சிச்சாற்றிலுரைத் துக்கொட்டின வாயில் தடவ தேள் விடம் இறங்கும். நெய்யில் கொடுக்கப் பொருமல் தீரும். புங்கஞ்சாற்றில் கொடுக்கக் கை கால் ஓச்சல் தீரும். நொச்சிச்சாற்றிலுரைத்து உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் பூசி கண்ணிலும் கலிக்கமிட வீக்கந்தீரும். நெல்லிக்காய்ச்சாற்றில் கொடுக்க சுரந்தீரும். நொச்சிச்சாற்றில் கொடுக்கப் பிரமேகந்தீரும். வெள்ளாட்டுப்பாலில் கொடுக்க

இரத்தப்பிரமேகந்தீரும். வெல்லத்தில் கொடுக்க செவ்வட்டைக் கடி தீரும். தகரையிலைச்சாற்றில் கொடுக்கச் செரியாக்குணந் தீரும். கரந்தையிலைச்சாற்றில் கொடுக்கத் தீபனமுண்டாகும். சுவாசந் தீரும். புளியங்கொட்டை ஊறின தண்ணீரில் கொடுக்க உஷ்ணந்தீரும். திரிபலைக்கஷாயத்தில் கொடுக்க மேலெரிவு தீரும். பாக்கு வெற்றிலையுடன் கொள்ள முகவசீகரமுண்டாம். தேனில் கொடுக்க வயிறு உப்பிசம் தீரும், நீரிறங்கும். கொட்டைப்பாசிச்சாற்றில் கொடுக்க செம்பட்டைமயிர் கறுக்கும். முருங்கைப்பட்டைச்சாற்றிலும், நெய்யிலும் கலந்து கொடுக்கச் சூலைக்கட்டு தீரும். கழுநீரில் கொடுக்க மாந்தம் தீரும். சாதிக்காய்த்தூளில் கொடுக்க வாயு தீரும். பிரமியிலைச் சாற்றில் கொடுக்க புத்தி தெளிவடையும்.

**வைத்தியக் களஞ்சியம் முற்றும்**